சுன்னாகம் குடி
தண்ணீர் விவகாரம்
நிபுணர் குழுவின்
அறிக்கை
வெளியிடுவதில்
இழுத்தடிப்பு



பக். 04

# உதயன்

30°c – 25°c
தெளிவான
வானம்

சுடர் 30 | கதிர் 324 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 29, வெள்ளிக்கிழமை 16.10.2015

## கைதிகளை உடன் விடுதலை செய் யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 16
அனைத்துச் சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினரின் ஏற்பாட்டில் யாழ். பஸ் நிலையம் முன்பாக நேற்றுப் புதன்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது பக்.28

## தமிழ் கைதிகளுக்கு ஆதரவாக யாழில் இன்று உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, அவர்கள் முன்னெடுத்து வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்.நகரில் அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்குப் பல தரப்பட்டவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். அத்துடன், தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக அனைத்து மக்களையும் அணி திரளுமாறு தமது உறவினர்கள் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளனர்.
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.நகரில் முனீஸ்வரன் கோயில் பகுதியில் இன்று காலை 7 மணிக்கு அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
மேலும், இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன தமது ஆத பக்.28

# அரசின் கால அவகாசத்தை ஏற்க மறுத்தனர் கைதிகள்

### பொதுமன்னிப்பு இன்றேல் உணவு தவிர்ப்பை கைவிடப்போவதில்லை எனவும் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16
இந்த வருட இறுதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் வழங்கிய வாக்குறுதியை ஏற்கமறுத்த தமிழ் அரசியல் கைதிகள் நான்காவது நாளாகவும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். இந்த நாட்டின் தந்தையாகிய ஜனாதிபதி தமது விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டுப் பொதுமன்னிப்பில் தம்மை விடுதலை செய்யும் வரையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.
மிகவும் சோர்வுடன் – வாடி வதங்கிய நிலையிலும், தமது போராட்டத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளதாக அவர்களை நேற்றுச் சந்தித்துத் திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.
பொதுமன்னிப்பில் தம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உணவுதவிர்ப்புப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் ஐந்தாவது நாளாகவும் பக்.28

## கிராம அலுவலர்களுக்கும் பொலிஸ் கடமை அதிகாரம்

### குற்றங்களைக் கட்டுப்படுத்த யாழ்.மேல் நீதிமன்றம் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஒக். 16
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம் பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குக் கிராம சேவையாளர்களைப் பொலிஸ் கடமை புரியும் அதிகாரிகளாக நியமனம் செய்யுமாறு அந்த மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு யாழ். மேல் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. பக்.28

## ராணுவம் காணி அபகரிப்பதாக கூறப்படுவதை ஏற்கமுடியாது

### மீள்குடியேற்ற அமைச்சர் சொல்கிறார்



வலி. வடக்கு, ஒக். 16
தனியார் காணிகளை கடற்படையினர், இராணுவத்தினர் எடுக்க முற்பட்டால் அது குறித்து காணிகளின் உரிமையாளர்கள் எழுத்து மூலம் தந்தால் தான் உரியவர்களுடன் கதைத்து நடவடிக்கை எடுப்பேன் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.
வாயால் கூறுவதையும் மற்றவர்கள் பக்.28

## சீன இராணுவ உயர்மட்டக் குழு கொழும்புக்கு வருகை

கொழும்பு, ஒக்.16
சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. இலங்கை பக்.28

# நேற்றும் 9 கைதிகள் வைத்தியசாலையில்

### இருவரின் உடல் நிலை மோசம்

யாழ்ப்பாணம், ஒக். 16
உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் நேற்று மாத்திரம் 9 பேர் மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மிக மோசமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கட் கிழமை முதல் முன்னெடுத்து வருகின்றனர். கடந்த செவ்வாய்க் கிழமை, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளில் 5 பேர் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டனர். மகசின் சிறைச்சாலையில் போராட்டத்தில் பக்.28

# ஜனாதிபதியுடன் பேச ஏற்பாடு செய்யுங்கள்

### தமிழ்க் கூட்டமைப்பினரிடம் அரசியல் கைதிகள் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 16
ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினிடம் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா மற்றும் ஈ.சரவணபவன் ஆகியோரிடமே இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளனர்.
பொதுமன்னிப்பில் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் நாடு முழுவதிலும் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அநுராதபுரம் சிறைச்சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளையே, நேற்று மாலை கூட்டமைப்பினர் சென்று சந்தித்துள்ளனர்.
ஜனாதிபதிக்கு மாத்திரமே மன்னிப்பு வழங்கும் அதிகாரம் இருக்கின்றது. எனவே எமது விடயத்தில் ஜனாதிபதியால் மாத்திரமே தீர்மானம் மேற்கொள்ள முடியும். ஜனாதிபதி மைத்திரிபால பக்.28

## குற்றம் செய்யாத என்னை கைது செய்யவே முடியாது

### சொல்கிறார் கருணா



கொழும்பு, ஒக். 16
எனது பெயரைப் பயன்படுத்திச் சிலர் குற்றங்களைச் செய்துள்ளனர். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அதனால் என்னை யாரும் கைது செய்ய முடியாது என்று, முன்னாள் பிரதி அமைச்சரும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து பக்.28

## மகிந்த தரப்பின் எதிர்ப்பால் தடைப்பட்டது விசாரணை

### இன்று வரை ஒத்திவைப்பு



கொழும்பு, ஒக்.16
பெரியளவிலான நிதி மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், முன்னைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தரப்புச் சட்டத்தரணிகள் தெரிவித்த எதிர்ப்பினால் அவரிடம் நேற்று நடத்தப்படவிருந்த விசாரணைகள் இன்று வரை பிற்போடப்பட்டுள்ளன.
சுயாதீனத் தொலைக்காட்சியில், ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை விளம்பரங்களை ஒளிபரப்பி 200 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத் பக்.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக ஒன்றிணைவோம்

## இன்றைய போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஒக். 16

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி அவர்களது உறவினர்களால் யாழ்.முனியப்பர் கோயில் முன்பாக இன்று நடத்தப்படும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. அந்தப் போராட்டத்தில் அனைவரையும் பங்குகொண்டு போராட்டத்தக்குப் பலம் சேர்க்குமாறும் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி புரியும் இந்த அரசு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக கவனம் செலுத்தாமல் இருப்பதானது, இந்த அரசு தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முனைகின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்த அரசியல் கைதிகளில் சிலர் நீண்டகாலம் முடிவில்லாத விசாரணைகளை எதிர்கொண்டும், இன்னும் சிலர் எவ்வித வழக்கு விசாரணை எதுவுமின்றியும் மனிதாபிமானமற்ற சிறை வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். இவர்களது விடுதலை தொடர்பாக பலரும் பல சந்தர்ப்பங்களிலும் வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றி வந்த நிலையில் விரக்தியுற்ற இவர்கள் இன்று பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

இலங்கை வரலாற்றிலேயே பல ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு விதமான சந்தர்ப்பங்களில் பொதுமன்னிப் பளிக்கப்பட்டு, சமூக வாழ்க்கையில் இணைந்து வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே இவர்களுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்குவது என்பது புதிய விடயமல்ல. மனமிருந்தால் மட்டும் போதுமானது.

எனவே இந்த சகோதரர்களுடைய சாத்வீகப் போராட்டத்தை பலமடையச் செய்து வெற்றிபெற வைக்கவேண்டியது நாட்டு மக்கள் அனைவரதும் கடமையாகும். இந்த வகையில் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் இந்த அரசியல் கைதிகளின் உறவுகளால் யாழ்.முனியப்பர் கோவில் முன்பாக இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவிப்பதுடன், உணர்வாளர்களை பங்குகொண்டு பலம் சேர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

(ற-4)



சிறுவர் தொழிலாளர்கள் உருவாவதை தடுக்கும் வகையிலும், அதனை இல்லாதொழிக்கும் நோக்கிலும் நேற்று யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலம் யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள தொழில் திணைக்கள அலுவலகத்தில் ஆரம்பித்து வணிகர் கழக கட்டடத்தில் நிறைவடைந்தது. ஊர்வலத்தைத் தொடர்ந்து சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வும், ஒன்றுகூடல் வைபவமும் யாழ். மானிப்பாய் வீதியில் நடைபெற்றன. (ற)

# யாழ். இராமநாமன் நுண்கலைப் பீட துறைத் தலைவர் இடைநிறுத்தம்

## மாணவிகளின் பாலியல் சார் குற்றச்சாட்டுகளை அடுத்து

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் துறைத் தலைவர் ஒருவர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

பாலியல் சார் குற்றச்சாட்டுத் தொடர்பில் கடந்த வெள்ளிக் கிழமை கட்டாய விடுமுறையில் அனுப்பட்டிருந்த அவரை நேற்று முன்தினம் கூடிய பேரவை சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணையும் நடத்தப்படவுள்ளது.

குறித்த துறைத்தலைவருக்கு எதிராக நிர்வாகத்திடம் பல்கலைக் கழக மாணவிகளால் பாலியல் குற்றச்சாட்டுக்கள் முறையிடப்பட்டிருந்தன. அதையடுத்து முன்னொரு தடவை குறித்த துறைத் தலைவர் நிர்வாகத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார்.

எனினும் அவர் மீதான மாணவிகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தமையால் இந்த விடயத்தை பேரவை கவனத்தில் எடுத்துள்ளது. குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக அவரைச் சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளது.

அதேவேளை, முன்னரும் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரும் இதேபோன்று பாலியல் முறைகேடு காரணமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.

(ற-4,106)

# பொருளாதார வளர்ச்சி குறித்து ஆய்வு வேண்டும்

## யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

எமது பகுதியில் சரியான பொருளாதார வளர்ச்சி இல்லை. அதனை எப்படி முன்னேற்ற வேண்டும் என்பது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். – இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாடு அடுத்த வருடம் ஓகஸ்டில் 47 லட்சம் ரூபா செலவில் நடைபெறவுள்ளது. அது பற்றிய செய்தியாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆய்வு என்பது மிகமுக்கியமானது. அதற்காகவே இம்முறை மாணவர்களிடமிருந்தும் ஆய்வுகளைக் கோரியுள்ளோம். சூழலியல் மூல வளங்களிலிருந்து கூடுதலான பயனைப் பெறுவது எப்படி, தகவல் பெறுவது, தொற்று நோய்களை எப்படிக் குறைப்பது, தொற்றா நோய்களை எப்படிக் குறைப்பது என்பது பற்றிய ஆய்வுகள் முக்கியம். தற்போதைய தொழில்நுட்பங்கள், தாவரங்களிலிருந்து எப்படிப் பயனைப் பெறுவது உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் ஆராயவேண்டும். சூழலியல் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பது உள்ளிட்ட பல விடயங்கள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# மருத்துவ பணிப்பாளர்கள் கடமைகளை பொறுப்பேற்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினது பணிப்பாளர்கள் நேற்றுமுன்தினம் தத்தமது அலுவலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்தவர் சத்தியமூர்த்தி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலையில் பதில் பணிப்பாளராக இருந்த மருத்துவர் நந்தகுமாரன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பதில் பணிப்பாளராக இருந்த இ.தேவநேசன் யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர்களில் ஒருவராகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலையில் பதில் பணிப்பாளர்களில் ஒருவராக ஏற்கனவே மருத்துவர் எஸ். ஶ்ரீபவானந்தராஜா பணியில் உள்ளார்.

(ற-4)

# அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 16

தற்போது இல. 187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் இயங்கி வருகின்ற வடமாகாண இறைவரித் திணைக்களம் எதிர்வரும் திங்கட்கிழமை இல. 15, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்று மாகாண இறைவரி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ற-ரி2)



கிளிநொச்சி திருநகர் பகுதியில் காணி ஒன்றில் உள்ள வேப்ப மரத்தில் இருந்து நேற்று பால் வடிந்துள்ளது. அதை பெருமளவான மக்கள் சென்று பார்ப்பதுடன் மரத்தில் இருந்து வடியும் பாலை ஏந்திச் செல்கின்றனர். (ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா பாணியில் பெண் கடத்தல்: 8 மணி நேரத்தில் மீட்டது பொலிஸ்

## வடமராட்சியில் பரபரப்புச் சம்பவம்; சட்டத்தரணி ஒருவருக்கும் தொடர்பு

வடமராட்சி, ஒக். 16
வடமராட்சி கம்பர்மலைப் பகுதியில் இளம் பெண்ணொருவர் சினிமாப் பாணியில் கடத்திச் செல்லப்பட்டு எட்டு மணி நேரத்தினுள், பொலிஸாரின் அதிரடி முயற்சியால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
வடமராட்சி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ள இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று வடமராட்சிப் பகுதிக்குப்பொறுப்பானஉதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்துள்ளார்.

**சம்பவம்**
வடமராட்சி வல்வெட்டித்துறை கம்பர் மலைப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றவழக்குக் குச் சென்றார். வழக்கு முடிவடைந்ததும், குறித்த பெண்ணும் தாயாரும் வீடு நோக்கிப் புறப்பட்டனர். நேரம் பி.ப. 4.30 மணியளவில், கம்பர்மலை சந்தியை அவர்கள் நெருங்கினர். இதன்போது அங்கு வானொன்று அவர்களை நெருங்கியது.
அந்த வானில் இருந்தவர்கள் கம்பர் மலைக்குச் செல்லும் பாதையை குறித்த பெண்ணிடம் கேட்டுள்ளனர். அதற்கு அவர் பதில் சொன்னதும் புறப்பட்டுச் சென்றது வான். பின்னர் உடனடியாகவே அந்த வான் திரும்பி வந்து குறித்த பெண் அருகில் நின்றது. அதிலிருந்த 4 பேர் பெண்ணின் தாயாரைத் தள்ளி வீழ்த்திவிட்டு குறித்த பெண்ணை வலுக் கட்டாயமாக வானில் ஏற்றிக் கடத்தினர்.

**கட்டளை வழங்கியவர் கணவர்**
கடத்திய பெண்ணுடன் வான் பறந்தது. புன்னாலைக் கட்டுவன் ஆலயம் ஒன்றுக்கு அருகில் வான் நிறுத்தப்பட்டது. அப்போது கடத்தல்காரர்களில் ஒருவர் கைத்தொலைபேசியில் ஒருவருக்குத் தகவல் வழங்கியுள்ளார். சிறிது நேரத்தில் குறித்த பெண்ணின் கணவர் முச்சக்கர வண்டியில் அங்கு வந்து சேர்ந்துள்ளார்.
அவர் கடத்தல்காரர்களிடம் குறித்த பெண்ணை இடமாற்ற வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளார். அங்கிருந்து புத்தூரில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு குறித்த பெண் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் என்று விசாரணையின் போது கடத்தப்பட்ட பெண் வாக்குமூலத்தில் தெரிவித்தார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

**பொலிஸ் அதிரடி**
குறித்த பெண் கடத்தப்பட்டார் என்று நேற்று முன்தினம் பிற்பகல் எமக்கு முறைப்பாடு கிடைத்தது. பெண் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் தொடர்பில் உதவி பொலிஸ்அத்தியட்சகர் ஜவ்பருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. உடனடியாகவே பொலிஸார் உசாராகினர். உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு அதிகாலை குறித்த சட்டத்தரணியின் வீட்டைச் சுற்றி வளைத்தது.
இந்தநடவடிக்கைக்குபிரதிபொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரோ மற்றும் கங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க ஆகியோரின் ஆலோசனையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
இதன் பின்னர் வீட்டினுள் நுழைந்த பொலிஸார் சோதனையிட்டனர். இதன் போது கடத்தப்பட்ட பெண் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் அதிரடியாக மீட்டுள்ளனர். குறித்த பெண்ணின் கணவரும் அங்கு நின்றிருந்த நிலையில் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

**மீட்கப்பட்டது வாகனம் சிக்கினர் சந்தேகநபர்கள்**
கைது செய்யப்பட்ட கணவரிடம் பொலிஸார் 'முறைப்படியான' விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணையின் பயனாக கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் கல்வியங்காடு பகுதியில் கைப்பற்றப்பட்டது. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ மீடின் தலைமையிலான பொலிஸ் குழுவே இந்த வாகனத்தைக் கைப்பற்றியது.
தொடர் விசாரணைகளைத் தொடர்ந்து கடத்தலில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கப்படும் எட்டு சந்தேகநபர்களும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

**பின்னணி**
ஏற்கனவே குறித்த பெண் அவரது கணவர் தொடர்பான விவாகரத்து வழக்கு ஒன்றும் நீதிமன்றில் நடந்து வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் ஏற்கனவே பல மோசடி வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேகநபர். ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் ஒருவரை நிதி மோசடி செய்தார். அப்போது கணவர் என்ற ரீதியில் குறித்த பெண் பிணை எடுத்திருந்தார். அது சம்பந்தமான வழக்குக்கு சமூகம் அளித்து விட்டு வந்த நிலையிலேயே பெண் கடத்தப்பட்டுள்ளார். கடத்தப்பட்ட பெண் தமக்கு வழங்கிய வாக்குமூலத்தில் இவ்வாறு தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-5,109)

# சிறுவர் தொழிலாளர்கள் அற்ற நாடாக இலங்கையை 2016இல் மாற்ற வேண்டும்

## தொழில் திணைக்கள ஆணையாளர் மகாதேவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16
2016ஆம்ஆண்டில்சிறுவர்தொழிலாளர் அற்ற நாடாக இலங்கையை மாற்ற வேண்டும். சிறுவர் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு முக்கிய காரணமாக கூறப்படும் வறுமையை போக்கும் முயற்சிக்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். - இவ்வாறு தெரிவித்தார் தொழில் திணைக்கள ஆணையாளர் மகாதேவன்.
சிறுவர் தொழிலாளர் அற்ற நாடாக 2016இல் இலங்கையை மாற்றுவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று யாழ்ப்பாணத்தில் தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் ஆண்டொன்றுக்கு 200 முதல் 300 வரையான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவற்றில் சுமார் 25 வரையானவையே நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஏனையவை முறைப்பாடுகளை நிரூபிப்பதில் பெரும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளாவது:-
இலங்கையைப் பொறுத்தவரையில்14 வயதுக்கு உட்பட்டவர்களை எந்தப் பணியில் ஈடுபடுத்துவதும் சட்டப்படி குற்றமாகும். அதேவேளை 18 வயதுக்கு குறைந்த எவரையும் வேலைகளில் ஈடுபடுத்துவதும் இதே குற்றத்துக்குள் அடங்கும். ஆபத்தான பணிகள் என இலங்கையில் 51 வேலைகள் குறிக்கப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. இதனை மீறுவோருக்கு ஆகக் குறைந்த பட்சம் ஆறு மாத சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராமும், பாதிக்கப்பட்ட சிறுவருக்கும் நட்ட ஈடும் செலுத்த வேண்டிய சூழல் ஏற்படும். - என்றார்.
(ற-101)

# உணவு தினத்தை முன்னிட்டு பேரணி

யாழ்ப்பாணம், ஒக்.16
சர்வதேச உணவு தினமான இன்று வறுமை ஒழிப்புக்கான மாபெரும் மக்கள் பேரணியும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெற உள்ளது.
மன்னார் சமாதான பாலத்தில் இருந்து ஆரம்பமாகும் குறித்த பேரணியானது நகரப்புறமாக சென்று மன்னார் நகர சபை மண்டபத்துக்கு முன்பாக நிறைவடையும்.தொடர்ந்து வறுமை ஒழிப்புக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், உதவித்திட்டங்கள், மரக்கன்றுகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.
மக்களுக்கான உதவிப் பொருள்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்களான வாழ்வோதயம் - கறிற்டாஸ், சேவாலங்கா, பிறட் சிறிங்கா, ஹற்றன் நெசனல் வங்கி போன்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளன.
நிகழ்வுக்கு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதி பர் திருமதி ஸ்ரான்லிடிமெல் தலைமையில் மன்னார் நகர பிரதேச செயலாளர், மன்னார் நகர சபை செயலாளர் திரு.பிறிற்றோ லெம்பேட், வனஇலாகா மற்றும் விவசாயதிணைக்களத்தினுடைய அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் சமுர்த்தி மற்றும் திவிநெகும பங்காளிகள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொள்ள உள்ளனர். (ற-21)

# விழிப்புலன் அற்றோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று நடைபவனி

யாழ்ப்பாணம், ஒக்.16
சர்வதேச விழிப்புலன் அற்றோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று நடைபவனியும், நிகழ்வுகளும் நடைபெற்றன. வன்னி விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.
மு.ப. 9 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து ஆரம்பமான நடைபவனி கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தைச் சென்றடைந்தது. அங்கு விழிப்புலன் அற்றோரின் வரவேற்பு நடனத்துடன் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.



அதைத் தொடர்ந்து விழிப்புலன் அற்றோருக்கான வெள்ளைப் பிரம்புகள், பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் 'அகவிழி' என்னும் இறுவட்டும் வெளியிடப்பட்டதுடன், அதைத் தயாரித்த கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டன.
இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக அருட் தந்தை நிர்சாட் ஜோதி சொரூபன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வைத்திய கலாநிதி தி.ஜெயராசா, கனகபுரம் மகாவித்தியாலய அதிபர், விழிப்புணர்வற்றோர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(ற-21,ரி3)

# மண்ணெண்ணெய் கலந்த கசிப்பு மதுவரிப் பிரிவிடம் சிக்கியது

யாழ்ப்பாணம், ஒக். 16
மண்ணெண்ணெய் கலந்த கசிப்புப் போத்தல்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டு அவர் மீதான வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
சங்கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்படி சுழிபுரம் மத்தியில் உள்ள குறித்த வீட்டுக்குச் சென்ற அதிகாரிகள் அங்கு சோதனையில் ஈடுபட்டபோதே மண்ணெண்ணெய் கலந்த நிலையில் தேக்கி வைக்கப்பட்டிருந்த கசிப்புப் போத்தல்களைக் கைப்பற்றினர்.
அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் அங்கிருந்த பெண் கைது செய்யப்பட்டார். அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று அவர் மீதான கசிப்பு வைத்திருந்த வழக்குத் தொடர்பிலான விசாரணையை ஒத்தி வைத்தது. அதிகாரிகளிடம் இருந்து தப்புவதற்காக அந்தப் பெண் கசிப்பில் மண்ணெண்ணையைக் கலந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.
இதுதவிர ஊர்காவற்றுறையில் வீட்டில் சட்டவிரோமாக கள் வைத்திருந்து விற்பனை செய்த 2 பேருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. (ற-4,115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சுன்னாகம் குடி தண்ணீர் விவகாரம்

# நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடுவதில் இழுத்தடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பிலான நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை இன்னமும் வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கையளிக்கப்படவில்லை. இந்த மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அந்த அறிக்கை இன்னமும் வெளியிடப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

நிபுணர்குழுவின் அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்று இன்னமும் திட்டவட்டமான திகதி குறிப்பிடப்படவில்லை. இந்த நிபுணர் குழுவை நியமித்த வடக்கு மாகாண சபையும் அது தொடர்பில் எந்தத் தகவல்களையும் இதுவரையில் வெளிப்படுத்தவும் இல்லை.



### பின்னணி

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் கழிவு ஒயில் நிலத்தடி நீருடன் கலந்தமையால் வலிகாமம் பிரதேசத்தில் குடிதண்ணீர் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. கடந்த வருடம் ஜூன் மாதம் இந்தப் பிரச்சினை பெரிதாக ஆரம்பித்தது. அதன் பின்னர் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட கனமழையுடன், குடிதண்ணீரில் கழிவு ஒயில் கலப்பு வேகமாக - பல பிரதேசங்களுக்கும் பரவியது.

### பாதிப்பு

இடர் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் இந்தப் பாதிப்புத் தொடர்பில் இறுதியாக கடந்த மார்ச் மாதம் தரவேற்றம் செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதன் பாதிப்பு உணரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 ஆயிரத்து 195 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 667 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### அறிக்கையில் குழப்பம்

அதையடுத்து நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. குறித்த நிபுணர் குழுவால் கடந்த மார்ச் மாதம் இடைக்கால அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் சுன்னாகம் குடிதண்ணீரைப் பயன்படுத்த முடியுமா? இல்லையா? என்பது தொடர்பில் தெளிவாக எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

### பல்வேறு சோதனை

இதன் பின்னர் பல்வேறு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தேசிய கட்டடங்கள் நிறுவனத்தால் ராடர் கொண்டு வரப்பட்டு நிலக் கீழ் சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டது. பல்வேறு சோதனைகளின் அறிக்கைகளும், நிபுணர்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனாலும் அதன் இறுதி அறிக்கை வெளியிடப்படவில்லை. அது தொடர்ந்து பின்தள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றது. (ந-5)

## கஞ்சா வைத்திருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

திருகோணமலை, ஒக்.16

திருகோணமலை கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்புறுகஸ்வெவ பகுதியில் 7 கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கோமரங்கடவெல பிரதேசத்திலுள்ளவர்களுக்கு கேரளா கஞ்சாவை விற்று வந்தமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து சோதனையை மேற்கொண்ட பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந)



கிழக்கு மாகாணத்தில் தொகுதிவாரி முறையிலான கொத்தணி சிரமதான வேலைத்திட்டம் நேற்றுக் காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிழக்கு மாகாண முதலமைச்சரின் வழிகாட்டலின் கீழ், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனின் தலைமையில் இந்த சிரமதானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருகோணமலை நகராட்சி மன்றம், தம்பலகாமம் பிரதேசசபை, உப்புவெளி பிரதேசசபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த சிரமதானப் பணிகளானது திருகோணமலை நகரின் அன்புவெளிபுரம், உவர்மலை, மற்றும் லவ்லேன் ஆகிய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன. (ந)

## சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். இது பற்றிய செய்தியாளர் சந்திப்பு ஒன்று பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனித வாழ்வில் ஏற்படுகின்ற சவால்களை முறியடிப்பதற்கு ஆய்வு என்பது இன்றியமையாதது. ஆய்வுகளை வெவ்வேறு துறைகளில் மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் சிறந்த தளமாக விளங்குகின்றன. 2 வருடங்களுக்கு ஒரு முறை இந்த ஆய்வு மாநாடு நடத்தப்படுகிறது. அதன்மூலமாக ஆய்வு மேற்கொள்ளும் கலாசாரத்தைக் கல்வி சார் சமூகத்திடம் ஊக்குவித்து வருகின்றது.

"பசுமையான எதிர்காலத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு இந்த முறை மாநாடு இடம்பெறுகிறது. இன்றைய காலத்தில் கடும் சவாலாக உள்ள சூழல் பிரச்சினையை முதன்மையாக நோக்குகிறது.

அதன்படி விவசாயமும் உணவு விஞ்ஞானமும், உயிரியலும் சூழல் விஞ்ஞானமும், வர்த்தகம், முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை, கல்வியியல், பொறியியல், சுகாதார விஞ்ஞானமும் மருத்துவ விஞ்ஞானமும், மனிதாயக் கற்கை நெறிகளும் நுண்கலைக் கற்கை நெறிகளும், தகவல் விஞ்ஞானமும் தொழிநுட்பமும், தூய விஞ்ஞானம், சமூக விஞ்ஞானமும் பிராந்திய விஞ்ஞானமும், விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

ஆய்வுக் கட்டுரைகள் நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் பற்றிய அறிவிப்பு அடுத்த வருடம் மார்ச் 15 ஆம் திகதி வரை இருக்கும். மாநாட்டுக்கான பதிவு அந்த வருடம் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் மே 31 ஆம் திகதி வரை இடம்பெறும். ஆய்வு மாநாடு அடுத்த வருடம் ஓகஸ்ட் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று துணைவேந்தர் தெரிவித்தார். இது பற்றிய இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## உரியவர்கள் மோ. சைக்கிள், சைக்கிளை பெறலாம்

கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளை உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று கேட்டுக் கொண்டுள்ளது.

நெடுந்தீவுச் சந்தைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த லுமாலா சைக்கிள் ஒன்றை நெடுந்தீவுப் பொலிஸார் மீட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர். அவ்வாறு கடந்த மே மாதம் ஊர்காவற்றுறைப் பொலிஸார் என்.பி.ஜே.கியூ இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டு நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர். அவற்றை உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றப் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-4)

# புலிகள் இருந்தபோது இல்லாத சாதிப்பிரச்சினை தற்போது மீண்டும் வடக்கில் தலைதூக்குகின்றது

## வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் கவலை

விடுதலை போராளிகள் இருந்த போது இல்லாத சாதிப்பிரச்சினைகள் தற்போது வடமாகாணத்தில் தலைதூக்கி உள்ளன என்று வடக்குமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வவு[illegible] வில் நடைபெற்ற புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்விலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய போராளிகள் இருந்த போது மக்கள் எல்லோரும் கட்டுக்கோப்புடன் இருந்தார்கள். அத[illegible] இல்லாது அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். ஆனால் தற்போது அது இல்லாது பல கிராமங்களில் சாதியின் பேரை சொல்லிக்கொண்டு சிலர் மக்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

சின்னப்பிள்ளைகள் போன்று சாதிகளை, மதங்களை கூறி மக்களை பிரிவுபடுத்தும் முயற்சிகள் நிறுத்தப்படவேண்டும். விடுதலைப் போராளிகள் அப்போது எப்படி மக்களை வைத்திருந்தார்களோ அதே போன்று முன்னாள் போராளிகளும் கிராமங்களில் உள்ள சாதிப்பிரச்சினைகளை இல்லாது அனைவரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும். அப்போது தான் எமது தேசிய விடுதலையை அடைய முடியும். நாம் எதிர்காலத்தில் எமது இலக்கை அடைய வேண்டும் என்றால் எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை இருக்க வேண்டும். - என்றார். (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகள் விவகாரம்; ஆராய்வதற்குக் குழு

## மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை தொடர்ந்தும் நீடிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ள தாக, அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 20 ஆம் திகதி அந்தக் குழு முதலாவது சந்திப்பை நடத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட நாள்கள் தடுப்புக் காவல் மற்றும் சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில், நேற்று முன் தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் பிரஸ்தாபித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளது சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்ட நிலையைச் சுட்டிக்காட்டிய மனோ கணேசன், கடந்த ஆட்சியில் நிலவிய நிலைமை நல்லாட்சியில் நிலவுவதை நீடிக்க விடக்கூடாது எனவும் எடுத்து கூறியுள்ளார்.

அமைச்சரின் கூற்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, இந்த விவகாரம் தொடர்பில் பிரதமர், நீதித்துறை அமைச்சர், சிறைத்துறை அமைச்சர் ஆகியோர் சட்டமா அதிபரைச் சந்தித்து ஆராய்ந்து தனக்கு அறிவிக்கவேண்டும் என்று பணித்துள்ளார்.

மேலும், இது தொடர்பில் நீதித்துறை அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, சிறைத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோரை உள்ளடங்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, தனது தலைமையில் சட்டமா அதிபரை அழைத்துக் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையை மேலும் நீடிக்க விடாது தீர்க்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தனது சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், எதிர்வரும் 20 ஆம் திகதி இது தொடர்பான முதற் கூட்டத்தை நடத்துவோம் என்று அமைச்சர் மனோ கணேசனிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். (த-5)

# தேசிய அரசின் செயற்பாடு அதிருப்தியை அளிக்கின்றது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.16

நல்லாட்சிக்கான தேசிய அரசின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன என்று மக்கள் விடு தலை முன்னணி தெரிவித்துள்ளது.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் அந்துன்நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர் நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரசியல் மற்றும் பொருளாதார அராஜக நிலைமைக்கு இன்றைய கூட்டணி அரசு பொறுப்புக் கூறவேண்டும். குறைந்தது 2015 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு இன்னமும் வழங்கப்படவில்லை. புதிய அரசு அமைந்த பின்னர், அந்த நிதி வழங்கப்படும் என 100 நாள் வேலைத் திட்டத்தில் அரசு கூறியிருந்தது. எனினும் இதுவரை அந்த நிதி கிடைக் கவில்லை. - என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஆனால் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

கிராமத்திலுள்ள வீதிகளைப் புனரமைக்கவும், முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்கவும், மருந்தகத்துக்கு மருந்துகளை வழங்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் கிடைக்க வேண்டிய சந்தர்ப்பத்தை அரசு இல்லாமல் செய்துள்ளது.

ஊழல், மோடிசகள் விடயத்திலும் இதே நிலைமைதான். நாடாளுமன்றம் கூடிய இரண்டாவது நாளில் கடந்த 22 ஆம் திகதி எமது கட்சியின் தலைவரான அனுரகுமார திஸாநாயக்க அவன் கார்ட் நிறுவனம் சம்பந்தமாக விசேட உரையொன்றை ஆற்றினார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்று பற்றி கட்சி ஒன்றின் தலைவர் விசேட உரையை நிகழ்த்துவார்.

அவன்கார்ட் சம்பந்தமாக பிரதமரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. முழுமையான பதிலை வழங்காவிட்டாலும் இதுவரை நடந்துள்ள விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தாவது பிரதமர் பதிலளிக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ற)

# அரசியல் கைதிகள் விடுதலைக்கு ஓரணியில் அணி திரளவேண்டும்

## வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

அரசியல் கைதிகளின் போராட்டத்தை தற்போதைய தேசிய அரசும் கண்டும் காணாதிருப்பது மிகவும் வேதனைப்பட வேண்டிய விடயமாகும். உடனடியாக அவர்களின் விடுதலை தொடர்பில் புதிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறினால் தமிழ்மக்களால் தேர்வுசெய்யப்பட்ட இந்த அரசையும் தூக்கி எறியத் தமிழ் மக்கள் ஒரு போதும் பின்னிற்க மாட்டார்கள் - என்று தெரிவித்தார் வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் மக்கள் ஓரணியில் குரல் கொடுக்க வேண்டும். அதற்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் மக்கள் அணிதிரள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைந்திருக்கும் புதிய அரசைத் தமிழ் மக்கள் ஒன்றும் விரும்பித் தெரிவு செய்யவில்லை. நாட்டில் ஓர் ஆட்சிமாற்றம் நிகழவேண்டும் என்பதன் காரணமாகவே மைத்திரி - ரணில் தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவு வழங்கினர். தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும், தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்ற ஏதுநிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணியே இந்த அரசைத் தெரிந்தெடுத்தார்கள்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளாகச் செயற்பட்ட கருணா, கே.பி போன்ற பிரபலங்கள் அரச அடிவருடிகளாக மாறி சுகபோகங்களை அனுபவித்து வருகின்ற நிலையில், புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் அரசியல் கைதிகள் என்ற போர்வையில் சிறைகளில் வாடி வருகின்றார்கள். உண்மையில் ஒட்டுமொத்தத் தமிழினமுமே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள்தான். அவ்வாறு பார்த்தால் எமது இனம் முழுவதையும் இவர்கள் சிறையில் போட வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

தமிழ் மக்களுக்கு பல்வேறு விதத்திலும் இடைஞ்சலாக இருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை போன்று ஐ.நா.வின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தும் முகமாக அதன் முக்கிய சரத்தாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட கைதிகளையும் அரசு உடன் விடுவிக்க வேண்டும் - என்றார். (ற-5)

# சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்மையே தோல்விக்குக் காரணம்

## - ஜோன் செனவிரத்ன

கொழும்பு, ஒக்.16

சிறுபான்மை இன மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் அடித்தளத்தை இழந்ததன் காரணமாகவே சிறி லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் தோல்வியைத் தழுவியது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஜோன் செனவிரத்ன, அடுத்த பொதுத் தேர்தலில் சுதந் திரக் கட்சி தலைமையிலான முன்னணியை வெற்றிபெறச் செய்வதற்கான சீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரியில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் ஜோன் செனவிரட்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய அரசுடன் நிபந்தனைகளுடனேயே இணைந்துள்ளோம். எமது கட்சியைப் பாதுகாத்துக் கொண்டு மக்களுக்கான சேவையை முன்னெடுப்பதே கட்சியின் முக்கிய நோக்கமாகும். ஐந்து வருடங்கள் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு வெறுமனமே எதிர்ப்புச் சுலோகங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதை விட அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டு எமது மக்களுக்கான தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அதுவே எம் முன்னால் உள்ளகடப்பாடாகும்.- என்றார். (ற)

# அனைவருடனும் பகை வளர்த்துக் கொண்டு வினைத்திறனுடன் செயற்படுவது எவ்வாறு?

## வடக்கு முதலமைச்சரிடம் கேட்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாண முதலமைச்சர் எல்லோரையும் பகைத்துக் கொண்டு எவ்வாறு வடக்கு மாகாண சபையை வினைத்திறனுடனான சபையாக - மக்களுக்கு சேவையாற்றக் கூடிய சபையாக, செயற்பட வைக்கப் போகின்றார் - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

'ஆடத் தெரியாதவள் மேடை கோணல்' என்ற கூற்றைப் போல் ஆளுநர் மீதும், பிரதம செயலாளர் மீதும் குற்றம் சுமத்திக் கொண்டிருந்த முதலமைச்சர், அதன் பின்னர் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும், ஆளுநரும், பிரதம செயலாளரும் இடமாற்றப்பட்ட நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது ஆத் திரமடையக் கூடிய வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி அவரையும் பகைத்துக் கொண்டார். இப்போது ஐக்கிய நாடுகள் சபையை பகைத்துக் கொண்டுள்ளார்- என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

வடக்கு மாகாண சபையில் ஐ.நா.வின் இணைந்த மதிப்பீடு செயற்திட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் வழங்கிய பதில் தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'ஐக்கிய நாடுகள் சபை மத்திய அரசிடம் தமிழரை பணியவைக்கப் பார்க்கிறது' என்ற தொனியில் முதலமைச்சர் சபையில் கூறியிருப்பது ஐ.நா. சபையின் செயற்பாடு தொடர்பில் முதலமைச்சரின் விளக்கமற்ற தன்மையையே காட்டுகின்றது. சர்வதேச நாடுகளோ, சர்வதேச நிறுவனங்களோ மத்திய அரசின் ஊடாகத் தான் வடக்கு மாகாணத்திற்குரிய உதவிகளையோ வேலைத் திட்டங்களையோ செயற்படுத்த முடியும். எமது அரசியல் அமைப்பில் மாற் றம் கொண்டு வரும் வரை அதுவே நடைமுறையாக இருக்கும் - என்றும் அதில் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அந்த வகையிலேயே ஐ.நா. சபை முதலமைச்சரின் பரிந்துரைகளை வெளிவிவகார அமைச்சின் ஊடாக சமர்ப்பிக்குமாறு கூறியிருப்பதை விளங்கிக் கொள்ளாமல் ஐ.நா. சபை மீது முதலமைச்சர் குற்றம் சாட்டியிருப்பது ஏற்புடை யது அல்ல.

இந்த நிலையில் வடமாகாண சபையை வினைத்திறனுள்ளதாக மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வகையில் எவ்வாறு செயற்பட வைப்பது. இன்று வடமாகாண சபை இரண்டு வருடங்களை பூர்த்தி செய்திருக்கும் நிலையில் எந்தவித செயற்பாடுகளும் அற்றதாக காணப்படுவதாக எதிர்க் கட்சியினர் மட்டுமல்ல ஆளுங் கட்சிகளை சேர்ந்தவர்களும் பகிரங்கமாக குற்றம் சுமத்துகின்றபோது வடக்கு மாகாண சபையை வினைத்திறனுள்ள சபையாக மாற்றுவது எப்படி?.

கல்வி, போக்குவரத்து, மின்சாரம், வீதி, வேலையற்ற பட்டதாரிகள், வாழ்வாதார பிரச்சினைகள், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளையும், போரினால் ஊனமுற்றவர்கள், விதவைகள், அநாதைகள், இவ்வாறு நிர்க்கதியுற்றிருக்கும் எம் உறவுகளுக்கான தீர்வையும் வட மாகாண சபை எவ்வாறு செயற்படுத்தப் போகின்றது - என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். அரசியல்வாதிகள், புதிய பதவி பெற முயற்சிப்பர்.

**இடபம்:** பேச்சிலும், செயலிலும், இனிமை நிறைந்திருக்கும். எதிரிகள் இடம் மாறிப் போகும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில், இலாபம் படிப்படியாக உயரும். அரச வழியில் ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** மற்றவரை நம்பி, எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில், தகுந்த கவனம் செலுத்தவும். மாணவர்கள் பெற்றோர் அறிவுரையை ஏற்பது நல்லது.

**கடகம்:** குறுக்கிடும் சிரமங்களை சாதுரியமாகச் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். வாகன வகையில், பராமரிப்புச் செலவு உண்டாகும். பெண்கள், குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** சாந்த குணத்துடன் பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாட்டால் பெருமை சேரும்.

**கன்னி:** உறவினர்களின் செயல் உங்களைச் சங்கடப்படுத்தலாம். புதிய முயற்சி குறித்து, மற்றவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். நண்பர்களுக்காக வீண் செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** சமயோசிதமாகச் செயற்பட்டு, வெற்றிகாண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சியும் ஆதாயமும் உயரும். அரசியல்வாதிகளுக்கு, அதிர்ஷ்டமானகாலகட்டமாக அமையும். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்று மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** புகழுக்கு அவப்பெயர் வராத வகையில் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில், தாமதம் ஏற்படும். மனைவியின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**தனுசு:** நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். கடந்த கால முயற்சிக்கான பயன் தற்போது கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையை தாராளமாகச் செலவுசெய்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்படும். வெளியூர் பயணத்தை, ஆதாய நோக்கில் மேற்கொள்வீர்கள். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம்:** முக்கிய பணி நிறைவேறத் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை செலுத்தத் தொடங்குவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.

**மீனம்:** பிடிவாதத்தால், குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடும். இலாபம் சுமாராக இருக்கும் வாகனப் பயணத்தில், மிதவேகத்தை கடைபிடிக்கவும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

# மீண்டும் நடிக்கும் கௌதமி



1990களில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் கௌதமி. இவர் சில காலமாக படங்களில் நடிக்காமல் இருந்தார். நீண்ட இடைவேளைக்குப்பிறகுகமலுடன்இணைந்து பாபநாசம்' படத்தில் ரீஎண்ட்ரி கொடுத்தார். இதில் கௌதமியின் நடிப்பு அனைவராலும் பேசப்பட்டது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரையில் தோன்றியிருந்தாலும் முன்பு இருந்த அதே இளமைத் துள்ளலுடன் நடித்திருந்தார்.

இந்தப்படத்தின்வெற்றிக்குப்பிறகுகௌதமிக்கு பட வாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. தற்போது மோகன்லாலுக்கு ஜோடியாக கௌதமி நடிக்க இருக்கிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளில் உருவாக இருக்கும் இந்தப் படத்தை தெலுங்கு இயக்குநர் சந்திரசேகர் ஏலெட்டி இயக்க இருக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு நவம்பர் மாதம் தொடங்க இருக்கிறது. மேலும் இந்தப் படத்தில் நடிக்க இருக்கும் நடிகர்கள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களை விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்க இருக்கின்றனர். இதற்கு முன்னர் மோகன்லாலும் கௌதமியும் ஹிஸ் ஹனஸ் அப்துல்லா என்ற படத்தில் ஜோடியாக நடித்திருந்தனர். 1990இல் வெளியான இந்தப் படம் சூப்பர் ஹிட்டானது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு மோகன்லாலும் கௌதமியும் புதிய படத்தின் மூலம் இணைவது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

**கடவுளை மற!**

**மனிதனை நினை!!**



கடவுளை ஏற்றுக்கொள்ளாதே
கடவுளை ஏற்றுக்கொண்டால்
மதத்தை ஏற்றுக்கொள்வாய்
மதத்தை ஏற்றுக்கொண்டால்
சாதிய பிரிவுகளை ஏற்றுக்கொள்வாய்
சாதியை ஏற்றுக்கொண்டால்
ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொள்வாய்
எனவே கடவுளை மற!
மனிதனை நினை!!
கடவுளை மற
மனிதனை நினை!!




## பேஸ் புக்கில் பிடித்தவை...











அவ இல்லையானா
அவ தங்கச்சிய கூட்டிட்டு
போயிடனும்




**என்னடா நடக்குது இங்க !**





டேய் நீங்கெல்லாம் யாருடா...?
எங்கே இருந்துடா கிளம்பி வாரீங்க...?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015

## யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015இல் சாதனை படைத்தோர்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



ரவிச்சந்திரன் திலக்சன்
188
(1st நிலை தென்மராட்சி வலயம், மாவட்ட நிலை - 5)
100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்



பிரபாகரன் கீர்த்திகன் 183 2 ஆம் நிலை தென்மராட்சி வலயம் | சசீந்தன் நிருஷவா 180 3 ஆம் நிலை தென்மராட்சி வலயம் | சுஜேந்திரன் கீர்த்திகா 175 | சிவகுமார் டிக்சனா 175 | சுதேஸ்வரன் ஜதுர்சிகா 174 | குணசேகர் தர்மிகா 174 | சிவநாயகன் பரணிதன் 170 | நடராசா சுஜீவன் 167

சிறேன்குமார் சுவிக்ஷன் 166 | கனகராசா மதீதன் 166 | குலசேகரம் நிலோஜினி 165 | பிரதீபன் சாந்திகா 164 | செல்வராசா நிருசன் 164 | சந்திரகுமார் பிரியந்தன் 163 | செல்வநாதன் அவேஜிகா 163 | உதயசூரியன் தஜீந்தினி 161

நடராசசிங்கம் திலக்ஷிகா 161 | பஞ்சலிங்கம் ஜதுசன் 156 | சந்திரகுமார் பிரியந்தி 156 | மணிவண்ணன் கவிதரன் 155 | மதிவண்ணன் வானிதன் 155 | நந்தகுமன் கபேஷன் 153 | நிமோகன் மாதவி 153

ப.டஜுஜா -152
ம.சிந்துஷன் - 150
ம.சிந்துஜா - 149
செ.சங்கவி - 148
கி.பானுஷியா - 147
ர.சுஜானா - 147
ம.கவிசன் - 144
ம.கஜன் - 143
அ.மனோஜா - 143
ச.அகநிலா - 142

வி.அபிநயா - 107
யோ.தமிழன்பன் - 107
சு.தயலக்சன் - 105
வி.அகல்யா - 105
வ.நிசாந்தன் - 103
சு.பிரபாகினி - 100
ப.நிலக்சனா - 100

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ.மதுசிகா - 141 | செ.மதுஷா - 137 | வி.லிகிர்தா - 134 | சி.தர்சிகன் - 130 | சோ.சுவேதிகா - 126 | வ.விதுசா - 124 | வி.டுசாந்தினி - 112 |
| வ.ஹிருசாளினி - 141 | சி.கஜலக்ஷன் - 136 | சி.ஜினிஷா - 133 | பு.அபிஷாந் - 129 | சி.அபிஷா - 126 | வ.சிஜுசா - 119 | சு.பிரவீன் - 110 |
| சி.சிவனதி - 138 | சி.மீனா - 135 | செ.வரலக்ஷன் - 131 | ப.யோகிதா - 128 | செ.ஜனுசியா - 126 | வி.விதுஷனா - 116 | த.பிரியா - 110 |
| சி.அபிஷாயினி - 138 | ம.திவ்வியன் - 135 | ர.கிதுசியா - 131 | அ.அதீனா - 128 | சு.கினோஷன் - 126 | பி.ஜெனார்த்தன் - 116 | வி.சாருகன் - 108 |

இம் மாணவர்களுக்கு வழிகாட்டிய அதிபர் திரு.கா.கந்தசாமி அவர்களையும் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் திருமதி.செல்வராணி தர்மலிங்கம், திருமதி. ராஜேஸ்வரி பத்மநாதன், திருமதி. நந்தகுமாரி றதீஸ் அவர்களையும், உயர் பெறுபேறு பெற்ற மாணவச் செல்வங்களையும் வேம்படி விநாயகர் அருள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

Best Wishes Best Wishes

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை

### 2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



| கீழ்இடமிருந்து வலம் | |
|---|---|
| ந.ஜன்சிகா | - 178 |
| கு.சன்சிகா | - 162 |
| செ.மதுவந்தி | - 153 |
| ஜெ.கீர்த்திகா | - 156 |
| து.சங்கீர்த்தனி | - 162 |
| ஜெ. மதுராங்கி | - 169 |
| ல.லக்சிகா | - 157 |
| சு.டிலைக்சனா | - 156 |
| சி.திவானா | - 157 |

| மேல் இடமிருந்து வலம் | |
|---|---|
| சி.மிதுசன் | - 176 |
| ந.பிரவீன் | - 167 |
| ச.சஜீவன் | - 171 |
| சி.விதுகீர்த்தனன் | - 158 |
| அ.சரண்ஜன் | - 154 |
| சு.லிதுர்சன் | - 172 |
| ச.கோபிதன் | - 168 |
| சு.பிரசாந் | - 168 |

| நடு இடமிருந்து வலம் | |
|---|---|
| பா.கிருதிகா | - 166 |
| எ.வினுசிகா | - 177 |
| ர.கிஷாளினி | - 165 |
| சி.டனுசா | - 153 |
| ஏ.வைஸ்ணவி | - 163 |
| ப.அபிலாசினி | - 167 |
| 'பெ.டனுசிகா | - 177 |
| இ.ரதுசா | - 185 |
| கு.தனுசிகா | - 175 |

**இடமிருந்து வலம்**

சி.சிவநாதன் - ஆசிரியர் , இ.செல்வநாயகம் - அதிபர்,
இ.சிவகுமார் - பிரதி அதிபர், ந.அமலசேகர் - ஆசிரியர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகூடிய மாணவரை சித்தியடையச் செய்து மீண்டும் வரலாற்றை நிரூபித்த அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள்ள வாழ்த்துவதில் பெருஉவகை அடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சபை
மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு
(சி.15905) (13.11.15.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015

75 ஆவது ஆண்டு பவள விழா

## யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் 75 ஆவது ஆண்டின் பரிசுத்தினத்தில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்று சித்தியடைந்தோர்**


ம.சஜிந்தினி
174 புள்ளிகள்


சி.தாருஜன்
171 புள்ளிகள்


ந.அகிபன்
170 புள்ளிகள்


பா.பிரியங்கா
170 புள்ளிகள்


ச.சானுஜா
168 புள்ளிகள்


செ.பரணிஹா
164 புள்ளிகள்


அ.ஜிலானி
163 புள்ளிகள்


கு.யதுரசன்
162 புள்ளிகள்


அ.பிரணவன்
160 புள்ளிகள்


ஜ.கபிஷாந்
159 புள்ளிகள்


ச.பிரியங்கா
159 புள்ளிகள்


சு.அபிநயா
157 புள்ளிகள்


சி.அபிலாஸ்
156 புள்ளிகள்


கு.ஸ்ரீகிரன்
155 புள்ளிகள்


ப.பிரவின்
155 புள்ளிகள்


ச.விஸ்ணுகா
155 புள்ளிகள்

**வெட்டுப்புள்ளிக்கு அண்மித்தோர்**

1. சி.அபிஸ்னவி - 152, 2. மு.சஜித் - 151 3. பெ.பகீரதன் - 151

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கே.டிலக்ஷன் | - 149 | 10. த.தர்மிகா | - 137 | 19. கே.யதுஜிகா | - 118 |
| 2.ம.பவநீதன் | - 146 | 11. தி.மதுவக்ஷன் | - 132 | 20. அ.மதுநிலவன் | - 114 |
| 3. சி.மயூரதன் | - 145 | 12. ஐ.பேரினியன் | - 131 | 21. ந.அபிராமி | - 111 |
| 4. ஸ்ரீ.சஷ்டிகவசன் | - 145 | 13. ப.டனிலோ | - 130 | 22. ந.பிருதுவிகா | - 109 |
| 5. ர.அபிஷா | - 144 | 14. சி.தனுசன் | - 128 | 23. தி.ஜனார்த் | - 107 |
| 6. கு.மதுசாஜிகா | - 144 | 15. ர.தர்மிஷன் | - 127 | 24. க.கம்சிகா | - 103 |
| 7. நா.குக்சாந்தன் | - 141 | 16. ந.டிலைக்சனா | - 119 | 25. த.கஜனி | - 102 |
| 8. ந.ஹரிணி | - 139 | 17. லோ.துஸியந்தினி | - 118 | 26. நி.கம்ஷா | - 102 |
| 9. வ.பவித்திராயினி | - 138 | 18. சி.டிக்சிகா | - 118 | | |

2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மொத்தமாக 52 மாணவர்கள் தோற்றி 16 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். 100 புள்ளிக்கு மேல் 45 மாணவர்கள் பெற்றுள்ளனர். 70 புள்ளிக்கு மேல் 51 மாணவர்கள் பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் சித்தி வீதத்தில் முதலிடத்தைப் பெற்று பவள விழா ஆண்டில் சிறப்பித்துள்ளனர்.

**பாராட்டி வாழ்த்து**



06.10.2015 ஆசிரியர் தினத்தன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் கௌரவிப்பு விழாவில் "பிரதீபா பிரபா" விருது பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி இந்திராதேவி மதிசூடி** அவர்களையும் இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவியும்
பாஸ்கரன் - கமலேஸ்வரி தம்பதிகளின் புதல்வியுமாகிய




### செல்வி பா.ஐதுர்ஷா

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2015 இல் தோற்றி 154 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுவ தோடு, மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பகீரதன் (பெரியப்பா), வனிதா (பெரியம்மா), தம்பி, மட்டுவிலைச் சேர்ந்த அப்பப்பா, மாமா, அத்தை, மச்சான், மச்சாள்

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015
மாணவ சாதனையாளர்கள்




Best Wishes

இடமிருந்து வலமாக

| | | |
|---|---|---|
| பு.கம்ஷாஜினி (178) | உ.கேனுஜா (168) | சு.தினுஜன் (167) |
| சி.கிருத்திகன் (165) | ஜே.அபிஷன் (163) | க.வர்ஜிதா (160) |
| க.டகிதா (157) | க.துவாரகா (156) | லோ.மகிஷாஜினி (155) |

**இவர்களுடன் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவச் செல்வங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு.சாணக்கியா | - 151 | கி.துபிதா | - 150 | ர.ஜெபன்ஸியா | - 150 | சு.ஜனார்த்தனி | - 146 |
| சி.சோபிதா | - 136 | வி.நிவேதனன் | - 136 | க.வேனினி | -136 | ஸ்ரீ.கலாபவன் | - 132 |
| ஜெ.டினுஜன் | - 131 | ம.கீர்த்தனன் | - 130 | யோ.டெசிக்கா | - 128 | சு.சாருஜன் | - 127 |
| ச.சாங்கீர்னா | - 124 | சு.கேதிகா | - 124 | து.சகீனா | - 121 | சி. டேனுஜா | - 119 |
| ய.ஜானுசன் | - 119 | அ.லக்ஸிகன் | -119 | சி.கஜனிகா | - 114 | சு.சுலோசனா | - 112 |
| ச.சோபனா | - 109 | து.வேணுகானன் | - 109 | பி.சனுசன் | - 108 | சி.ஜெசிந்தினி | - 107 |
| த.விபுசன் | - 105 | ச.சயேசன் | - 105 | நே.நிருசாந் | - 105 | | |

ஆகியோரையும் இவர்களை வழிநடத்திய பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களான த.மகிழ்ராஜன், திருமதி இ.சக்திரதன் ஆகியோரையும் ஆரம்பம் முதல் இன்று வரை கற்பித்த ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(60632)(10.15) **பாடசாலைச் சமூகம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/ கோணாவில் காந்தி ஆரம்பவித்தியாலயம்



2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்தமைக்காக பாரட்டி வாழ்த்துகின்றோம்.

மை. டனார்த்தன்(175 புள்ளி மாவட்டநிலை 15) ச.கபினா(174 புள்ளி மாவட்டநிலை 17) க. இந்துஜா(163 புள்ளி மாவட்டநிலை 83) கு.திருக்குமரன்(159 புள்ளி மாவட்ட நிலை106) சூ.சன்சிகா(154புள்ளி)

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
கிளி/ கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம் கிளிநொச்சி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/சாவ/இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும்
இராஜன் (விரிவுரையாளர்) இராஜிகா (ஆசிரியை) தம்பதியரின் புதல்வனுமாகிய



### இ. அபிராம்

1. 2015 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகவும்
2. 2014 செலான் டிக்கிரி ஓவியப் போட்டியில் முதலாம் இடம்
3. யாழ். மாவட்ட செஸ் சங்க போட்டியில் தெரிவாகி தேசிய மட்டம் சென்றுள்ளார்
4. 2015 உலக உளநல நாள் சித்திரப் போட்டியில் மாகாண மட்டம் 2ஆம் இடம்
5. உலக உணவுத்திட்டம் சித்திரப் போட்டியில் சாவ/தேசிய மட்டத்தில் சிறந்த ஓவியராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
6. 2015 இலங்கை வங்கியின் "ரண் கெகுளு " சித்திரப்போட்டியில் மாகாண மட்டம் 2ஆம் இடம்
7. உதயன் பத்திரிகை வெள்ளி விழா சித்திரப் போட்டியில் மாகாண மட்டம் முதலாம் இடம்
8. 2015 DSI சிதுவிலி ஸ்ரீலங்கா ஓவியப் போட்டியில் மாகாண மட்டம் முதலாம் இடம்
9. H.W.DAY (கை கழுவுதல் தினம்) சித்திரப் போட்டியில் வலய மட்டம் முதலாம் இடம்
10. மாகாண அமைச்சின் மாகாண மட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத்தனை போட்டிகளிலும் அவர் வெற்றி பெற்றமைக்காகவும், அவர் மேன்மேலும் கல்வியிலும் ஓவியத்திலும் பல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளை இருகரம் கூப்பி வணங்கி வாழ்த்துகின்றோம்.

**அத்துடன் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் எமது மனமுவந்த வாழ்த்துக்கள்.**

வாழ்த்துவோர்:

**அப்பப்பா, அப்பம்மா, வாசன் பெரியப்பா, ஈசன் சித்தப்பா குடும்பம், ரூபன் சித்தப்பா குடும்பம், ஜீவன் சித்தப்பா குடும்பம், அம்மா, அப்பா ஆகியோர்.**

**அப்பப்பா, அப்பம்மா**
**மணி ஜூவலர்ஸ், ஈசன் ஜூவலர்ஸ் உரிமையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உயிரோடு விளையாடாதீர்கள்

தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது. போராட்டம் இன்று ஐந்தாவது நாளை எட்டியுள்ள நிலையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நேற்றுப் போராட்டக் கைதிகளுடன் நடத்திய சந்திப்பு வெற்றியளிக்கவில்லை என்பது கவலையளிக்கிறது.

இந்தப் பிரச்சினையை எப்படி முடித்து வைப்பது என்பது தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு இன்னமும் மூன்று மாத கால அவகாசத்தை அவர் கோரியிருக்கிறார். கைதிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

போர் முடிந்து 6 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை முன்னைய கொழும்பு அரசு காணத் தவறியமை கண்டனத்துக்குரியது. இந்தப் பிரச்சினைக்கும் சேர்த்து முடிவு காண்பதாகத் தெரிவித்து பதவிக்கு வந்த தற்போதைய அரசும்கூட அவர்களின் விடுவிப்புக்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கடந்த ஜனவரியில் பதவிக்கு வந்த இந்த அரசு, மீண்டும் மீண்டும் தெற்கில் சிங்கள - பௌத்த - மக்களிடம் இருந்தும் அதன் தலைவர்களிடம் இருந்தும் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில்தான் அதிக நாட்டத்துடன் செயற்படுகிறதே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடன் அது செயற்படவில்லை என்பதைக் கடந்த 9 மாதங்களில் எடுத்துக்காட்டும், எரியும் பிரச்சினையாக, அரசியல் கைதிகளின் பிரச்சினை இருக்கின்றது.

அனைத்துச் சிறைகளிலும் 217க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். கொழும்பு அரசு இவர்களை மூன்று விதங்களில் வகைப்படுத்துகின்றது. முதலாவது வகையினர், பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொண்டிருப்பவர்கள். இரண்டாவது வகையினர் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோதும் இன்னமும் வழக்கு எதனையம் எதிர்கொள்ளாதவர்கள். மூன்றாவது வகையினர் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்.


இவர்களில் முதல் இரண்டு வகையினரையும் விடுவிப்பதில் சட்டச் சிக்கல்கள் இருப்பதாகவும், மூன்றாம் வகையினர் குறித்த விசாரணைகளைத் துரிதப்படுத்தி பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகாதவர்களை உடனடியாக விடுதலை செய்வதாகவும் கொழும்பு அரசு ஏற்கனவே இணங்கியிருந்தது. கைதிகள் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சுகளில் இந்த இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

ஆனால் அந்த இணக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை. அது நிகழ்ந்திருந்தால் கைதிகள் இன்று இவ்வளவு பெரிய போராட்டத்தில் குதித்திருக்க மாட்டார்கள். கைதிகளை விடுவிப்பதில் உள்ள சிக்கல் என்ன என்று சட்ட மா அதிபரிடம் தான் எழுப்பிய கேள்விக்கு இன்னமும் தனக்குப் பதில் கிடைக்கவில்லை என்று கூறி இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நழுவி விடுவதற்கு முயல்கிறார் போன்றும் தெரிகிறது.

நிச்சயமாக இது ஒரு காரணமல்ல. சாட்டுப்போக்கு மட்டுமே. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது என்கிற அரசியல் முடிவைக் கொழும்பு எடுத்துவிடுமானால் அதனைச் செயற்படுத்துவது அதிகாரிகளுக்குச் சிரமமான ஒன்றல்ல. அதனைவிடுத்து அதிகாரிகள் தரப்பின் தாமதத்தினால்தான் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்றது என்பதாகக் காட்ட முற்படுவது ஏமாற்றும் செயல்.

கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வந்த இந்த ஏமாற்று வேலையே, விட்டுக்கொடுப்பு ஏதுமற்ற போராட்டத்துக்குள் தமிழ்க் கைதிகளை இப்போது தள்ளியுள்ளது. ஏற்கனவே 4 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் இந்த விடயத்தில் கொழும்பு அரசும் ஜனாதிபதியும் விரைந்து முடிவெடுக்க வேண்டும். தற்போதைய பட்டினிச் சாவை முடித்து வைக்கும் வகையில் முதற்கட்டமாக, பெரும் குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை யாவது விடுவிக்க வேண்டும். அதன் பின்னர் ஏனையவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பது குறித்து ஜனாதிபதி ஒரு காத்திரமான முடிவுக்கு வரவேண்டும்.

தாமதிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் மிகப் பெறுமதியானது. பட்டினிச் சாவுப் போராட்டத்தில் ஈடுபட்ட திலீபனின் சாவு ஏற்படுத்திய விளைவுகளை மறந்துவிடலாகாது. விபரீதங்கள் ஏற்படுவதற்கு முன்னதாக கொழும்பு விரைந்து செயற்பட வேண்டும். உயிர்களோடு விளையாடுவது நல்லதல்ல. அது போர்க் காலத்தோடு முடிந்துபோகட்டும். இனிமேலாவது நம்பிக்கையைக் கொடுங்கள்.



# நல்லாட்சி என்பதற்கு என்னதான் அர்த்தம்?

● மு.ஈழத்தமிழ்மணி

இந்த வருடத்துக்கான மக்களைச் சென்றடைவதற்கான இலகுவான அரசியல் விளம்பரமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமான நூறுநாள் வேலைத் திட்டம், நல்லாட்சி, தேசிய அரசு என்பவை இருந்ததை நாடறியும். இவை மூவினமக்களினதும் வாயில் தினமும் பேசு பொருளாக இருந்தன.

இலங்கை மக்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இந்தக் கோஷத்தில் இருக்கவில்லை. இதனால் நல்லாட்சி, தேசிய அரசு என்பன மக்களை ஈர்க்கக்கூடிய வார்த்தைகளாக மாறின. மகிந்த சிந்தனை, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், வாழ்வின் எழுச்சி என்ற அரசியல் வார்த்தைகள் நாட்டிலிருந்து தேய்ந்து போய் விட்டன. மகிந்த சிந்தனை என்ற வார்த்தைப் பதமானது பாதாம் அல்வா போன்றதாகத் தென்னிலங்கை வாழ் மக்கள் மத்தியில் சுவையாக இருந்தது. மகிந்த சிந்தனை மகிந்த ஆட்சியாளர்களுக்கு சொர்க்க வாசல் கதவுகளைத் திறந்து விட்ட தொன்றாகவே அமைந்தது. ஒன்பது ஆண்டுகள் வரையில் மகிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் தொடக்கம் அமைச்சுச் செயலாளர்கள் மேலதிகாரிகள் வரையில் அளவுக்கு மீறிச் சம்பாதிப்பதற்கும், ஊழல் மோசடிகள் செய்வதற்கும், இலஞ்சம் பெறுவதற்கும், வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் சேமிப்பதற்கும் பக்கபலமாக அமைந்ததும் மகிந்த சிந்தனை தான். மக்களால் பார்க்கப்படுகின்ற நல் லாட்சியில் நூறு நாள் வேலைத்திட்டம் தேசிய அரசில் நல்லாட்சியைக் கொண்டு செல்வதற்கு முக்கிய கொள் கையாக அமைந்தது.

கடந்த ஜனவரி எட் டாம் திகதி நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்த அரசு, நூறு நாள்களைப் பூர்த்தி செய்து கொண்ட பின்னர், கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று அதே ஆட்சி தொடரவும் மக்கள் வழிவகுத்தனர். நல்லாட்சியினர் முன்னெடுத்த வேலைத்திட்டங்களில் அரச ஊழியர்களுக்கும், ஏனைய பொதுமக்களுக்குமான சில சலுகைகள் வரவு – செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டிருந்தன. அரச உத்தியோகத்தர்களுக்கான பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றாகும். ரணிலால் உறுதியளிக்கப்பட்டதுபோல் அது வழங்கப்பட்டது. ஆனால், அவை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்துவழங்கப்படவேயில்லை. சமையல் எரிவாயு, எரிபொருள்கள் , கோதுமை மாவு, சிமெந்து, பால்மா, சீனி உட்பட சில பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. இதனால் நல்லாட்சி மீது மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டது. எந்தக்காலத்திலும் விலை குறைப்புக்களையும், சம்பள உயர்வுகளையும் மக்களுக்கு சாதகமாக வைத் துக் கொள்ளவே முடியாது. அதிருப்திகளின் அளவுகள் கூடிக் கொண்டேயிருக்கும்.

நாட்டில் முக்கிய உணவாகக் கருதப்படுகின்ற நெல்லை ஒரு கிலோ 50 ரூபாவுக்கு விற்பனை செய்கின்ற நிலையை நல்லாட்சியினால் ஏற்படுத்த முடியவில்லை. தேங்காய் மற்றும் புளி, கடலுணவுகள் ஆகியவற்றின் விலைகள் உச்சத்தை எட்டி நிற்கின்றன.

ஐந்து மாதங்களின் பின்னர் நூறு நாள் வேலைத் திட்டத்தில் குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் தற்போது அதிகரித்துவிட்டன. மரக்கறி எண்ணெய், உருளைக்கிழங்கு, சீனி, வெங்காயம், கோதுமை மாவு என்பவற்றின் இறக்குமதித் தீர்வையைச் சடுதியாக உயர்த்தியதன் மூலம் வெளிச் சந்தையில் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. ஒரு கிலோ பொருளுக்கு ஐந்து ரூபா தொடக்கம் 25 ரூபா வரையில் அதிகரிப்புக் காணப்படுகின்றது.

கடந்த மாதம் உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் குறைவடைந்த செய்தியை நாட்டு மக்கள் ஊடகங்களுடாகவும், இணையத்தளங்களுடாகவும் அறிந்தனர். நாட்டு மக்களும் எரிபொருள்களின் விலையை ஒரு லீற்றருக்குக் கணிசமான அளவில் நல்லாட்சி அரசு குறைக்குமென எதிர்பார்த்திருந்தனர். பொதுத் தேர்தலுக்கு முன்னரும் எரிபொருள்களின் விலைக் குறைப்பு நிகழலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித் திருந் தன. அவையாவும் பொய்யாகி விட்டன. மகிந்த ஆட்சியில் வருடத்துக்கு இரு தடவைகளேனும் எரிபொருள்கள் உட்பட பல அத்தியாவசியப் பொருள்கள், போக்குவரத்துக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் உயர்ந்து செல்லும் நிலைமை காணப்பட்டது. பொது மக்களின் வாழ்க்கைச் சுமை எகிறிக் கொண்டு சென்றது. மக்கள் வாழ்க்கைச் சுமையோடு போராடினார்கள். மைத்திரி ஆட்சியில் ஓரளவு ஆறுதல் காணப்பட்டது.

எரிபொருள்களைக் கூட மைத்திரி அரசால் ஏன் குறைக்க முடியவில்லை என்ற கேள்விக்கு மைத்திரியாலோ ரணிலினாலோ, ரவி கருணாநாயக்காவாலோ உரிய பதிலை வழங்க முடியவில்லை. உருளைக்கிழங்கு, சீனி, கோதுமை மாவு, மரக்கறி எண்ணெய், வெங்காயம், பூடு ஆகிய பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ள வேளையில், எரிபொருள்களின் விலையைக் குறைத்து மக்களின் பொருளாதாரச் சுமையை இறக்கியிருக்கலாமல்லவா? எரிபொருள்களின் விலையைக் குறைத்தால் மின்சாரக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணங்கள், உற்பத்திப் பொருள்களின் விலைகள் ஆகியவற்றைக் குறைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இதனால் மக்களுக்கு ஆறுதல் ஏற்பட்டிருக்கும். அதிலிருந்து நல்லாட்சி அரசு தவறிவிட்டது.

கடந்த மாதம் நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஓரளவு அதிகரிக்கப்பட்ட நிலையில், இந்த மாதமும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் சடுதியாக உயரப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களின் விலை கடந்த மாதத்தில் அதிகரிக்கப்பட்டிருந்தது. மீண்டும் அதன் விலையில் அதிகரிப்பு ஏற்படவுள்ளது.

ஒன்பது ஆண்டுகளாக முன்னாள் ஜனாதிபதியான மகிந்த, அரசு பயங்கரவாதிகளை ஒழித்து, நாட்டை மீட்டெடுக்கின்ற வரையில் சம்பள உயர்வையோ, பொருள்களின் விலைக்குறைப்புக்களையோ நாட்டு மக்கள் எதிர்பார்க்காது அரசுடன் ஒருமித்துச் செயற்பட வேண்டும் எனக் கூறியிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னரும்கூட மகிந்த அரசு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைத் தொடர்ந்து அதிகரித்து மக்கள் மீது தாங்கமுடியாத சுமைகளை அதிகரித்திருந்தது.

ஆனால், மைத்திரி ஆட்சியில் நடப்பது என்ன? மகிந்த அரசு வருடத்துக்கு இரு தடவைகள் உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரித்ததுபோல் மைத்திரி –ரணில் தேசிய அரசும் வருடத்தில் இரண்டு தடவைகள் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்கின்ற நிலையை ஏற்படுத்துமா?

மைத்திரி – ரணில் தேசிய அரசு நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற அரசாகவே அமைந்து வருவதாக எண்ணத் தோன்றுகிறது. அமைச்சரவையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பலகோடி ரூபாய்கள் வருடாந்தம் அமைச்சர்களுக்கான கொடுப்பனவு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. நாட்டு மக்களின் பொருளாதாரச் சுமையோ எந்த ஆட்சியிலும் குறைவடைந்து வளமான வாழ்வுக்கு வழிவகுக்காத துர்ப்பாக்கிய நிலை மகிந்த ஆட்சியை அடுத்து மைத்திரி ஆட்சியிலும்கூட நீண்டு செல்லப் போகின்றது. இதுவே யதார்த்தம். இந்த நிலையில் நல்லாட்சி என்ற பெயருக்கு என்ன அர்த்தத்தைக் கொள்ளலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அட்டகாசமான வடிவமைப்பில் பிளக்பெர்ரி பிறிவ்

அலைபேசிப் பிரியர்களின் மனம் கவர்ந்த அலைபேசிகளை வடிவமைத்து வழங்கும் நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் பிளக்பெர்ரி, விரைவில் புத்தம் புதிய அலை பேசி ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது. எனினும் இந்த அலைபேசி தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளியிடப்படாத நிலையில் அவற்றின் ஒளிப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன. 5.4 அங்குல அளவு, 2560 ஒ 1440 பிக்சல் உடைய தொடுதிரையைக் கொண்டுள்ள இந்த அலைபேசி, பிரதான நினைவகமாக 3ஜிபி றம் இனைக் கொண்டதாகவும், 4-கே வீடியோக்களை பதிவு செய்யக்கூடிய 18 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, செல்பி எடுப்பதற்கான 5 மெகாபிக்சல்களை உடைய கமரா போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த அலைபேசி எதிர்வரும் நவம்பர் மாதம் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.



## இரண்டு நாள்களில் புற்றுநோயைக் கண்டறியலாம்

இரண்டே நாள்களில் புற்றுநோய்த் தாக்கத்தைக் கண்டறியக்கூடிய கணினி புரோகிராம் ஒன்றை டென்மார்க் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இதன் ஊடாக இரப்பை, மூளை உட்பட உடலின் ஏனைய பகுதிகளில் உண்டாகும் புற்றுநோய்களையும் கண்டறியக் கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும். தற்போது 85 சதவீதம் வரை வெற்றிகரமாகச் செயற்படும் இந்தக் கணினிப் புரோகிராமை மேம்படுத்தும் பணியில் டென்மார்க் தொழில்நுட்பப் பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த குறித்த குழு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. தற்போது உள்ள முறைகள் மூலம் புற்றுநோய்களைக் கண்டறிய நீண்ட நாள்கள் எடுப்பதனால் நோயாளி இறப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் காணப்படுவதனால் இந்தப் புதிய முறையானது பெரிதும் முன்னேற்றகரமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## ஜப்பானில் வீதிகளை ஆக்கிரமிக்கத் தயாராகும் சாரதியற்ற வாகனங்கள்

கூகுள் நிறுவனம் உட்பட வேறு சில நிறுவனங்களும் சாரதிகள் அற்ற தானியங்கிக் கார்களை உருவாக்கி அவற்றைத் தொடர்ச்சியாகப் பல்வேறு பரீட்சிப்புக்களுக்கு உள்ளாக்கி வருகின்றன.

இந்த நிலையில் அடுத்த வருட ஆரம்பம் முதல் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய தானியங்கி வாகங்களை பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக ஜப்பான் அதிரடியாக அறிவித்துள்ளது.

ஜப்பானிய அரசுடன் ரோபொற் ரக்ஸி நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ள இந்தத் திட்டத்துக்கான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி பிரதான நகரங்களின் பெருந்தெருக்களில் இருந்து 3 கிலோமீற்றர்கள் வரை பயணம் செய்ய விரும்புபவர்கள் இந்தச்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிரடியாகக் குறித்த திட்டத்தை அறிமுகம் செய்வதானது 2020 ஆம் ஆண்டு ஜப்பானில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை இலக்கு வைப்பதாக இருக்கலாம் எனவும் ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

# ‘சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்போம்’ யாழில் சிறப்பாக நடைபெற்ற நடைபவனி













யாழ்ப்பாணம்,ஒக்.16

வடமாகாண தொழில் திணைக்களத்தின்ஏற்பாட்டில் ‘சிறுவர்தொழிலாளர் அற்ற நாடாக இலங்கையை மாற்றுவோம்’ எனும்தொனிப்பொருளில் யாழில் நேற்று நடைபவனியும் விழிப்புணர்வுக் கருத்துரையும் இடம்பெற்றன. யாழ்.பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் இருந்து [illegible] மான நடைபவனியை தேசியக் கொடியேற்றி, யாழ்.மாவட்ட அரச அதிபர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். குறித்த நடை பவனியில் [illegible] லக ஊழியர்களுடன், தொழில் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.இந்தப் பேரணி காங்கேசன்துறைவீதி, கஸ்தூரியார்வீதி,ஸ்ரான்லிவீதியூடாகச் சென்று மாநாட்டு மண்டபத்தை அடைந்தது. அங்கு மாவட்ட அரச அதிபர் தலைமையில் இலங்கையை சிறுவர் தொழிலாளர் அற்ற நாடாக மாற்ற நாம் ஆற்ற வேண்டிய பங்குகள் தொடர்பில். பலரும் கருத்துக் களை முன்வைத்தனர்.

(ஐ-101,86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுவிஸில் இருப்பவர்களே மிகவும் வசதி படைத்தோர்

## அந்த நாட்டு வங்கி அறிக்கை கூறுகின்றது

பெர்லின், ஒக்.16

சுவிஸ் நாட்டில் வசிப்பவர்கள் தான், உலகிலேயே மிகவும் வசதியானவர்கள் என அந்த நாட்டின் வங்கி ஒன்றின் அறிக்கை கூறுகின்றது.

சுவிஸ் நாட்டின் ஜூரிச்சைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் கிரெடிட் சுவிஸ் என்ற நிறுவனம் உலகில் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் வசதியானவர்கள் என்பது குறித்த 2015 ஆம் ஆண்டின் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், சுவிட்ஸர்லாந்தில் வசிப்பவர்கள் சராசரியாக 5 லட்சத்து 67 ஆயிரத்து 100 டொலர் சொத்துக்களுடன் முதல் இடத்தில் உள்ளனர்.

அடுத்த இடத்தில் நியூசிலாந்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அந்த நாட்டில் வசிப்பவர்களின் சராசரி சொத்தின் மதிப்பு 4 லட்சத்து 811 டொலராகும். தனி நபர் வருமானத்தின் மூலம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் சுவிஸில் பணக்காரர்களிடையே பெரும் ஏற்றத் தாழ்வு உள்ளதும் தெரிய வந்துள்ளது. இந்த ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்வதற்கு சுவிஸ் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி உலக வல்லரசான அமெரிக்கா 3ஆவது இடத்தில் உள்ளது. கடந்த மாதம் ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு நிதி நிறுவனம் உலகில் மிகவும் வசதியானவர்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலும் சுவிஸ் நாட்டில் வசிப்பவர்களே முதலிடம் பிடித்துள்ளனர். (ற)

# ரஷ்யாவுக்கு எதிராக நிற்க வேண்டும் அமெ.

## ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு



வொஷிங்டன், ஒக்.16

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் அமெரிக்காவுக்குப் பெரும் நெருக்கடியாக இருக்கும் ரஷ்யாவை அமெரிக்கா எதிர்த்து நிற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஜனாதிபதியாகப் புடின் பதவியேற்றதன் பின்னரே அமெரிக்காவுடன் அந்த நாட்டு உறவு சீர்கெடத் தொடங்கியது. புடினின் மிரட்டலுக்கு எதிராக அமெரிக்கா எதிர்த்து நிற்க வேண்டும், முக்கியமாக சிரியாவில் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் மற்றும் ரஷ்ய விமானங்கள் தவறுதலாக மோதிக் கொள்ளாதிருக்க ரஷ்யாவுடன் பேச்சு நடத்திய வெள்ளைமாளிகை உயர் அதிகாரிகளுக்கு அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார். (ற)

# கும்பகோணத்தில் குளங்களைக் காணோம்

## சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு

சென்னை, ஒக்.16

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் காணாமல் போன 32 குளங்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில்–

கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகத் திருவிழா 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற உள்ளது. இந்தத் திருவிழாவின் போது, அங்குள்ள புனித குளங்களில் மக்கள் நீராடுவார்கள். கும்பகோணத்தில் மொத்தம் 44 புனித குளங்கள் இருந்த நிலையில் தற்போது 12 குளங்கள் மட்டுமே உள்ளன.

மீதமுள்ள 32 குளங்களை பலர் ஆக்கிரமித்து கட்டடங்களைக் கட்டியுள்ளனர். காணாமல் போன குளங்களைக் கண்டறிந்து அதிலுள்ள ஆக்கிரமிப்புகளைக் அகற்றத் தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும். – என்று தமது மனுவில் கோரியுள்ளார்.

மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர், கும்பகோணம் நகரிலுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மனுதாரர் தொடர்ந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்றும் அவற்றுடன் இந்த வழக்கும் சேர்த்து விசாரிக்கப்படும் எனவும் தீர்ப்பு வழங்கினர். (ற)

# பிடிக்கவில்லை என்று கூறிய மகளைக் கொன்ற தந்தை

## சவூதி அரேபியாவில் கொடூரம்

லண்டன், ஒக்.16

"உன்னைப் பிடிக்கவில்லை" என்று கூறியமைக்காக மகளை அடித்துக் கொன்ற தந்தையின் வெறிச்செயல், பொதுமக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சவூதி அரேபியாவின் ஈத் அல் ஆதா நகரைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி யாரா. அவளது தந்தைக்கும், தாய்க்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இருவரும் விவாகரத்துப் பெற்றுவிட்டனர். நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின் பேரில் யாரா தனது தந்தையுடன் கடந்த 3 மாதங்களாக வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில் தந்தை மகள் யாராவைப் பார்த்து 'உனக்கு என்னைப் பிடித்துள்ளதா?', 'என்மேல் அன்பு உள்ளதா?' என்று கேட்டுள்ளார்.


அதற்கு யாராவோ 'எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை' என்று பதில் கூறியுள்ளாள்.

அதனால் கோபம் கொண்ட தந்தை 'பைப்' ஒன்றால் யாராவின் தலையில் அடித்துள்ளார். அதுமட்டுமல்லாது பின்னர் கம்பியாலும் தலையில் தாக்கி உள்ளார். அதனால் அவளது உடல் நிலை மோசமடைந்தது. அதையடுத்து மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே யாரா உயிரிழந்துள்ளாள்.

தற்போது, யாராவின் தந்தையைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் தனது வாக்குமூலத்தில் எனது மகளுக்குத் தக்க பாடம் புகட்ட விரும்பியதால் இப்படியொரு காரியத்தைச் செய்தேன் என்று கூறியுள்ளார். (ற)



சிரியாவில் தற்போது உள்நாட்டுப் ...
ஆபத்தான கடல் பயணங்கள் மூ...
கோரிக்கையாளர்களின் தெரிவாக ...
நுழைந்துள்ளனர் என்று அந்த நாட்...
என்றும் தெரிவித்துள்ளது. கிறிஸ் நா...
இறக்கப்பட்டு குழந்தையைத் தூக்கிய...



(படம்:– அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நைஜீரிய ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.)

# போகோ ஹராமுக்கு எதிராக களமிறங்குகிறது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக்.16

போகோ ஹராம் இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கப் படைகள் களமிறக்கப்படவுள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்காவின் கமரூன் குடியரசுப் பகுதியில் குறித்த அமெரிக்கப் படைகள் நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 300 பேரைக் கொண்ட வலுவான படையணி அங்கு வான்வழி உளவு நடவடிக்கை மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கமரூன் மற்றும் சாட் ஆகிய நகரங்கள் வட நைஜீரியாவில் இருந்து செயற்பட்டுவரும் பொகோ ஹராம் போராளிகளினால் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் கமரூன் பகுதியில் ஈடுபடுத்தப்படவுள்ள அமெரிக்கப் படையினர் அங்கு தொடர்ந்தும் நிலைத்திருந்து போகோ ஹராமுக்கு எதிராகப் போராடவுள்ளனர் என்று ஒபாமா தெரிவித்துள்ளார். (ற)

# ஜெருசலேமின் ஒரு பகுதியை தடை செய்வதற்கு அனுமதி

## இஸ்ரேல் அமைச்சரவை வழங்கியது



(படம்:– சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீனியர் ஒருவரைச் சுற்றி நிற்கும் இஸ்ரேலிய இராணுவத்தினர்.)

ஜெருசலேம், ஒக்.16

ஜெருசலேமின் ஒரு பகுதியைத் தடை செய்வதற்கு இஸ்ரேல் அமைச்சரவை பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.


அங்கு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த முடிவு இஸ்ரேல் அமைச்சரவையின் அவசர சந்திப்பில் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது சில பகுதிகளில் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இராணுவத்தினரைப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜெருசலேம் மற்றும் இஸ்ரேலின் மத்திய பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கத்திக் குத்துச் சம்பவங்களில் 3 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு வாரங்களில் பல இஸ்ரேலியர்கள் பலஸ்தீனியர் [illegible] கொண்டு தாக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் அங்குள்ள மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். ...னங்கள் மூலம் அவர்கள் ஐரோப்பாவுக்குப் புகலிடம் கோரிச் செல்கின்றனர். கிறிஸ் நாடும் புகலிடக் ... தெரிவாக இருக்கின்றது. இந்த ஆண்டு 3 லட்சத்து 9 ஆயிரம் சிரியர்கள் தமது நாட்டுக்குள் கடல் வழியாக ... அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. தொடர்ந்தும் புகலிடக் கோரிக்கையாளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் ... கிறிஸ் நாட்டுக்குப் பிளாஸ்டிக் படகில் சென்ற புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் கரைக்கு 100 மீற்றர் தூரத்தில் ...யத் தூக்கியவாறு கரையை நோக்கிச் செல்கின்றார். (ற)

# 'பக்' ஏவுகணையாலேயே எம்.எச்.17 வீழ்த்தப்பட்டது

## உறுதிப்படுத்தியது ஏவுகணை தயாரிப்பு நிறுவனம்

மொஸ்கோ, ஒக்.16

கடந்த ஆண்டு ஜுலை மாதம் கிழக்கு உக்ரைனில் பறப்பை மேற்கொண்டிருந்த எம்.எச். 17 மலேசிய பயணிகள் விமானம் பக் ஏவுகணையாலேயே தாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பக் ஏவுகணை தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

விமானத்தின் வலது பக்க இயந்திரத்தில் இருந்து 20 மீற்றர் தொலைவில் ஏவுகணை வெடித்துச் சிதறியுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எம்.எச்.17 விமானம் 298 பயணிகளுடன் நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்குப் பறப்பை மேற்கொண்டிருந்தது. கிழக்கு உக்ரைனுக்கு மேலாகப் பறப்பை மேற்கொண்டபோது அது தாக்கப்பட்டது.

விமானத்தை உக்ரைனில் உள்ள ரஷ்ய ஆதரவுப்படையினர் தான் தாக்கினர் என்று உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. ஆனால் உக்ரைன் ராணுவம் தான் சேகரித்து வைத்திருந்த பக் ஏவுகணையைப் பயன்படுத்தி விமானத்தை தாக்கியது என்று ரஷ்யா தெரிவித்தது.

விமானத்தைத் தாக்கிய பக் ஏவுகணை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டது என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உக்ரைன் நாட்டின் ராணுவ விமானம் என நினைத்து ரஷ்ய ஆதரவுப்படையினர் தான் மலேசிய விமானத்தை தாக்கினர் என்கிறார்கள் நிபுணர்கள்.

இந்தநிலையில் இது குறித்து ரஷ்ய தலைநகர் மொஸ்கோவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் பக் ஏவுகணை தயாரிப்பு நிறுவனம் 'அல்மாஸ் அன்ரே' இந்தத் தாக்குதல் தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளது.

மலேசிய விமானத்தின் இடது பக்க இயந்திரத்தில் இருந்து 20 மீற்றர் தொலைவில் ஏவுகணை வெடித்துள்ளது. மலேசிய விமானம் பக் ஏவுகணை வீச்சால்தான் தாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளானதும் விமானிகள் கொல்லப்பட்டனர் என்றும் விமானம் இரண்டு பகுதிகளாகப் பிளவுபட்டவேளை பயணிகள் கிட்டத்தட்ட ஒன்று அல்லது ஒன்றரை நிமிடமாவது உயிருடன் இருந்திருக்க வாய்ப்பிருந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள், காற்றழுத்தம், வேகமான குளிர் காற்று மற்றும் குறைந்தளவிலான ஒட்சிசன் காரணமாக இறந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பயணிகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியும் முன்னரே சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் - . ஆனால் ஒட்சிசன் வாயு முகமூடியை அணிந்த ஒருவருடைய சடலம் கிடைத்துள்ளது. ஆனால் அது எப்படிச் சாத்தியமானது என்பது பற்றி இன்னமும் தெளிவாக ஊகிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 பிரித்தானியர்கள் உட்பட 298 பேரின் உயிர் பரிதாபமாகப் பிரிந்த இந்தச் சோகமான சம்பவம் தொடர்பாக ஏவுகணை தயாரிப்பு நிறுவனம் கிராபிக்ஸ் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதுமட்டுமன்றி மாதிரி விமான முன்பகுதிக் கட்டுமானமொன்றை அமைத்து, தாக்குதல் நடைபெற்ற விதத்தையும் விவரித்துள்ளது. அதில் குறிப்பிட்ட விமானம் எந்தப் பாதையில் பயணித்தது, இடி மற்றும் மின்னல் தாக்கத்திலிருந்து தப்ப -எவ்வாறு தனது பாதையிலிருந்து சற்றுத் தள்ளி பறப்பில் ஈடுபட்டது போன்ற பல விவரங்கள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் பின்பகுதியே முதலில் நிலத்தில் விழுந்தது என்றும் பின்னர் மத்திய பகுதியில் தீப் பற்றியிருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது. கிட்டத்தட்ட 320 சதுர கிலோ மீற்றர் பகுதியிலிருந்தே ஏவுகணை ஏவப்பட்டுள்ளது என்றும் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது. (ற)







# மறைந்திருந்து மீண்டும் தாக்கக் கூடும் எபோலா

## 12 மாதங்கள் சிகிச்சை பெறுவது அவசியம் என்கின்றன ஆய்வு முடிவுகள்

லண்டன், ஒக் .16

எபோலா வைரஸ் மனித உடலில் உறங்குநிலையில் இருந்து 9 மாதங்களின் பின்னர் மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது.

எபோலாவால் பாதிக்கப்பட்ட ஒரு ஆணொருவரது உயிரணுக்களில் 9 மாதங்களின் பின்னர் எபோலா வைரஸ் தொற்று இருப்பதற் கான சாத்தியம் காணப்பட்டது என்று ஆய்வு முடிவுகள் கூறு கின்றன. இந்த ஆய்வு பிரிட்டனில் நடத்தப்பட்டுள்ளது.

ஆய்வின்படி எபோலா வைரஸ் உடலில் தேங்கி இருந்து மாதக் கணக்கிலோ அல்லது வருடக் கணக்கிலோ தாக்கங்களை விளைவிக்கக் கூடியது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

முதன் முறையாக 1976 ஆம் ஆண்டு எபோலா வைரஸ் இனம்காணப்பட்டது. மறுபடியும் 2013 ஆம் ஆண்டில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. மேற்கு ஆபிரிக்காவைத் தாக்கிய இந்த வைரஸ் 11 ஆயிரம் பேரின் உயிரிழப்புக்குக் காரணமானது.

கடந்த இருவாரங்களும் எந்தப் புதிய நோய்த் தொற்றுக்களும் பதிவாகாத தொடர்ச்சியான இருவாரங்கள் என உலக சுகாதார அதிகாரிகள் தெரிவித்த நிலையில், இந்த ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது.

உலக சுகாதார நிறுவனத் தலைவர் புறுஸ் எயில்வர்ட் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-


எபோலாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்திருந்தாலும் இந்த ஆய்வறிக்கை எபோலாவில் இருந்து மீண்டு வந்தவர்களுக்குக் கவலையளித்துள்ளது. – என்றார்.

எபோலா வைரஸ் பாலியல் உறவு மூலம் பரவக்கூடிய நோய் என ஆராய்ச்சியாளர்களால் இனம் காணப்பட்டுள்ளது. எபோலா நோய்ப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் 6 தொடக்கம் 12 மாதங்கள் வரை தொடர்ந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஆனால் தற்பொழுது கினியா, சியர்ரா லியோன், லைபீரியா ஆகிய நாடுகளில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் எபோலா தாக்கத்தில் இருந்து மீண்டு வந்தவர்களாக உள்ளனர்.

அவர்கள் தகுந்த பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும். அவர்களின் உயிரணுக்களில் எபோலாத் தொற்று இல்லாததைப் பரிசோதனை மூலம் உறுதி செய்ய வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் கடந்த வருடங்களில், எபோலா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்கள், உடலியல் ரீதியிலும், உளவியல் ரீதியிலும் பல பாதிப்புக்களை அடைந்துள்ளனர் என்று ஆய்வாளர்களும் , மருத்துவ வட்டாரங்களும் கவலை தெரிவித்துள்ளன. (ற-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தில் பிரார்த்தனை தரும் வெற்றி



நம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனை துயரப்படுவோரின் துயரைப் போக்கும். இது நோயாளிகளின் உயிர்களை மீட்கும் என்கிறது வேதம். யோகத்துக்கும் தியானத்துக்கும் அடுத்த நிலையில் எல்லோராலும் கைக்கொள்ளக் கூடிய ஒன்று பிரார்த்தனையே ஆகும்.

பிரார்த்தனை என்பது ஒரு மகத்தான சக்தி. மனதை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் இணைந்திருக்கும் முறையே பிரார்த்தனையாகும்.

மனித வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களைப் போக்குவதற்கு இந்துமதம் பிரார்த்தனையைச் சர்வ சஞ்சீவியாகக் கொண்டிருக்கிறது. பிரார்த்தனையை முறையாகச் செய்தால் பெரும் வெற்றி கிட்டும். மனநிம்மதியைப் பெறுவதற்காகப் பலரும் ஏதோ செயல்களையெல்லாம் செய்து நிம்மதியை அடையப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அவற்றால் நிம்மதி கிடைப்பதில்லை. பிரார்த்தனை ஒன்று தான் மனிதனுக்கு உண்மையான நிம்மதியைத் தந்து மனதைத் தூய்மையாக்குகின்றது.

மேலை நாடுகளிலும்கூட எந்த நல்ல காரியம் செய்யத்தொடங்கும்போதும் பிரார்த்தனையுடனேயே ஆரம்பிக்கிறார்கள். இப்படியும் ஒரு பிரார்த்தனை. 'இறைவனே! இந்த நாட்டையும் மக்களையும் பீடித்துள்ள கஷ்டங்களை நீக்கிச் சரியான பாதையில் வழிகாட்டு' என்பதே அந்தப் பிரார்த்தனையாகும். மேலும் இறைவனுக்குப் பூசை செய்வது மட்டும் பிரார்த்தனையாகாது.

எமக்குத் தேவை ஏற்படும்போது கஷ்டம் வரும்போதோ, பயத்தினால் துன்பம் ஏற்படும்போதோ, ஆசை ஏற்பட்டு நிறைவேறாத போதோ பிரார்த்தனை செய்து அவற்றைப் பெறலாம்.

மனிதன் தன்னிடத்திலே உண்மையான வலிமையை, வல்லமையைத் தேக்கி வைத்துக் கொள்வதற்கான சாதனமாகவும் பிரார்த்தனை திகழ்கிறது.

மனதைச் சிதற விடாமல் ஒரு முகப்படுத்தி எண்ணங்களுக்கு வலிமை ஏற்றிச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியும் – பிரார்த்தனையும் சந் தேகமற்ற வெற்றியை எமக்கு அளிக்கும் என்பது மனோதத்துவ விளக்கமாகும்.

மன நிலைப்படுத்துகின்றபொழுது வேறு தகாத எண்ணங்கள் புகாவண்ணம் ஒன்றையே மனதில் நிறுத்தி மன ஒருமைப்பாட்டுக்கு முயல்வதே பிரார்த்தனை என்று கூறுகிறது வேதம்.

நீ இறைவனிடம் உன் சக்திக்குத் தகுந்த வேலைக்காகப் பிரார்த்தனை செய்யாதே; வேலைக்குத் தகுந்த சக்திக்குப் பிரார்த்தனை செய் என்று கூறுகிறார் மேல்நாட்டு அறிஞர் பிஷப்பிலிப் புரூக்ஸ்.

மேலும் ஸ்ரீமதி ஆஷ்கூட் , நல்லவைகளை அடைய நீங்கள் பாடுபட்டு உழையுங்கள், நல்ல காரணங்களுக்காக நீங்கள் செய்யும் உழைப்பு கடவுளுக்குச் செய்யும் பிரார்த்தனையாக அமைகிறது என்கிறார்.

ஆம்! பிரார்த்தனை என்பது கடவுளுடனான சம்பாஷணையாகும். அது மனத்தின் பாரத்தைக் குறைக்கிறது.

மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால்தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும். அதேபோல அஞ்ஞானம் அகலும் வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிட்டும்.

நாள்தோறும் சில நிமிடங்களைப் பிரார்த்தனைக்காக ஒதுக்கி வையுங்கள். வேறு சிந்தனையின்றி கடவுளைப்பற்றி மட்டும் பிரார்த்தனை செய்யுங்கள்.

பின்னர் உங்களது பிரச்சினைகளை இறைவனிடம் சாதாரண வார்த்தைகளால் முறையிடுங்கள். உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் முழு நிம்மதியைத் தரும் என நம்புங்கள்.

பிரார்த்தனையின்போது தீய எண்ணங்கள் ஏற்படாமல் தூய உள்ளத்தோடு செயற்படுங்கள். நாம் பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும்போது ஆண்டவன் நமக்கு மிகவும் அருகில் இருக்கின்றான் என்பதை உணருங்கள்.

நாம் கடவுள் நினைப்புடன் என்றும் வாழ வேண்டியவர்கள். அதற்கு ஒரு வழி பிரார்த்தனையாகும். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை. அதன்மூலம் எமது எண்ணங்களை இறைவனைப் பற்றியதாக மேல்நிலைக்கு உயர்த்துகிறோம்.

பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். ஒவ்வொரு முறையும் கடவுளின் பெயரைத் திரும்பச் சொல்லும்போதும் கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள் என்கிறார் மகாத்மா காந்தியடிகள். அவர் பிரார்த்தனைமூலம் தான் மாபெரும் சாதனைகளை எல்லாம் நிலைநாட்டினார். நாம் கடவுளுக்கு அருகில் இருக்கும்போது எந்தவித அச்சமும் இருக்காது.

கடவுளைச் சிந்தித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரம் செய்தல் என்பவற்றில் ஈடுபடும் நேரம் தவப்பொழுதாக அமைகிறது. அவனைப்பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார் மாணிக்கவாசகர்.

*நன்றி:ஞானக்கதிர்.*

**மனித வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களைப் போக்குவதற்கு இந்துமதம் பிரார்த்தனையைச் சர்வ சஞ்சீவியாகக் கொண்டிருக்கிறது. பிரார்த்தனையை முறையாகச் செய்தால் வரும் வெற்றி கிட்டும். மனநிம்மதியைப் பெறுவதற்காகப் பலரும் ஏதோ செயல்களையெல்லாம் செய்து நிம்மதியை அடையப் பார்க்கிறார்கள். ஆனால் அவற்றால் அவர்களுக்கு நிம்மதி கிடைப்பதில்லை. பிரார்த்தனை ஒன்று தான் மனிதனுக்கு உண்மையான நிம்மதியைத் தந்து மனதைத் தூய்மையாக்குகின்றது.**

# இராகம வைத்தியசாலையை மெருகேற்றம் செய்த பஷன் பக்



நாட்டில் 16 விற்பனைக் காட்சியறைகளைக் கொண்ட முன்னணி ஆடை விற்பனையகமான ஃபஷன் பக், தனது தொடர்ச்சியான சமூக பொறுப்புணர்வுச் செயற்பாடுகளின் மற்றுமொரு அங்கமாக, ராகம வைத்தியசாலையில் வழிகாட்டல் பதாகைகளை பதித்திருந்தது. இதன் மூலம் பொது மக்களுக்கு இலகுவாக வைத்தியசாலையின் வெவ்வேறு பகுதிகளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

'ராகம வைத்தியசாலையில் ஃபஷன் பக் முன்னெடுத்திருந்த இரண்டாவது சமூகப் பொறுப்புணர்வுச் செயற்திட்டமாக இது அமைந்திருந்ததுடன், இதற்கு முன்னதாக போதனா பிரிவைச் சேர்ந்த மகப்பேற்றுப் பிரிவை மறுசீரமைப்புச் செய்திருந்தது. "சமூகப் பொறுப்புணர்வு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், சமூகத்துக்கு மீள வழங்குவது தொடர்பில் நாம் பெருமையடைகிறோம். பொதுச் சேவைகளுக்கு மேலாக, விளையாட்டு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பல துறைகளில் நாம் எமது பங்களிப்பை வழங்கி வருகிறோம்" என ஃபஷன் பக் பதில் பொது முகாமையாளர் கலாநிதி எஸ்.எச்.எம். பராஸ் தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், 'எந்தவொரு சமூகத்திலும் பொருளாதார விடயத்தில் சுகாதாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்துள் ளது. குறிப்பாக பொது மற்றும் தனியார் துறை ஆகியவை பொது மக் களின் நலனில் தமது ஈடுபாட்டைக் காண்பிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது' என்றார்.

நாட்டில் இது போன்ற செயற்பாடுகளை இதற்கு முன்னரும் ஃபஷன் பக் முன்னெடுத்திருந்தது. ஒவிட்டகம மகாவித்தியாலயத்துக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தமை, தும்பே கனிஷ்ட வித்தியாலயத்துக்கு கணினிக் கூடம் அன்பளிப்பு செய்தமை முதல், தம்மிக கித்துல்கொட புலமைப்பரிசில் மையத்துக்கான அனுசரணை ஆகியவை முன்னெடுக்கப்பட்டிருந்தன. அத்துடன், மஹாரகம புற்று நோய் வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே, கொழும்பு கண் வைத்தியசாலை ஆகியவற்றில் புனரமைப்பு செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கியிருந்தமை மற்றும் பல்வேறு சூழல்சார் செயற்திட்டங்களில் பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கவை. சமூக அளவில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக கம்பனி வெவ்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

ஃபஷன் பக் முன்னெடுக்கும் விருதை வென்ற மற்றுமொரு சமூகப் பொறுப்புணர்வுச் செயற்திட்டமாக சிசு திரிகம அமைந்துள்ளது. இதன் மூலமாக இதுவரையில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 7000 மாணவர்கள் அனுகூலம் பெற்றுள்ளனர். நாடு முழுவதையும் சேர்ந்த 120 பாடசாலைகளுக்குச் சென்றடைந்து அதனூடாக 100,000 மாணவர்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பது என்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. 'நாம் இந்த திட்டங்களை நாடு முழுவதையும் சேர்ந்த 120க்கும் அதிகமான பாடசாலைகளில் முன்னெடுக்கவுள்ளதுடன், 100,000 மாணவர்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம்' என ஃபஷன் பக் பணிப்பாளரும், சிசு திரிமக நிகழ்ச்சித்திட்டத்தின் ஸ்தாபகருமான ஷபீர் சுபியன் தெரிவித்தார்.

'ஒரு தடவை மட்டும் முன்னெடுக்கக்கூடிய செயற்திட்டங்களுக்குப் பதிலாக, நீண்ட காலம் நிலைத்திருந்து தெளிவான அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நிலையான சமூகப் பொறுப்புணர்வுச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது எமது இலக்காகும். சிசு திரிமக செயற்றிட்டத்தின் மூலமாக, எமது செயற்றிட்டங்கள் அனைத்தும் தெளிவான ஒரே கட்டமைப்பில் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்படுவதுடன், பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் தெளிவான அடையாளத்தையும் ஃபஷன் பக் நிறுவனத்துக்கு வழங்கும். அத்துடன், பொறுப்பு வாய்ந்த தேசிய செயற்றிட்டத்துக்கு பங்களிப்பு வழங்குவது தொடர்பில் எமது வாடிக்கையாளர்களுக்கு தன்னிறைவையும் வழங்கும்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

1994 இல் தனது வர்த்தகச் செயற்பாடுகளை பங்காண்மை வர்த்தகமாக 4 பங்காளர்களுடன் ஆரம்பித்திருந்த ஃபஷன் பக், தற்போது 16 காட்சியறைகளை கொண்டுள்ளது. ஆரம்பத்தில் 15 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட ஃபஷன் பக், தற்போது 1250 ஊழியர்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் முன்னணி ஆடை விற்பனையகங்களில் ஒன்றாக திகழ்வதுடன், மாற்றமடைந்து வரும் வாழ்க்கை முறைக்கமைவாக நவநாகரிக ஆடைகளையும் வழங்கி வருகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/ புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும்
கலியுகன் பரஞ்சிலோஜினி தம்பதியரின்



புதல்வன் **நிதுசன்** அவர்கள்

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு வாழ்த்தி கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்க இறைவனை வேண்டி இவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாராட்டுக்கள் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது ஊர் மாணவர்களாகிய

* ரவீந்திரகுமார் கஜித்காந் - 158 * கமலதாஸ் நதுர்சிகா - 155

இவர்களையும் பாராட்டுகின்றோம்

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தாமார், அன்ராமார், மாமா, அத்தை, அக்கா, தம்பி, தங்கைமார், மச்சான், மச்சி.

(65379)(13.15)

**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவி
செல்வி **செல்வராசா பிரஷாகினி** (சாலு)
2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர்மேன் மேலும் முன்னேற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - சித்தப்பா, அன்ரி, சேகுராஜ்,மகிஷா ,அம்மா, அக்கா, அண்ணா, அம்மம்மா, அம்மப்பா.

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை மாணவன்
செல்வன் **K. அகிஜன்**
2015இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 117 புள்ளிகள் பெற்றமையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.-

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அன்ரா

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(65385)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவி
செல்வி **மயில்வாகனம் கிருஷனா**




2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிநடத்திய பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியரையும் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனைபடைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அம்மப்பா, அக்காமார், அண்ணாமார்.

**குடத்தனை மேற்கு, குடத்தனை.**

(65362)(13.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**சி.நீதிராஜா (170)**

தெ.கிருஷிகன் - 135 ச.மீனுயா - 134 ஜ.ஞானக்குமரன்- 134 தீ.லதுர்சன் - 131
நா.அபிசுவா - 125 கி.நிதுயா - 124லெ.சாலேம்ராஜ் - 119 ம.மதீசன் - 119
வி.தர்சிகா - 116 கி.நபிதா - 113 யோ.பிரியங்கா - 112 யோ.டஸ்மிகா - 106
நி.டினுசா- 103 ற.றஜீவா - 101

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவனையும் 100 புள்ளிக்கு மேற்பெற்ற மாணவர்களையும் பாராட்டுவதோடு, அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் வழிகாட்டியாய் இருந்த அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம் வல்வெட்டித்துறை
2015 தரம் - 5புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**


சுதர்சன் கயல்விழி
185 புள்ளிகள்


சிவராஜ் சைந்தவி
170 புள்ளிகள்


உதயநேசன் சமிதா
168 புள்ளிகள்


அருந்தவராசா நிவேதா
159 புள்ளிகள்


சிவநாதன் தமிழ்முகிலன்
158 புள்ளிகள்


உதயகுமார் ஜினுஜன்
155 புள்ளிகள்


ஜெயராசா சாருஜன்
153 புள்ளிகள்


உதயகுமார் கிருஷிகா
153 புள்ளிகள்


மணிராஜன் துஷாயினி
153 புள்ளிகள்

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| 01. ஆ.அர்ச்சனா - 142 | 06. ச.மதுசன் - 131 | 11. வி.கணேஸ்வரன் - 117 | 16. ர.அனிதா - 107 |
| 02. ஜெ.கஜுஜா - 135 | 07. க.விஷாலினி - 126 | 12. ப.அபிராமி - 117 | 17. ர.ரக்சியா - 107 |
| 03. க.மதுசாலினி - 134 | 08. த.தனுசியா - 125 | 13. அ.மேரிரெக்சனா - 116 | 18. அ.கோகிலா - 105 |
| 04. ர.ரம்மியா - 133 | 09. த.பிரியங்கன் - 119 | 14. யூ. லக்சிகா - 112 | 19. பா.மதுஷா - 103 |
| 05. சி.கல்யாணி - 133 | 10. க.தர்சா - 119 | 15. அ.அபிநயா - 109 | |

இந்த மாணவர்கள் அனைவரும் மேலும் பல உயர்பெறுபேறுகளைப் பெற்று வளமாக வாழ வாழ்த்துவதோடு இந்த மாணவர்களின் பெறுபேற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபரையும், ஆசிரியர் திருமதி **வாணிஸ்ரீ ஜெயகணேஸ்** அவர்களையும் மனதார வாழ்த்தி நிற்கின்றோம்

**பழைய மாணவர் சங்கம்**
**யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்**

(சு.15914)(13.15.16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை மாணவி
செல்வி **சிவநேசன் பவித்திரா**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு இவரையும் இவருடன் சித்திபெய்திய சக மாணவர்களையும் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று நீடுழி வாழ வாழ்த்து கின்றோம்.

மனிபோட்டோ கராஜ்
முக்கரவத்தை, ஊரிக்காடு,
கெருடாவில் வடக்கு,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்
அம்மம்மா - வி.பாலாமணி
அப்பா- சி.சிவநேசன்
அம்மா - சி.வாசுகி
அண்ணா- சி.கபிலன்

(62168)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
மாணவன்
செல்வன் **செல்வரூபன் தருணன்**
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக வாழ்த்துவதுடன் இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்ரி. அம்மம்மா. மாமா
கந்தசாமி வைரவர் கோயில்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(66930)(13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உயிரோடு விளையாடாதீர்கள்

தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது. போராட்டம் இன்று ஐந்தாவது நாளை எட்டியுள்ள நிலையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நேற்றுப் போராட்டக் கைதிகளுடன் நடத்திய சந்திப்பு வெற்றியளிக்கவில்லை என்பது கவலையளிக்கிறது.

இந்தப் பிரச்சினையை எப்படி முடித்து வைப்பது என்பது தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு இன்னமும் மூன்று மாத கால அவகாசத்தை அவர் கோரியிருக்கிறார். கைதிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

போர் முடிந்து 6 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை முன்னைய கொழும்பு அரசு காணத் தவறியமை கண்டனத்துக்குரியது. இந்தப் பிரச்சினைக்கும் சேர்த்து முடிவு காண்பதாகத் தெரிவித்து பதவிக்கு வந்த தற்போதைய அரசும்கூட அவர்களின் விடுவிப்புக்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கடந்த ஜனவரியில் பதவிக்கு வந்த இந்த அரசு, மீண்டும் மீண்டும் தெற்கில் சிங்கள - பௌத்த - மக்களிடம் இருந்தும் அதன் தலைவர்களிடம் இருந்தும் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில்தான் அதிக நாட்டத்துடன் செயற்படுகிறதே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடன் அது செயற்படவில்லை என்பதைக் கடந்த 9 மாதங்களில் எடுத்துக்காட்டும், எரியும் பிரச்சினையாக, அரசியல் கைதிகளின் பிரச்சினை இருக்கின்றது.

அனைத்துச் சிறைகளிலும் 217க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். கொழும்பு அரசு இவர்களை மூன்று விதங்களில் வகைப்படுத்துகின்றது. முதலாவது வகையினர், பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொண்டிருப்பவர்கள். இரண்டாவது வகையினர் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோதும் இன்னமும் வழக்கு எதனையம் எதிர்கொள்ளாதவர்கள். மூன்றாவது வகையினர் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்.

இவர்களில் முதல் இரண்டு வகையினரையும் விடுவிப்பதில் சட்டச் சிக்கல்கள் இருப்பதாகவும், மூன்றாம் வகையினர் குறித்த விசாரணைகளைத் துரிதப்படுத்தி பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகாதவர்களை உடனடியாக விடுதலை செய்வதாகவும் கொழும்பு அரசு ஏற்கனவே இணங்கியிருந்தது. கைதிகள் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சுகளில் இந்த இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

ஆனால் அந்த இணக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை. அது நிகழ்ந்திருந்தால் கைதிகள் இன்று இவ்வளவு பெரிய போராட்டத்தில் குதித்திருக்க மாட்டார்கள். கைதிகளை விடுவிப்பதில் உள்ள சிக்கல் என்ன என்று சட்ட மா அதிபரிடம் தான் எழுப்பிய கேள்விக்கு இன்னமும் தனக்குப் பதில் கிடைக்கவில்லை என்று கூறி இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நழுவி விடுவதற்கு முயல்கிறார் போன்றும் தெரிகிறது.

நிச்சயமாக இது ஒரு காரணமல்ல. சாட்டுப்போக்கு மட்டுமே. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது என்கிற அரசியல் முடிவைக் கொழும்பு எடுத்துவிடுமானால் அதனைச் செயற்படுத்துவது அதிகாரிகளுக்குச் சிரமமான ஒன்றல்ல. அதனைவிடுத்து அதிகாரிகள் தரப்பின் தாமதத்தினால்தான் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்றது என்பதாகக் காட்ட முற்படுவது ஏமாற்றும் செயல்.

கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வந்த இந்த ஏமாற்று வேலையே, விட்டுக்கொடுப்பு ஏதுமற்ற போராட்டத்துக்குள் தமிழ்க் கைதிகளை இப்போது தள்ளியுள்ளது. ஏற்கனவே 4 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் இந்த விடயத்தில் கொழும்பு அரசும் ஜனாதிபதியும் விரைந்து முடிவெடுக்க வேண்டும். தற்போதைய பட்டினிச் சாவை முடித்து வைக்கும் வகையில் முதற்கட்டமாக, பெரும் குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையாவது விடுவிக்க வேண்டும். அதன் பின்னர் ஏனையவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பது குறித்து ஜனாதிபதி ஒரு காத்திரமான முடிவுக்கு வரவேண்டும்.

தாமதிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் மிகப் பெறுமதியானது. பட்டினிச் சாவுப் போராட்டத்தில் ஈடுபட்ட திலீபனின் சாவு ஏற்படுத்திய விளைவுகளை மறந்துவிடலாகாது. விபரீதங்கள் ஏற்படுவதற்கு முன்னதாக கொழும்பு விரைந்து செயற்பட வேண்டும். உயிர்களோடு விளையாடுவது நல்லதல்ல. அது போர்க் காலத்தோடு முடிந்துபோகட்டும். இனிமேலாவது நம்பிக்கையைக் கொடுங்கள்.



# நல்லாட்சி என்பதற்கு என்னதான் அர்த்தம்?

● மு.ஈழத்தமிழ்மணி

இந்த வருடத்துக்கான மக்களைச் சென்றடைவதற்கான இலகுவான அரசியல் விளம்பரமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமான நூறுநாள் வேலைத் திட்டம், நல்லாட்சி, தேசிய அரசு என்பவை இருந்ததை நாடறியும். இவை மூவினமக்களினதும் வாயில் தினமும் பேசு பொருளாக இருந்தன.

இலங்கை மக்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இந்தக் கோஷத்தில் இருக்கவில்லை. இதனால் நல்லாட்சி, தேசிய அரசு என்பன மக்களை ஈர்க்கக்கூடிய வார்த்தைகளாக மாறின. மகிந்த சிந்தனை, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், வாழ்வின் எழுச்சி என்ற அரசியல் வார்த்தைகள் நாட்டிலிருந்து தேய்ந்து போய் விட்டன. மகிந்த சிந்தனை என்ற வார்த்தைப் பதமானது பாதாம் அல்வா போன்றதாகத் தென்னிலங்கை வாழ் மக்கள் மத்தியில் சுவையாக இருந்தது. மகிந்த சிந்தனை மகிந்த ஆட்சியாளர்களுக்கு சொர்க்க வாசல் கதவுகளைத் திறந்து விட்ட தொன்றாகவே அமைந்தது. ஒன்பது ஆண்டுகள் வரையில் மகிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் தொடக்கம் அமைச்சுச் செயலாளர்கள் மேலதிகாரிகள் வரையில் அளவுக்கு மீறிச் சம்பாதிப்பதற்கும், ஊழல் மோசடிகள் செய்வதற்கும், இலஞ்சம் பெறுவதற்கும், வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் சேமிப்பதற்கும் பக்கபலமாக அமைந்ததும் மகிந்த சிந்தனை தான். மக்களால் பார்க்கப்படுகின்ற நல் லாட்சியில் நூறு நாள் வேலைத்திட்டம் தேசிய அரசில் நல்லாட்சியைக் கொண்டு செல்வதற்கு முக்கிய கொள் கையாக அமைந்தது.

கடந்த ஜனவரி எட் டாம் திகதி நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்த அரசு, நூறு நாள்களைப் பூர்த்தி செய்து கொண்ட பின்னர், கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று அதே ஆட்சி தொடரவும் மக்கள் வழிவகுத்தனர். நல்லாட்சியினர் முன்னெடுத்த வேலைத்திட்டங்களில் அரச ஊழியர்களுக்கும், ஏனைய பொதுமக்களுக்குமான சில சலுகைகள் வரவு – செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டிருந்தன. அரச உத்தியோகத்தர்களுக்கான பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றாகும். ரணிலால் உறுதியளிக்கப்பட்டதுபோல் அது வழங்கப்பட்டது. ஆனால், அவை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்துவழங்கப்படவேயில்லை. சமையல் எரிவாயு, எரிபொருள்கள் , கோதுமை மாவு, சிமெந்து, பால்மா, சீனி உட்பட சில பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. இதனால் நல்லாட்சி மீது மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டது. எந்தக்காலத்திலும் விலை குறைப்புக்களையும், சம்பள உயர்வுகளையும் மக்களுக்கு சாதகமாக வைத் துக் கொள்ளவே முடியாது. அதிருப்திகளின் அளவுகள் கூடிக் கொண்டேயிருக்கும்.

நாட்டில் முக்கிய உணவாகக் கருதப்படுகின்ற நெல்லை ஒரு கிலோ 50 ரூபாவுக்கு விற்பனை செய்கின்ற நிலையை நல்லாட்சியினால் ஏற்படுத்த முடியவில்லை. தேங்காய் மற்றும் புளி, கடலுணவுகள் ஆகியவற்றின் விலைகள் உச்சத்தை எட்டி நிற்கின்றன.

ஐந்து மாதங்களின் பின்னர் நூறு நாள் வேலைத் திட்டத்தில் குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் தற்போது அதிகரித்துவிட்டன. மரக்கறி எண்ணெய், உருளைக்கிழங்கு, சீனி, வெங்காயம், கோதுமை மாவு என்பவற்றின் இறக்குமதித் தீர்வையைச் சடுதியாக உயர்த்தியதன் மூலம் வெளிச் சந்தையில் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. ஒரு கிலோ பொருளுக்கு ஐந்து ரூபா தொடக்கம் 25 ரூபா வரையில் அதிகரிப்புக் காணப்படுகின்றது.

கடந்த மாதம் உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் குறைவடைந்த செய்தியை நாட்டு மக்கள் ஊடகங்களூடாகவும், இணையத்தளங்களூடாகவும் அறிந்தனர். நாட்டு மக்களும் எரிபொருள்களின் விலையை ஒரு லீற்றருக்குக் கணிசமான அளவில் நல்லாட்சி அரசு குறைக்குமென எதிர்பார்த்திருந்தனர். பொதுத் தேர்தலுக்கு முன்னரும் எரிபொருள்களின் விலைக் குறைப்பு நிகழலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித் திருந் தன. அவையாவும் பொய்யாகி விட்டன. மகிந்த ஆட்சியில் வருடத்துக்கு இரு தடவைகளேனும் எரிபொருள்கள் உட்பட பல அத்தியாவசியப் பொருள்கள், போக்குவரத்துக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் உயர்ந்து செல்லும் நிலைமை காணப்பட்டது. பொது மக்களின் வாழ்க்கைச் சுமை எகிறிக் கொண்டு சென்றது. மக்கள் வாழ்க்கைச் சுமையோடு போராடினார்கள். மைத்திரி ஆட்சியில் ஓரளவு ஆறுதல் காணப்பட்டது.

எரிபொருள்களைக் கூட மைத்திரி அரசால் ஏன் குறைக்க முடியவில்லை என்ற கேள்விக்கு மைத்திரியாலோ ரணிலினாலோ, ரவி கருணாநாயக்காவாலோ உரிய பதிலை வழங்க முடியவில்லை. உருளைக்கிழங்கு, சீனி, கோதுமை மாவு, மரக்கறி எண்ணெய், வெங்காயம், பூடு ஆகிய பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ள வேளையில், எரிபொருள்களின் விலையைக் குறைத்து மக்களின் பொருளாதாரச் சுமையை இறக்கியிருக்கலாமல்லவா? எரிபொருள்களின் விலையைக் குறைத்தால் மின்சாரக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணங்கள், உற்பத்திப் பொருள்களின் விலைகள் ஆகியவற்றைக் குறைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இதனால் மக்களுக்கு ஆறுதல் ஏற்பட்டிருக்கும். அதிலிருந்து நல்லாட்சி அரசு தவறிவிட்டது.

கடந்த மாதம் நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஓரளவு அதிகரிக்கப்பட்ட நிலையில், இந்த மாதமும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் சடுதியாக உயரப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களின் விலை கடந்த மாதத்தில் அதிகரிக்கப்பட்டிருந்தது. மீண்டும் அதன் விலையில் அதிகரிப்பு ஏற்படவுள்ளது.

ஒன்பது ஆண்டுகளாக முன்னாள் ஜனாதிபதியான மகிந்த, அரசு பயங்கரவாதிகளை ஒழித்து, நாட்டை மீட்டெடுக்கின்ற வரையில் சம்பள உயர்வையோ, பொருள்களின் விலைக்குறைப்புக்களையோ நாட்டு மக்கள் எதிர்பார்க்காது அரசுடன் ஒருமித்துச் செயற்பட வேண்டும் எனக் கூறியிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னரும்கூட மகிந்த அரசு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைத் தொடர்ந்து அதிகரித்து மக்கள் மீது தாங்கமுடியாத சுமைகளை அதிகரித்திருந்தது.

ஆனால், மைத்திரி ஆட்சியில் நடப்பது என்ன? மகிந்த அரசு வருடத்துக்கு இரு தடவைகள் உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரித்ததுபோல் மைத்திரி –ரணில் தேசிய அரசும் வருடத்தில் இரண்டு தடவைகள் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்கின்ற நிலையை ஏற்படுத்துமா?

மைத்திரி – ரணில் தேசிய அரசு நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற அரசாகவே அமைந்து வருவதாக எண்ணத் தோன்றுகிறது. அமைச்சரவையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பலகோடி ரூபாய்கள் வருடாந்தம் அமைச்சர்களுக்கான கொடுப்பனவு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. நாட்டு மக்களின் பொருளாதாரச் சுமையோ எந்த ஆட்சியிலும் குறைவடைந்து வளமான வாழ்வுக்கு வழிவகுக்காத துர்ப்பாக்கிய நிலை மகிந்த ஆட்சியை அடுத்து மைத்திரி ஆட்சியிலும்கூட நீண்டு செல்லப் போகின்றது. இதுவே யதார்த்தம். இந்த நிலையில் நல்லாட்சி என்ற பெயருக்கு என்ன அர்த்தத்தைக் கொள்ளலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைத்துத் தரப்பினரும் ஏற்கும் வகையில் உள்ளக விசாரணைப் பொறிமுறை

## பரணகம குழுவின் இறுதி அறிக்கையில் பரிந்துரை

காணாமற்போனோர் தொடர்பிலும், போர்க்குற்றங்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் மெக்ஸ்வெல் பரணகம உதயனுக்கு வழங்கிய செவ்வியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

**கே:** காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுமீது நம்பிக்கையில்லை என பலதரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த ஆணைக்குழு கலைக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்கூட அண்மையில் வலியுறுத்தியிருந்தார். இதுபற்றி உங்கள் கருத்து?

**ப:** மேற்படி கூற்றை ஏற்கமுடியாது. மிகவும் சுயாதீனமான முறையிலேயே ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இருக்கின்றன. எமது ஆணைக்குழுவிடம் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளனர். பொது அமர்வுகளை நடத்தும்போது பெருந்திரளான மக்கள் அவற்றில் பங்கேற்று சாட்சியம் வழங்கியுள்ளனர். நம்பிக்கையிருக்கின்றமையால்தானே மக்கள் சாட்சியங்களை வழங்குகின்றனர்...? ஆகவே, நம்பகத்தன்மைபற்றி எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

**கே:** உறவுகளைத் தொலைத்துவிட்டு, அவர்களைத் தேடி அலைபவர்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவரும்போது, அவர்களிடம் ஆடு வேண்டுமா? கோழி வேண்டுமா?" என்றெல்லாம் ஆணைக்குழுவால் கேட்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளால்தானே நம்பகத்தன்மைபற்றி பிரச்சினை எழுகின்றது...?

**ப:** காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவது மாத்திரம் எமது பொறுப்பல்ல. அவர்களின் குடும்பங்களுக்கு எந்தவகையில் உதவுவது என்பது பற்றியும் தேடிப் பார்க்கும் பொறுப்பு எமக்கு இருக்கிறது.

எம்மிடம் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவந்த பலர், பொருளாதாரப் பிரச்சினை குறித்தும் எடுத்துரைத்தனர். தங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களில்இருந்துதான்உதவி கிடைக்கிறது. கோழி, ஆடுகள் ஆகியனவும் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். இவைபற்றி கலந்துரையாடியமை ஒன்றும் தவறில்லை.

காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு உதவுவது பற்றியே நாம் சிந்தித்தோம். ஆனால், அதைச் சிலர் திரிபுபடுத்திவிட்டனர். ஒருவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி வழங்குவது எந்த வகையில் தவறாகும்?

சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. பலர் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பெரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் அல்லர். இவர்களை விடுதலை செய்ய வேண்டும். இடைக்கால அறிக்கையில் இதற்குரிய பரிந்துரையை நாம் முன்வைத்துள்ளோம்.

**கே:** ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில்விசாரணைகள் எந்த மட்டத்தில் இருக்கின்றன? காணாமற்போனவர்களுள் ஒருவரைத்தானும் இதுவரை கண்டுபிடித்துள்ளீர்களா?

**ப:** ஆரம்பத்தில் மூன்று ஆணையாளர்கள்தான் குழுவின் அங்கம் வகித்தனர். விசாரணைகளை விரிவுபடுத்துவதற்காக அந்தத் தொகை ஐந்தாக ஆக்கப்பட்டது. அத்துடன், தனி விசாரணைக் குழுக்களும் அமைக்கப்பட்டன.

மகஸின் சிறைச்சாலை உட்படப் பல இடங்களுக்கு நாம் சென்று தகவல்களைத் திரட்டியுள்ளோம். வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் உதவியைக் கோரியுள்ளோம். உரிய சாட்சியங்கள் இருப்பின் வழக்குத் தொடர்வதற்கு நாம் பரிந்துரை செய்வோம். அதற்குரிய அதிகாரம் எமக்கிருக்கிறது.

அதேவேளை, காணாமற்போனவர்களுள் மூவர் மாலைதீவு சிறைச்சாலையில் இருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது. இதுபற்றி விசாரணை நடத்துவதற்கு வெளி விவகார அமைச்சின் உதவியைக் கோரியுள்ளோம்.

**கே:** பரணகம ஆணைக்குழு கலைக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றதே...?

**ப:** இதுபற்றி எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆணைக் குழுவைக் கலைப்பதற்குரிய அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அவர் நினைத்தால் இதைச் செய்யமுடியும். எனவே, ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியாகும்வரை எமது பணிகள் தொடரும்.

**கே:** ஆணைக்குழு கலைக்கப்பட்டால், காணாமற்போனோர்கள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு என்ன நடக்கும்?

**ப:** ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை அவரால் நடைமுறைப்படுத்தவும் முடியும். நடைமுறைப்படுத்தாமல் விடவும் முடியும்.

ஆணைக்குழுவைக் கலைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தால், எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு உள்ளிட்ட தகவல்களை நாம் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைப்போம்.

**கே:** இராணுவத்தின் உயர் அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தினீர்கள். இதன்போது எத்தகைய தகவல்கள் வெளியாகின?

**ப:** காணாமற்போனோர் தொடர்பில் மாத்திரம் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்த எமது ஆணைக்குழுவின் விடயப்பரப்பு, காலப்போக்கில் சர்வதேச போர்விதி மீறல்கள் பற்றியும் ஆராயும் வகையில் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் போர்விதி மீறல் தொடர்பிலேயே இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அந்த அறிக்கை தற்போது ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது எதிர்வரும் 20ஆம் திகதியளவில் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**கே:** இராணுவ அதிகாரிகள் எத்தனை பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது?

**ப:** இறுதிக்கட்டப்போர் பற்றி மாத்திரமே விசாரிக்கப்பட்டது. அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழு, தருஷ்மன் அறிக்கை, சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகள், போர் தொடர்பில் உள்நாட்டில் வெளியிடப்பட்ட நூல்கள் ஆகியவற்றையும் விசாரணையின்போது கருத்தில் கொண்டே இறுதி அறிக்கையைத் தயாரித்தோம்.

**கே:** போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இறுதி அறிக்கையில் எவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது?

**ப:** இறுதி அறிக்கை இன்னமும் வெளியாகவில்லை. அதன் உள்ளடக்கம் பற்றிக் கருத்து வெளியிட முடியாது.

எதுஎப்படியிருந்தபோதிலும், உள்ள சட்ட கட்டமைப்பின் பிரகாரம் நடவடிக்கைகள் இடம்பெறும் வகையில் விசாரணைப் பொறிமுறையொன்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பொறிமுறை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையும்.

**கே:** டெஸ்மன் டி சில்வா தலைமையிலான சர்வதேச ஆலோசனைக் குழுவிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டீர்கள்?


**ப:** சர்வதேசச் சட்டம் எவ்வாறு மீறப்பட்டுள்ளது? போரின்போது மனித உரிமைச் சட்டம் எவ்வாறு நடைமுறையில் இருக்கவேண்டும் என்பது உட்பட சட்ட ரீதியிலான விடயங்கள் தொடர்பில் அவர்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டன. அவர்களும் முழு ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

அதேவேளை, எமது ஆணைக்குழுவிடம் சாட்சியம் வழங்க வந்தவர்களை நாம் ஒருபோதும் புறக்கணிக்கவில்லை. அவர்களுக்கு ஏதோ ஒருவகையில் ஒத்துழைப்பையே வழங்கியுள்ளோம்.

> “
> **மகஸின் சிறைச்சாலை உட்படப் பல இடங்களுக்கு நாம் சென்று தகவல்களைத் திரட்டியுள்ளோம். வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் உதவியைக் கோரியுள்ளோம். உரிய சாட்சியங்கள் இருப்பின் வழக்குத் தொடர்வதற்கு நாம் பரிந்துரை செய்வோம். அதற்குரிய அதிகாரம் எமக்கிருக்கிறது.**
> **அதேவேளை, காணாமற்போனவர்களுள் மூவர் மாலைதீவு சிறைச்சாலையில் இருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது. இதுபற்றி விசாரணை நடத்துவதற்கு வெளி விவகார அமைச்சின் உதவியைக் கோரியுள்ளோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவில் கவனம் தேவை!



இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்த உணவில் கவனம் செலுத்த வேண்டும்.

இரத்தக் கொதிப்பு ஒரு தனிப்பட்ட வியாதி அல்ல. அது சுகவீனத்தின் அடிப்படையான ஒரு குறியே.

சுவாசம் சீராக வேண்டும். தீர்க்கமாக மூச்சு இழுத்து விட்டுப் பழக வேண்டும். இரத்தக் கொதிப்பு இரத்தக் குழாய்களையும் இருதயத்தையுமே சார்ந்தது. ஆகவே அது உடலில் ஓடும் இரத்தத்தைப் பொறுத்திருக்கிறது.

தினசரி கவனமாகப் பயிற்சி செய்யுங்கள். இது உடலை நன்றாக வைத்திருக்கும். குருதி ஓட்டம் சரியாக நடைபெறுவதற்கு இது பெரிதும் துணை செய்யும்.

அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உடல் அதிர்ச்சியும் மனக் கிளர்ச்சியும் இரத்தக் கொதிப்பை அதிகம் உண்டாக்கும். உடலுழைப்பின் பொழுது, உணவு வேளைக்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். இரவு குறைந்தது எட்டு மணி நேரம் தூங்க வேண்டும்.

மலம் தினசரி கழிய வேண்டும். மலச்சிக்கல் அதிகம் இருப்பின் குருதி ஓட்டம் மெதுவாகி, இரத்தக் கொதிப்பு ஏற்படக் காரணமாகிறது.

பச்சைக் காய்கறிகள், பழங்கள், போன்றவற்றையும் நல்ல காரச் சத்துள்ள உணவுகளையும் உண்பது அவசியம்.

இறைச்சி சாப்பிடக் கூடாது. இரத்தக் கொதிப்பு ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும், கொலஸ்ரோல் என்ற வழவழப்பான ஒரு பொருள் குருதி நாடிகளைத் தடிக்கச் செய்யும். இந்தக் கொலஸ்ரோல் இறைச்சியில் அதிகம் உண்டு.

ஆகவே, இறைச்சிக்குப் பதிலாக பால், பாலாடை, அவரை, பட்டாணி, பீன்ஸ், கொட்டைகள், முழுத் தானியங்கள் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டும்.

இரத்தக் கொதிப்பை வெள்ளைப் பூண்டினால் குறையுங்கள். இதனால் இரத்தக் கொதிப்பு விரைவில் தணிகிறது. பதார்த்தங்களுக்கு ருசி கொடுக்கவும், சூப் வகைகளுக்கும் வெள்ளைப் பூண்டு உபயோகமாகிறது.

பூண்டைச் சிறிது சிறிதாக நறுக்கி, ஒரு கோப்பை பாலில் காய்ச்சி, இரவில் சாப்பிட்டால் நல்ல டொனிக் போல் அமையும்.

கோபம், பொறாமை, பகை, கவலை ஆகியவை மூளையைப் பாதிப்ப தோடல்லாமல், இரத்தக் கொதிப்பையும் அதிகமாக்குகிறது. எனவே எப்பொழுதும் மன அமைதியோடு சந்தேஷமாக இருங்க முயலுங்கள்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மனக்கட்டுப்பாடு அவசியம்

இன்று உள்ளதைக் கொண்டு அதில் பங்கு கொள். அழிந்து போன கரடு முரடான பாதையில் சென்று உனது சக்தியை வீணாக்காதே. உன்னருகே உள்ள புதிய செப்பனிடப்பட்ட, நன்கு வகுக்கப்பட்ட ராஜபாதையில் செல். வா! உன்னை அழைக்கிறோம். அன்புள்ளவன் இதை அறிந்து கொள்வான்! எல்லாப் பேய்களும் எம்முடைய மனத்திலே தான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கி இருந்தால், எந்த இடத்தில் நாம் இருந்தாலும், எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 600 | 800 | 700 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 350 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | 600 | – |
| பாரை | 400 | 300 | 500 | 450 | 400 | 370 |
| சுறா | 450 | 350 | 600 | 500 | 400 | 400 |
| சீலா | 200 | 300 | 400 | 300 | 200 | 350 |
| விளை | 500 | 400 | 400 | 350 | – | – |
| முரல் | 200 | 200 | 400 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 200 | 300 | 400 | 300 | 200 | – |
| கிழாக்கன் | 300 | 800 | 300 | 400 | – | – |
| ஒரா | 300 | 300 | 350 | 350 | – | – |
| திரளி | 150 | 200 | 250 | 300 | 100 | 200 |
| நகரை | 100 | 200 | 200 | 300 | 100 | 200 |
| சூடை | 100 | 100 | 100 | 120 | 50 | 80 |
| ஒட்டி | 150 | 150 | 250 | 300 | – | 200 |
| திருக்கை | 100 | 250 | 250 | 280 | 100 | 120 |
| பாலை | 250 | 200 | – | 200 | 200 | – |
| வாளை | 80 | 100 | | 100 | 100 | 200 |
| கொய் | 80 | 100 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 100 | 200 | 200 | 250 | – | 350 |

## நாளை

புரட்டாதி-30
சனிக்கிழமை
17.10.2015

திதி: சதுர்த்தி
மு.ப.11.02
நட்சத்திரம்:
அனுசம்
மு.ப.10.19 வரை
சுபநேரம்:
09.02-10.32 வரை
இராகு காலம்:
03.02-4.32

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 40 | 80 | 35 |
| கத்தரி | 70 | 60 | 80 | 80 | 60 | 60 | 80 | 35 |
| கரட் | 50 | 120 | 60–120 | 70 | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 80 | 80 | 120 | 100 | 20 |
| பாகல் | 200 | 120 | 200 | 200 | 120 | 120 | 110 | 100–120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 70 | 70 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 100 | 130 | 100 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 120 | 60 | 100 | 120 | 60 | 120 | 100 | 100 |
| பூசணி | 80 | 40 | 40 | 40 | 40 | 60 | 50 | 30–40 |
| தக்காளி | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 50–60 | 40 | 60 | 35 |
| கீரை | 30 | 40 | 40 | 10 | 40 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 150 | 140 | 200 | 140 | 140–160 | 200 | 200 | 100 |
| புடோல் | 50 | 60 | 40 | 50 | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 60 | 80 | 100 | 45–50 |
| வெண்டி | 80 | 60 | 80 | 60 | 80 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 160 | 160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 60 | 80 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 60 | 40–60 | 50–55 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 120 | 120 | 100 | 100–12[illegible] |
| தேசிக்காய் | 280 | 240 | 250 | 280 | 240 | 600 | 160 | 250 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 140 | 140 | 80 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 30 | 80 | 90 | 120 | 60–70 |

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 6 | | 2 | | 7 | 4 | |
| | 1 | 3 | | 7 | 6 | | | |
| | | | | | | | | 3 |
| | | 1 | | | 8 | | | |
| 2 | 8 | | | 9 | | | 5 | 6 |
| | | | 3 | | | 8 | | |
| 9 | | | | | | | | |
| | | | 2 | 8 | | 6 | 3 | |
| | 6 | 8 | | 3 | | 9 | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 |
| 6 | 1 | 8 | 7 | 2 | 5 | 3 | 4 | 9 |
| 9 | 3 | 7 | 1 | 4 | 6 | 8 | 5 | 2 |
| 7 | 8 | 6 | 2 | 3 | 1 | 5 | 9 | 4 |
| 5 | 4 | 1 | 6 | 7 | 9 | 2 | 3 | 8 |
| 3 | 2 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 | 6 |
| 1 | 9 | 2 | 3 | 6 | 4 | 7 | 8 | 5 |
| 4 | 6 | 3 | 5 | 8 | 7 | 9 | 2 | 1 |
| 8 | 7 | 5 | 9 | 1 | 2 | 4 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையே படி தாண்டு!

இன்றைய பெண்கள் தம்மை சக்திமிக்கவர்கள் எனக் கருதிய போதிலும் சமூகத்தின் பார்வை அதுக்கு எதிர்மறையாகவே உள்ளது என்பதை நேற்றைய தொடரில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இன்று பார்ப்போம்.

பெண்கள் மீதான நேர்மறை பார்வையை ஆண்களுக்கு ஏற் படுத்துவதிலும் அவர்களுக்கான உரிமையைப் பெற அனுமதிப் பதிலும் பெண்ணின் பங்கும் அவசியமாகிறது. ஒரு தாய் தனது ஆண் குழந்தைக்கு பெண் மீதான மரியாதையை இளம்பருவம் முதலே விதைத்தால் இது சாத்தியம். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்க ளும் ஆண்,பெண் பேதமற்ற சமூகம் அமைய உழைக்க வேண் டும். ஒரு ஆண் குடும்ப வாழ்க்கைக்கு ம னதளவில் தயார் ஆகின்றான் என்றால், பெண் என்பவள் ம னதளவிலும் உடல் அளவிலும் தயார் ஆகிறாள் என்பதை இந்த உலகுக்கு உரக்கச் சொல்ல மேற்சொன்ன இருதரப்பாராலும் முடியும். தனது மகன் பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டு குற்றவாளிக்கூண்டில் நிற்கும் நிலை ஏற்பட்டால், அந்த அவமா னம் தனக்கும் தான் என்பதை தந்தையும் உணர்ந்து ஆண் பிள்ளை களுக்கு வழிகாட்ட வேண்டும். இளமையில் பெண்கள்தடம்புரளுவதைத்தடுக்கும்விதமாககல்விமுறையும் மாற வேண் டும். இளமையில் காதல் என்பது முழுக்க மனம் சார்ந்ததல்ல. ஒரு உயரிய நிலைக்கு வந்த பின்பு ஆண்கள் மீதான புரிதலே உண்மையானது என்பதை அவர்களுக்கு கல் வியின் ஊடாக சொல்ல வேண்டியதும் அவசியமாகிறது.

இன்றைய சூழலில் பெண்ணுக்குப் பொறுப்புகள் அதிகமாக் கப்பட்டுள்ளன, பெண்ணின் மகிழ்ச்சி. சுதந்திரம் அனைத்தும் தியா கம் என்பதற்குள் முடக்கப்பட்டுள்ளது. பண்பாடு எனும் சொல் லால் பெண்களை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைத்தி ருக்கிறது இந்தச் சமூகம். தான் சார்ந்த தேவைகளான ஆடை, அலங்காரம் போன்றவைகளுக்குக் கூட, கணவனின் அனுமதி தேவைப்படுகிறது. ஒரு ஆறிப்போன தேநீருக்காக அவள் மீதான கணவனின் அடக்குமுறையை இன்னும் தாங்கிக் கொண்டிருக்கிறது பெண்கள் சமூகம். கள்ளிப்பாலுக்கும், நெல் மணிகளுக்கும் தப்பி பிழைத்த பெண்கள்தான், இன்று தாம் சார்ந்துள்ள துறைகளிலுள்ள வக்கிரப்புத்திக்காரர்களிடம் ஒவ்வொரு நொடியும் தப்பிப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீதான வன்மம் எந்த நேரம் கட்டவிழ்த்து விடப்படுமோ எனும் அச்சத்திலேயே தமது அலு வல்களைத் தொடர்ந்து கொண் டிருக்கிறார்கள். மாத விலக்கு சமயங்களில் பெண்களுக்கு எதிரான வன்மங்கள் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தனது வீட்டு உறுப்பினர்களே அவர்களைப்படுத்தும் பாட்டை எண் ணும் போது நாமெல்லாம் ஒரு கணம் தலைகுனிய வேண்டியுள்ளது. உடை சார்ந்த விடயங்களிலும் இந்தச் சமூகம் பெண்கள் மீது அடக்கு முறையையே கையாளுகிறது. நமது பார்வை பெண்களின் உணர்வுகளைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமே தவிர, உடை சார்ந்ததாக இருக்கலாகாது. ஏனெ னில் உணர்வுகள் சார்ந்த பார்வை தான் நிலையாக இருக்கும், உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத எவனுக்கும் அவர்கள் அணியும் உடையில் தலையிட அருகதை இல்லை. இப்படிப் பெண்களுக்கெதிராக ஒட்டுமொத்தச் சமூகமே வரிந்துக் கட்டிக்கொண்டு இறங்கி யிருக்கும் போது, ஆண்களை மட்டும் மாறச் சொல்வதும், நமக்கான சுதந்திரத்தையும் மரியாதையை யும் இந்தச்சமூகம் பெற்றுத்தரும் என்று பெண்களின் மனிதசக்தி அடுப்பங்கரையில் பொசுங்கிப் போவதும் ஏற்புடையதல்ல.




இன்று ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் சாதித்துக்கொண் டிருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்கதே. ஆனாலும், அவர் கள் சுதந்திரமாகவும் தமது விருப்பங்களுக்கேற்பவும் செயற் படுகிறார்களா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும். பெண்கவிஞர்களும் எழுத்தாளர்களும் புறப்பட்டு இருக் கிறார்கள். ஆனாலும் சற்று முன் உரித்த வெங்காயத்தின் வாசனை மாறாத அதே கைகள் தான் கவிதைகள் வடிக்கின்றன. கரண்டி பிடித்த தடம் மாறாத அதே கைகள்தான், பேனா பிடிக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பல தடைகளைத் தாண்டி அவர்கள் சாதனை படைத்துக் கொண்டி ருக்கிறார்கள் என்பதே மற்றப் பெண்கள் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பாடம். அவர்கள் அதிகம் எழுதுவது பெண் ணுக்கு எதிரான வன்முறைகளையும், அனுபவித்த இன்னல் களையும் தான். இதுவே அவர்கள் மீதான சமூகத்தின் அடக்குமுறைகள் இன்றளவும் தொடர்கிறது என்பதற்குச் சாட்சி. பெண் என்பவள் கடலுடன் கலந்து தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நதி போன்றவள் என்பதையும், அன்பைக் கொடுத்து அன்பைத் தேடினால் பூவாக மலருபவள் என்பதையும் இந்தச் சமூகம் உணர்ந்து ஒரு பெண்ணாக இருப்பதில் தடையில்லை எனும் உணர்வை பெண்களின் ஆழ்மனதில் ஏற்படுத்தினால் இந்த உலகம் பெண்மையில் மூழ்கி ஆயிரம் அடுக்குகள் கொண்ட மலராக மலர்ந்து மணம் வீசும் என்பது மட்டும் திண்ணம்.


இன்னமும் பெண்ணுரிமைக்கு ஆண்கள் குரல் கொடுப்பார்கள் என்றில்லாமல், தனது உரிமைகளைப் பெற பெண்களே முன்வர வேண்டும். பெண்கள் தமக்கு உண்டான பொறுப்புக் களை உணர்ந்து சாதிக்கப் புறப்பட வேண்டும். அதற்கான அங் கீகாரத்தை இந்த ஆண்கள் சமூகம் கொடுக்காது. அப்படியே கொடுத்தாலும் கூடவே ஒரு கயிற்றைக் கட்டி விட்டு ஆண்களின் எல்லையைத் தாண்டாமல் கவனமாகப் பார்த்துக் கொள் ளும்.

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## சிங்கம்



அடக்குமுறையைக்கண்டு அஞ்சாமல் நியாயத்துக் காகப் போராடும் நீங் கள், எவருக்காகவும் கொண்ட கொள்கை, குறிக்கோள்களிலிருந்து பின்வாங்க மாட்டீர்கள். ராசிநாதன் சூரியன் இந்த மாதம் முழுக்க ராசிக்கு 3 இல் அமர்ந்ததால் உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதை விட்டு, அறிவு பூர்வமாகப் பேசுவீர்கள், செயற்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப் பீர்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கை மாற் றாக வாங்கியதைத் தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். புதன் 27 ஆம் திகதி முதல் ராசிக்கு 3 ஆம் வீட்டில் நிற்பதால் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்குகூடும். ஆனால், குடும்பத்தில் கணவன்–மனைவிக்குள் 4 ஆம் வீட்டில் சனி அமர்ந்து அட்டமத்துச் சனியாக இருப்பதால், தாயாருக்கு மருத் துவச் செலவுகள் ஏற்படும். உங்களுக்கும் கை, கால்கள் வலிக்கும். சோர்வு, அலுப்பு வந்து போகும். மனைவி வழியில் சின்னச்சின்ன மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் பெரியளவில் வெற்றி வாய்ப்புகள் தேடி வரும். புது வாகனம், ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். செவ்வாய் இந்த மாதம் முழுக்க சாதக மான வீடுகளில் செல்வதால் பணவரவு உண்டு. விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பழைய சொத்தை விற்று புது வீடு வாங்குவீர்கள். சகோதர வழியில் ஒற்றுமை பலப்படும். தள்ளிப்போன திருமணம் கைகூடி வரும். மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். ஜென்ம குரு நடப்பதால் அவ்வப்போது கோபப் படுவீர்கள். தாழ்வு மனப்பான்மை ஏற்படும். மற்ற வர்களு டன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்க ளின் தனித்தன்மையைப் பின்பற்றுவது நல்லது. அரசியல் வாதிகளே! கட்சி மேலிடம் உங் களை நம்பி சில போராட்டங்க ளுக்கு தலைமை தாங்க வைக் கும். கன்னிப் பெண்களே! பெற் றோர் பக்கபலமாக இருப் பார்கள். காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள்.



மாணவர்களே! அன்றய பாடங் களை அன்றே படியுங்கள். உயர் கல்வியில் வெற்றி பெறுவீர் கள். வியாபாரத்தில் அதிரடிச் சலு கைகளை அறிவித்து இலாபம் ஈட்டுவீர்கள். வேலையாள்கள் கட மையுணர்வுடன் செயற்படு வார்கள். பங்குதாரரால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வீர்கள். வாடிக்கையாளர்களின் கருத் தைக் கேட்டு கடையை இடமாற் றம் செய்வீர்கள். ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். மூலிகை, மர வகைகளால் இலாபம டைவீர்கள். உத்தியோகத்தில் சின்னச்சின்ன இடர்ப்பாடு களைச் சமாளிக்க வேண்டி வரும். அதிகாரிகள் உங்களை நம்பி புதுப் பொறுப்பை ஒப்படைப்பார்கள். சக ஊழியர் களை உதாசீனப்படுத்த வேண்டாம். அலுவலக விடயங் களை வெளியிட வேண் டாம். கலைத்துறையினரே, மூத்த கலைஞர்களின் வழி காட்டல் மூலம் வெற்றியடைவீர்கள். விவசாயிகளே! நீர்ப்பாசனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். ஆரோக் கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய மாதமிது.

**இராசியான திகதிகள்:**

ஒக்ரோபர் 21, 22, 23, 24, 30, 31, நவம்பர் 1, 2, 8, 9, 10.

**சந்திராஷ்டமம்:**

ஒக்ரோபர் 25, 26 வரை சந்திராஷ்டமம் நீடிப்பதால் எதிர் பார்ப்புகள் தாமதமாகி முடியும்.

**பரிகாரம்:**

உங்கள் சொந்த ஊர் காவல் தெய்வத்தை தரிசித்து வாருங்கள். அன்னதானம் செய்யுங்கள்.

## கன்னி



எதிரிக்கும் நல்லதே நினைக் கும் மனம் படைத்த நீங்கள், எப்போதும் ஒற்றுமை உணர் வுக்கு உரம் அளிப்பவர்கள். 12 இல் குரு நிற்பதால் சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத் துவார்கள். ஆன்மிகப் பய ணங்கள் அதிகரிக்கும். கோயில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். ராசிநாதன் புதன் 27 ஆம் திகதி முதல் ராசிக்கு 2 ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் இங்கிதமாக, இதமாகப் பேசி பல முக்கிய காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். ராசிக்குள்ளேயே ராகு நிற்பதால் அவ்வப்போது பெரிய நோய் இருப்பதைப்போல நீங்கள் உணருவீர்கள். சூரியன் 2 ஆம் வீட்டில் நிற்பதால் அத்தியாவசியச் செலவுகள் அதி கமாகும். அரச காரியங்கள் உடனே முடியும். உங்களின் தனபாக்யாதிபதியான சுக்கிரன் 2 ஆம் திகதி வரை ராசிக்கு 12 ஆம் வீட்டில் மறைந்திருந்தாலும் 3 ஆம் திகதி முதல் ராசிக்குள் நுழைவதால் உற்சாகமடைவீர்கள். 5 ஆம் தி கதி வரை உங்கள் ராசிக்கு 12 ஆம் வீட்டிலேயே அமர்ந்து கொண்டு கொஞ்சம் தொந்தரவுகளையும், கஷ்டங் களையும், தூக்கமின்மையையும் தந்து கொண்டிருக்கும் செவ்வாய், 6 ஆம் திகதி முதல் ராசிக்குள் நுழைவதால் போராட்டங்கள் விலகும். மனஉளைச்சல், இறுக்கம் நீங்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். அவர்களின் உடல் நிலை சீராகும். பூர்வீகச் சொத்துப் பிரச் சினைகள் உங்களுக்குச் சாதகமாக முடியும். சனிபகவான் 3 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் மனோபலம் அதிகரிக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை மீளச் செய்வீர்கள். சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். அரசியல்வாதிகளே! எந்தக் கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப் பாருங்கள். கன்னிப் பெண்களே! கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். உங்கள் கல் வித்தகுதிக்கேற்ப புது வேலை அமையும். மாணவர்களே! போட்டித் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். ஆசிரியரின் பாராட் டைப் பெறுவீர்கள். கெட்ட நண் பர்களிடமிருந்து விடுபடுவீர்கள். வியாபாரம் செழிக்கும். புது ஒப்பந்தங்களால் இலாபம் பெருகும். வேலையாள்களின் ஒத் துழைப்பு அதிகரிக்கும். தேங்கிக் கிடந்த சரக்குகளை விற்று முடிப் பீர்கள். குறைந்த இலாபம் வைத்து விற்பதன் மூலம் வாடிக்கையாளர் கள் அதிகமாவார்கள். ஆபரணங் கள் மூலம் இலாபமடைவீர்கள். பழைய பங்குதாரரை மாற்றுவீர் கள். உத்தியோகத்தில் நிம்மதி கிடைக்கும். உயரதிகாரிகளே வியக்கும்படி சில முக்கிய காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். சக ஊழியர் களுக் காகப் பரிந்து பேசுவீர்கள். கலைத்துறையினரே! உங்களின் புகழ் கூடும். சம்பள வருமதி கைக்கு வரும். விவசாயிகளே! விளைச்சல் அதிகரிப்பதால் சந்தோசம் நிலைக்கும். வங்கிக்கடன் உதவி கிடைக்கும். சிக்கனமும், விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும் தேவைப்படும் மாதமிது.

**இராசியான திகதிகள்:**

ஒக்ரோபர் 18, 19, 23, 24, 25, 26, நவம்பர் 1, 2, 3, 4, 5, 6, 11, 13, 14.

**சந்திராஷ்டமம்:**

ஒக்ரோபர் 27, 28 வரை சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**பரிகாரம்:**

ஸ்ரீ ராமரைத் தரிசித்து வாருங்கள். சிறுவர்களுக்கு உதவுங்கள்.

சிறுவர் இல்லங்களுக்குச் சென்று இயன்றளவு உதவி செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குறையா..? நிறையா..?

வறியவர் ஒருவர் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தனது வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தண்ணீர் எடுத்துவர அவர் இரண்டு பானைகளை வைத்திருந்தார். அந்தப் பானைகளை ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டுத் தடியைத் தோளில் சுமந்து செல்வார்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வரும் பொழுது, குறையுள்ள பானை யில் பாதியளவு நீரே இருக்கும்.


குறையில்லாத பானைக்குத் தனது திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எசமானனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது. 'ஐயா! எனது குறையை நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் எனது குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப்பளு மிகவும் அதிகரிக்கிறது. எனது குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரிசெய்யுங்கள்' என்றது. அதன் எசமானன் 'பானையே! நீ ஒன்றைக் கவனித்தாயா? நாம் வரும்பாதையில், உனது பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழிநெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். நீ தினமும் சிந்திய தண்ணீரில் அவைகள் இன்று பெரிதாக வளர்ந்து எனக்குத் தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன்.



மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்' - என்றார். இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தனது வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.





சிறுவர், இளவல்கள் வட்டம் பகுதிகளுக்கான கதை, கவிதை, பல்சுவைத் தகவல்கள் குறித்த உங்களது ஆக்கங் களை இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். சிறப்பான ஆக்கங்களுக்குப் பரிசுகளும் உண்டு.

## அறிவோம் தெளிவோம்

- மனித உடலிலேயே மூக்கின் நுனிதான் மிகவும் குளிர்ச்சியான பாகம்.
- பிரேஸில் நாட்டில் ஒருவகை வண்ணத்துப்பூச்சி உள்ளது. இது சொக்லேட் நிறத்தில் காணப்படும். இது பறந்து செல்லும் போது சொக் லேட் வாசனை அடிக்குமாம்!
- தேங்காய் என்பது காயும் அல்ல கனியும் அல்ல. அது ஒரு விதை.
- பிறந்த குழந்தை என்னதான் அழுதாலும் கண்ணீர் மட்டும் வராது. ஏனென்றால் கண்ணீர்ச் சுரப்பி வளர்ந்து செயற்படுவதற்குக் குறைந்தது 15 நாள்களாவது ஆகும்.
- 11 நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு சீனா.
- தவளைகள் தண்ணீரில் வாழ்ந்தாலும் அந்தத் தண்ணீரைக் குடிக்கவே குடிக்காது.
- மனித உடலில் உள்ள குருதி நாளங்களின் மொத்த நீளம் ஒரு லட்சம் கிலோமீற்றர்.
- யுரேனஸ் சூரியனை ஒருமுறை சுற்றி வர 84.01 ஆண்டுகள் எடுக்கும்
- 2050 ஆம் ஆண்டில், எமது மூளையில் நிறைந்திருக்கும் அத்தனை தகவல்களையும் கணினியில் பதிவு செய்து விட முடியும் எனக் கணித்திருக்கின்றனர் விஞ்ஞானிகள்.
- விஞ்ஞானிகள் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் பிங்கர் பிரிண்டிங் தொழில்நுட்பத்தின் மூலம், கைரேகையைப் பதிவைக் கொண்டே போதை மருந்து உட்கொள்ளுதல், வெடி குண்டு பயன்படுத்துதல், இதய நோய், அனீமியா ஆகிய விடயங்களைக் கண்டறிய முடியும்.
- சூரிய மண்டலம் தோன்றுவதற்கு முன்பே உருவான வைரம், இப்போது ஒரு விண்கல்லில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- உலகில் மிகக் கொடூரமான நில நடுக்கம் 1557 இல் சீனாவில் இடம்பெற்றது. இதில் சுமார் 8 லட்சம் மக்கள் இறந்துள்ளனர்.

(தொடரும்)

# மாணவப்பருவம் ஏன் முக்கியத்துவமானது ?



கடவுள் எம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் குறிப்பிட்ட சில விடயங்களைப் பொதுவாகக் கொடுத்து இருக்கிறார். அதில் வயது என்பது மிகவும் முக்கியமானது என்றே குறிப்பிடலாம்.

ஒவ்வொரு மனித உயிரும் நிச்சயமாக ஒரு பருவத்தைத் தாண்டி முதுமை எனும் பருவத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற கட்டாயத்தில்உள்ளது. ஆனால் அவற் றில் மிக முக்கியமான பருவம் ஒன்று உள்ளது. அதுதான் இளமைப் பருவம் அல்லது மாணவப்பருவம். (14 வயது முதல் 24 வயது எனக் குறிப்பிடலாம்) ஆனால் இந்த வயதில்தான் ஒரு மனிதன் தனது வாழ்வைத் தீர்மானிக்கிறான் என் பதைப் பலர் அறிவது இல்லை.

**இந்தப் பருவம் மிகவும் முக்கியத்துவமானது**

**1.ஒழுக்கத்தின் அடிப்படை**

உங்களது முழு வாழ்க்கையின் அடிப் படை ஒழுக்கம்தான். இந்தப் பருவத்தில் தான் உங்களுக்குள் ஒழுக்கம் கட்டியெழுப்பப் படுகின்றது. - 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பார்கள். இதன் காரணம் இந்தப் பருவத்தில் உங்களின் மூளையில் எளிதாக பழக்கங்களை விதைக்க முடியும். அதனால்தோ தீய்தோ உண்மையில் இந்தப் பழக்கங்கள் தான் பிற்காலத்தில் உங்களது மீதி வாழ்வை வழி நடத்தும்.

**2.திறமையை வளர்த்தல்**

இந்தப் பருவத்தில்தான் உங்களிடம் கற்றுக் கொள்ளும் திறன் மிகவும் அதிகமாக இருக்கும். காரணம் உங்களின் 'குழந்தைப் பருவத்தைப் போன்றே புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் இந்தப் பருவத்தில் அப்படியே இருப்பதால் மாணவர்கள் எளிதாக எதையும் கற்றுக்கொள்ள முடியும்.

**3.ஆரோக்கியமான உடல்**

பொதுவாக இந்தப் பருவத்தில் உடல் எந்த ஒரு கடினமான பயிற்சிக்கும் ஒத்துழைக்கும் அளவுக்கு மிகவும் வளைந்து கொடுக்கும் தன்மையைக் கொண்டு இருக்கும். உங்களுக்கு எந்தத் துறையில் ஆர்வம் இருக்கிறதோ அதனைக் கற்றுக்கொள்ளும் அளவுக்கு உடல் மிகவும் திடமாக இருக்கும்.

**4.வாய்ப்புக்கள் மற்றும் முயற்சிகள்**

இந்த இளமைப் பருவத்தில் பல அருமையான வாய்ப்புக்கள் கல்வி ரீதியாகவும் வேலை வாய்ப்பு ரீதியாகவும் மிகவும் அதிகமாகக் காணப்படும். காரணம் மற்ற வயதினர்கள் ஒரு துறையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து விடுவார்கள். ஆனால் இந்தப் பருவத்தில் என்ன இலக்கை நீங்கள் அடையப் போகிறீர்கள் என்று நீங்கள் தான் முடிவெடுக்கும் அருமையான வாய்ப்பு உங்களுக்குக் கிட்டுகிறது.

**5.பெற்றோர்களின் அரவணைப்பு**

இந்த வயதில் உங்களது அனைத்துத் தேவைகளையும் பெற்றவர்களே பூர்த்தி செய்து விடுவதால், அடிப்படை வாழ்வாதாரம் குறித்த எந்த ஒரு பயமோ அல்லது கவலையோ தேவைப்படுவது இல்லை. அதனால் உங்களின் திறமையை வளர்த்துக் கொள்வதைத் தவிர, வேறு எந்த ஒரு பணியும் உங்களுக்கு இல்லை. உங்களது வாழ்க்கையைத் தீர் மானிக்கும் முக்கியமான பணி மட்டும் தான் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரால் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.16

வேலணை மண்கும்பான் பகுதியில் களவாக மாடுபிடித்த இருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை மாட்டிக் கொண்டனர். இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர் புடைய மேலும் ஏழு பேர் தப்பி விட்டனர் என வேலணை விவசாய சம்மேளனத் தலைவர் பி.சீவரத்தினம் தெரிவித் துள்ளார். இந்தப் பகுதியில் இறைச் சிக்காக மாடுகள் களவாளப் படுவது அதிகரித்துள்ளதாகவும் வெட்டப்பட்ட மாடுகளின் இறைச்சியை உடைகளுக்குள் போட்டு மறைத்துக்கொண்டு சில திருடர்கள் சென்று விடுகின்றார்கள் எனவும், உரிமையாளர்கள் இல்லாத காணிகளில் அனு மதியின்றி திருட்டுத்தனமாகப் பனைகள் தறிக் கப் படும் சம்பவங்களும் இடம் பெறு வதாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ஐ-7)

## தேவை

தங்கி நின்று வேலை செய்யக் கூடிய சகல வாகனங்களும் ஓட்டக்கூடிய வாகன சாரதிகளும் தோட்ட வேலை செய்பவர்களும் தேவை.

தொடர்பு- 077 7740 958

## வீடு வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி A-9 வீதியில் இருந்து நுணாவில் எல்லை ஒழுங்கையில் இருந்து 50 யார் தூரத்தில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு- 077 664 14 99

(64017)

## காணி விற்பனைக்கு

அரியாலையில் 2¼ பரப்புக் காணி கிணறுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0772850567

(65493)

## வேலையாள்கள் தேவை

அலுவலகத்தில் பணிபுரிவதற்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி போன்ற இடங்களிற்கு A\L படித்த பெண்கள், ஆண்கள் தேவை. பணிபுரிய விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்ளவும். 021 222 4527,0777 906064

(64013)

## கடை வாடகைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் சந்தைக்கு முன்பாக பெரியகடை ஒன்று வாடகைக்குண்டு. (HNB அருகில்) தொடர்பு-

0773604409, 0774914511

## சமையல் ஆள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு (High Class Veg. Food) பின்வரும் வேலையாள்கள் உடன் தேவை. சம்பளம் மற்றும் இதரகொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கலாம்

- ரீமேக்கர்
- சமையலாளர்கள்
- உதவி சமையலாளர்கள்
- கிளீனர்ஸ்

அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்
இல: 442, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 077 771 0785

## அறிவித்தல்

ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
தரம் - 6 அனுமதி

எமது கல்லூரியில் தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 19.10. 2015 தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விடுதியில் தங்கி கற்க விரும்பும் மாணவர்கள் அதற்குரிய விண்ணப் பப்படிவங்களை தரம் - 6 விண் ணப்பப் படிவத்துடன் இணைத்துக் கையளிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 06.11.2015 விண்ணப்பங் களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

(62170)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதினை அதிமேதகு ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்ட எமது பாடசாலை அதிபர்

**சி. வரதராஜா**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
வ/ ஸ்ரீ நாகராஜா வித்தியாலயம்
சிதம்பரபுரம், வவுனியா

## பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்



இலங்கை அதிபர் சேவை
தரம் -I இற்கு
பதவி உயர்வுபெற்ற எம் அதிபர்

**அருட்சகோதரி**
**ஜெயநாயகி செபமாலை**
(B.A, Dip. in Edu, S.L.P.S.I)

முத்தமிழும் காத்திடத்தான் தோன்றியதோர் முழுமதியம்
முதல்வரென வந்த அதிபரின்று மூன்று விழா கண்டுவிட்டார்
ஜெயம் தரும் நாயகியாய் கல்விக் களத்தில் ஒரு
ஜெயநாயகியாய் கன்னியர் கல்விக்கோர் நாயகியாய் வந்துதித்தார்.
பிரதீபா விருதுபெற்ற பெருமையோடு அதிபர் தரத்தில்
முதல்தரத்தில் உயர்வுபெற்றுப் பேருவகை கொள்ளும்
உங்களுடன் நாமும் பெருமை கொள்கின்றோம்.
உம்பணி எம் கொண்வென்றில் என்றும் ஏணிபோல்
ஏற்றம்பெற வாழ்த்துகிறோம்.

Best Wishes

ஆசிரியர் கழகம்
யா/இளவாலை கொன்வென்ற் மகா வித்தியாலயம்
இளவாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வங்கிக்கும் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் பெருமைசேர்த்து அர்ப்பணிப்போடு (26) வருடங்கள் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் இலங்கை வங்கி வட்டுக்கோட்டைக் கிளை உத்தியோகத்தர்

**மூளாயூர் உயர்திரு. சுந்தரலிங்கம் தியாகலிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



வங்கிக்குப் பெருமை சேர்த்தீர்
வாடிக்கையாளர் பலரைச் சேர்த்தீர்
சங்கானை, சுன்னாகம், காங்கேசன்துறை,
வட்டுக்கோட்டையென பாங்கமின்றி
இலங்கை வங்கி பல கிளையில்
பணிபுரிந்தீர் மங்காத சேவையினால்
மக்கள் மனம் கவர்ந்தின்று
பொங்குபுகழ் சேவையிலே ஓய்வதுவும்
பெறுகின்றீர் இங்கிதமாய் வங்கிதனை
அலங்கரித்த **தியாகலிங்கத்தாரே**
சங்கமித்தே சந்தோஷம் சுகவாழ்வு எனப்பலவும்
தங்கிடவே வாழ்க்கையில்
நீர் பல்லாண்டு வாழிய வாழிய வாழியவே!

நேர்மை நிதானம் நிறைமைநிறைந்த
தங்களை மனம் திறந்து
வாழ்த்தும்
செ. சிவசுப்பிரமணியம் (ஆசுகவி - மூளாய்)

மூளாய் வீதி,
மூளாய் சுழிபுரம்.

## ஆதனவரிப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்- 05, மத்தியூஸ் வீதியில் ஆதன இலக்கம் 32 B என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் யோசேப் மரியதாஸ் என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்.மாவட்டம், இல, 17/1 மத்தியூஸ் வீதியை முகவரியாகக் கொண்ட திரேசம்மா பிரான்சிஸ் என்பவரால் பிரசித்த நொத்தாரிஸ் S.கனகரத்தினம் முகதாவில் 5749 ஆம் இலக்க 1969.10.08 ஆம் திகதிய மரண சாதனப்படியும், மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் T/2560 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட இறுதித் தீர்வைப்படியும் வந்தடைந்த உரிமையுமான ஆதனத்தை சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், J.S.A மதுர நாயகம் M.A.LL.B (COL) முகதாவில் நிறைவேறிய 2087 ஆம் இலக்க 2015.07.14 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தனது மகள் பிரான்சிஸ் ஸ்ரான்லிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம் - வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப் பாண பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "குளத்து வளவு மாவிலங்கையடிப்புலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்சின் ஞானப்பிரகாசம் அவர்களால் வரையப்பட்ட வரைபட இலக்கம் 1490-2013.07.03 இல் துண்டு 1 நில.பர 00 குளி 13.90 இதற்கு எல்லை.

கிழக்கு - வாய்க்கால், வடக்கு- ஆசீர்வாதம் பெண் துஷி யந்தியின் ஆதனம், மேற்கு - மரியதாஸ் திரேசம்மாவின் ஆதனம், தெற்கு - ஞானப்பிரகாசத்தின் ஆதனம்

தற்போது இவ் ஆதனத்தை பிரான்சிஸ் ஸ்ரான்லி தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரான்சிஸ் ஸ்ரான்லி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம், மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்

(சி/18800)

ஆணையாளர்,
மாநகரசபை

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம் (வ-து)

## விற்பனைக்கான கேள்வி கோரல்

மேற்படி எமது சங்கத்திற்கு சொந்தமான 24ஸ்ரீ 9792 இலக்க பார ஊர்தியும்,(இசுசு லொறி) NPHH-1859 இலக்க அலுமினிய உடற் கோப்பு அமைத்த பஜாஜ் ஓட்டோவும் விற்பனைக்கு உண்டு.

இந்த வாகனங்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 1000/= செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவத்தை சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்று தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் " வாகன கொள்வனவுக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு தலைவர் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 31.10.2015ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ சீல் இடப்பட்ட கடித உறையில் தங்களது கேள்வித் தொகையை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். கேள்வி விண்ணப்பப் படிவங்களை 16.10.2015 முதல் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி வாகனங்களை சங்க அலுவலக வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

கேள்விகள் 02.11.2015 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கேள்வித் தொகை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்கமுடியும். வாகனத்தைக் கொள்வனவு செய்பவர் கேள்வித் தொகை முழுவதையும் செலுத்தி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒருவாரத்தினுள் வாகனத்தைக் கைமாற்றிக் கொள்ளல் வேண்டும்.

சங்க பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

தொடர்புகளுக்கு : 021 321 2797

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வட்டாரம் - 04 பாங்சால் வீதியில் ஆதன இலக்கம் 245/7 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் யோன் பிள்ளை அந்தோனிப்பிள்ளை சொலமன் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் குருநகர் அடப்பன் வீதி இல. 115/22ஐ முகவரியாகக் கொண்ட மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் அக்னேஸ் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 9065 இலக்க 1994.08.03ஆம் திகதிய மரண சாதனத்தில் தனது சீவிய காலத்தின் பின் தனது மகள் செல்வி அந்தோனிப்பிள்ளை மேரி அஜந்தாவுக்கு சேர வேண்டும் என வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் அவர்களது 2013.09.25ஆம் திகதி 2107 இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் குருநகர் அடப்பன் வீதி, இல. 115/2 ஐ முகவரியாகக் கொண்ட அரியதுரை தயானந்தசிவமும் பெண் மேரி அஜந்தாவால் வெளிப்படுத்தப்பட்டு இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் அவர்களது 2013.10.07ஆம் திகதிய 2156ஆம் இலக்க அறுதி உறுதியால் அரியதுரை தயானந்தசிவமும் பெண் மேரி அஜந்தாவால் யாழ்ப்பாணம் குருநகர் அடப்பன் வீதி, இல.10ஐ முகவரியாகக் கொண்ட சித்தாத்துரை சுதாகரும் பெண் போலீன் ஆன் கத்திறீனுக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விவரம் - வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று கரையூர் "அரியதுரையான் தறை" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப் பிரகாசம் அவர்களது வரைபட இலக்கம் 1579- 2013.10.03ஆம் திகதிய வரைபடத்தின் படி நில.பர. 00 குளி 07 இதற்கு எல்லை கிழக்கு, றெயில் றோட், வடக்கு, தம்புக் குட்டி பிரான்சிஸ் பெண் பிரகாசியம்மா, மேற்கு, கை ஒழுங்கை, தெற்கு. பெஞ்சமின் டோனாஸ் கைம்பெண் செபமாலையும்.

தற்போது இவ்வாதனத்தை சிந்தாத்துரை சுதாகரும் பெண் போலீன் ஆன் கத்திறீனால் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய் வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுத்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிந்தாத்துரை சுதாகரும் பெண் போலீன் ஆன்கத்திறீ னும் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது டன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்
மாநகரசபை

மாநகரசபை, யாழ்ப்பாணம்

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -01, முதலாம் குறுக்குத் தெருவில் ஆதன இலக்கம் 99 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் M.M சுல்தான் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இல. 92 நாவலர் வீதி(கலீபா அப்துல் காதர் வீதி) தற்பொழுது இல.24டீ சமகி மாவத்தை கொடான வீதி தெகிவளையில் வசிப்பவராகிய சுல்தான் மொகைதீன் முகமட் ராபீக் காஜியாரும் பெண் நகீமா நவீக் Nee முத்து முகமட் என்பவர்களால் காலஞ்சென்ற நைனா முகமட்சுல்தான் முகைதீன் காஜியார் என்பவருக்கு மரண சாதன மூலமும் யாழ்.மாட்ட நீதிமன்ற வழக்கு இல.1107 மூலம் வந்ததாகவும் குறித்த ஆதனம் தமக்குரியது எனவும் எவ்வித தங்குதடையற்ற ஆட்சியுமானதெனக் குறிப்பிட்டு இல.24/3 சமகி மாவத்தை கொடான வீதி தெகிவளையில் வசிப்பவருமாகிய மொகமட் ராபிக் மொகமட் றனிக் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு றசிக் மொகமட் இமாம் அவர்களால் உறுதி இல 429/7.3.2005 மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இல.34/16 Huludagoda Garden, off Huludagoda Road, Mt. Lavania வதியும் முகமட் ராபிக் முகமட் ராசித் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு m.m.m ரமீஸ் அவர்களது உறுதி இல. 1856/8.10.2009 மூலம் இல 149 நாவலர் வீதியைச் சேர்ந்த எட்வேட் திபோசியஸ் லியோன் என்பவருக்கு அறுதியாக வழங்கப்பட்டது.

ஆதன விபரம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி, கோயில்பற்று இறை உடையன் தறை/ கற்புலம் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.பஞ்சாட்சரம் அவர்களின் வரைபட இலக்கம் 3172A-17.05.2003 இல் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நில.பர.01 குளி 17.35 இதற்கு எல்லை.

வடக்கு - F.A விக்கிரமசிங்கத்தின் ஆதனம் , கிழக்கு, முதலாம் குறுக்குத்தெரு ஆதனம், தெற்கு வைத்திலிங்கம் பொன்னம்பலத்தின் ஆதனம், மேற்கு உயர்நீதிமன்ற ஆதனம்


தற்போது இவ்வாதனத்தை எட்வேட் திபோசியஸ் லியோன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது எட்வேட் திபோசியஸ் லியோன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

ஆணையாளர்,
மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடலிகள் விசமிகளால் நாசம்



வவுனியா,ஒக்.16
வவுனியா கண்டி விதியிலுள்ள நொச்சிமோட்டைப் பகுதியில் வீதிக்கு அருகிலுள்ள சிறிய பனம் வடலிகள் மீது, இனந் தெரியாத விசமிகள் மண்ணெண்ணெய் ஊற்றி நாசம் செய்துள்ளனர். பிரதேசம் தோறும் பனம் விதைகள் நடப்பட்டு பனை வளத்துக்குப் புத்துயிர் ஊட்டும் நடவ டிக் கைகள் பனை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் குறித்த பிரதேசத்தில் ஏராளமான வடலிப்பனைகள் நாசம் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# ஓய்வு பெறும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் செயற்றிட்டம்

### தென்மராட்சி வலயத்தில் ஆரம்பிப்பு



சாவகச்சேரி,ஒக்.16
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி, இளைப்பாறிச் செல்லும் அதிபர்கள், ஆசிரியர்களை ஓய்வுபெறும் தினத்தில் நேரில் சென்று வாழ்த்துவதுடன், ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்களையும் வழங்கும் செயற்றிட்டத்தை தென்மராட்சி கல்வி வலயத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலையில் பணியாற்றி உரிய காலத்தில் ஓய்வுபெறும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அடுத்த மாதத்திலிருந்து ஓய்வூதியம் பெறக் கூடிய வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான ஆவணங்களுடன் வலய உயர் அதிகாரிகள் பாடசாலைக்குச் சென்று குறித்த ஆசிரியரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதுடன், வாழ்த்துக்களையும், வலயத்தின் சார்பில் விருதையும், ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்களையும் கையளிக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் நடராசா பாலச்சந்திரனுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்களும் வலயத்தின் சேவை நலன் பாராட்டும் விருதும் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இந்தச் செயற்றிட்டம் ஏனைய பாடசாலைகளிலும் மேற் கொள்ளப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார். இதுவரைகாலமும் வலயப்பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர்கள், ஆசிரியர்கள் வலயத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தினத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர்கள், ஆசிரியர்கள் நீண்ட காலத்துக்கு ஓய்வூதியம் பெறுவதற்கு காத்திருக்க வேண்டியிருந்தது. வலயத்தின் இந்த செயற்றிட்டத்தின் பயனாக ஓய்வு பெறுவோர் ஓய்வுபெற்ற அடுத்த மாதமே ஓய்வூதியம் பெறவாய்ப்புள்ளது என கல்விச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)


30ஆவது அகவையில் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29.09.1985 விண்ணில் 08.10.2013

முத்துராஜா உஷாந்தன்

திதி : சதுர்த்தி (16.10.2015)

எமது குடும்பத்தின் குலவிளக்கே! நீர் மறைந்து ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் உம் நினைவுகள் அழிக்க முடியாதவை, நீர் எம்முடன் வாழ்ந்த காலங்கள் பொன்னான காலங்கள்

அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (63539)(10.15) குடும்பத்தினர்.

பதினைந்து ஆண்டின் முன்னால் பரம்பொருளை அடைந்திட்ட எமது பாசமிகு தாய்
திருமதி தையல்நாகேஸ்வரி அரியநாயகம்
(தாதிய உத்தியோகஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலை)
அவர்களை என்றும் இன்றும் நாம் நினைவு கூர்வோம்



பிறப்பில் நாம் மகிழ 14.08.1946 இறப்பில் நாம் துயர 16.10.2000

திதி : 01.10.2015

திரவியம் தேட நாங்கள் திரைகடல் ஓடினோம்
கரந்தனில் சுமந்த உமைக் காத்திட எண்ணினோம்
பரம்பொருள் வேறொன்றை நினைத்தாரோ அன்னையே
வரந்தந்து வாவென்று அழைக்க நீர் போய்விட்டீர்
நிரந்தரம் தந்தையார் உண்டென்று எண்ணவும்
புரம்விட்டு அவரும்மைத் தேடியே வந்திட்டார்
இரங்கியெம் தாயாரே தையல்நாகேஸ்வரியாரே
விரதமின்றிருக்கின்றோம் விழிமுன்னே வாரீர்

81/2, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (65546)(10.15) அன்னையின் பிரிவால் துயருறும் ஆருயிர்ப் பிள்ளைகள்.

பாச நினைவுகளுடன் பதினொராவது ஆண்டில்....



அமரர்
திலகவதி குமரவேல்
(முன்னாள் பொது முகாமையாளர் - ப.நோ. கூ. சங்கம் சுன்னாகம்)
திதி: சதுர்த்தி 16.10.2015
பார் போற்ற : 17.04.1953
பரிதவிக்க: 18.09.2004

பண்பான உத்தமியை
பார் போற்றும்
வித்தகியை
பாதகக் காலனவன்
பாதியில் பறித்தானே!
பதினொரு
ஆண்டுகளாய்
பாச நினைவுகளுடன்
பரிதவித்து நாமிங்கே.....
சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்
"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.

நெஞ்சை விட்டகலா பத்தாம் ஆண்டு நினைவில்



அன்னை மடியில் 25.09.1963
ஆண்டவன் அடியில் 03.10.2005

அமரர் கிட்டினன் பரமேஸ்வரன்

நிஜமாக நீங்கள் மறைந்து பத்தாண்டுகள் ஆனதுவோ
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து தினம் தினம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் கடந்து விட்டாலும்
உள்ளத்தில் நிறபது நீங்கள் அல்லவா?

விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு. மனைவி, குடும்பத்தினர்

ஓராண்டு நினைவலைகள்
திருமதி சின்னப்பிள்ளை (இராசமணி) தங்கவேல்

திதி : அபரபக்க அட்டமி



நேற்று வரை என்னோடு
நிறைந்திருந்த தாயே....
இன்று நீங்கள் இங்கில்லை
என்ற உண்மையை ஏற்க
மறுக்கிறது என்னுள்ளம்
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை அம்மா
கண்ணோரம் கசியும்
நீரை விண்ணின்று
காண்பீர்களோ
தாங்க முடியவில்லை
தவித்து நிற்கின்றேன்.

உ 15919(12.15.17)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள், மருமகன்,
[illegible]
கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

மண்ணில் 12.06.1948
விண்ணில் 16.10.2014


## விண்ணப்பம் கோரல்

கைதடி, ஒக்.16
கைதடி தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் முழு நேர மற்றும் பகுதி நேரக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தேசிய தொழில்தகைமைச் சான்றிதழுக்காக நடத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், குளிர்சாதன உபகரணத் திருத்துநர் ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக்கற்கைநெறிகளைக் கற்கவிரும்புபவர்கள் தங்களது பதிவுகளை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முதலாம் மாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக மேற்கொள்ளுமாறு இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபை கோரியுள்ளது. (ஐ-ரி5)

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் 125 ஆவது ஆண்டு நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது இதில் தலைவராக இ.வினோத், உபதலைவர்களாக ம.நிஷாந்தன் மற்றும் டி.பி. குணநாயகம், பொருளாளராக வி.டானியல் ஜெயரூபன் ஆகியோரும், பத்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# நெற்செய்கை உரத்துக்கு தனியார் கடைகளை நாடும் விவசாயிகள்

## கமநல சேவைகள் நிலையம் வழங்கிய உரம் பற்றாக்குறை

கமநலசேவைகள்நிலையத்தால் கால போக நெற்செய்கைக்காக இந்த வருடம் வழங்கப்படும் மானிய உர வகைகளின் அளவு போதாமையால், நெற்செய்கையாளர்கள் தமக்குத் தேவையான மேலதிக உரத்தைத் தனியார் கடைகளில்பெறவேண்டியுள்ளதெனத் தெரி வித்துள்ளனர். தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளகமநலசேவைகள் நிலையத்தில் நெற்செய்கையாளர்களுக்கான மானிய உரவகைகள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. நெற்செய்கையாளர்கள்செய்கைமேற்கொள்ளும் பரப் பளவுக்கு ஏற்ப பரப்புக்கு 400 கிராம் அடிக்கட்டு பசளை விநியோகிக்கப்படு கிறது. இந்த அளவு போதாதென்பதால் தனியார் கடைகளில் அடிக்கட்டுப் பசளைகளை வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். தென்மராட்சிப்பிரதேசத்தில்பெரும்பாலான வயல்களில் நெல் விதைப்பு முடிவடைந்து சில வயல்களில் நெல் சிறு பயிர்களாகக் காணப்படுகின்றன.

இதேவேளை, அந்தந்த கமக்காரர் அமைப்புகள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர். (ஐ-9)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு தரம்7, தரம் 11 வகுப்புகளில் சைவ சமய புதிய பாடத்திட்டம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-9)

# சண்முகதாஸின் பவளவிழாவும் மனோன்மணியின் பொன்விழாவும்



யாழ்ப்பாணம்,ஒக்.16

பேராசிரியர்அ.சண்முகதாஸின்பவள விழா மற்றும்சண்முகதாஸ் மனோன் மணி இணையரின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது. இதன்போது பேராசிரியருக்கான அகவைப் பரிசிலாக ஜப்பானியக் காதல் பாடல்கள்' என்ற நூல் முனைவர் மனோன்மணி சண்முகதாஸால் துணைவரிடம் வழங்கப்பட்டது. விழாத் தம்பதியர் இருவரும் நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதுவர் ஆ.நடராஜனிடமும், திருமதி சாந்தினி நடராஜனிடமும் கையளித்தனர். (ஐ)

# தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள்

**வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை**
அஜித்திகா சிவதாஸ் -173, தனுன் லிங்கேஸ்வரன் -171, இதயதீபன் கிருஸ்ணாகரன் -166, வைஷ்ணுயன் திருவேல்மணி -154.

**சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
ச.யுவேதா - 169,பா.பானுன் - 160, யோ.கார்த்திகா - 153,அ.மதுரா - 151.

**பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை**
தே.நிலுாயன் - 176, வ.ரஸ்மிதா - 173,ஜொ. திபிஷா - 171, செ.சதுமி - 164, மெ.மாதினி - 155, ஆ. அனிதா - 153.

**நாகர்கோவில் மகா வித்தியாலயம்**
செல்வநாதன் பல்லவி-160.

**மிருசுவில் அ.த.க. பாடசாலை**
சுதாகரன்சஞ்ஜய் - 164, குலேந்திர ராஜா தேனுஜா - 154.

**விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்**
ஞானசேகர் சதுர்சன் - 164.

**தேவரையாளி இந்துக் கல்லூரி**
தர்மலிங்கம் தர்மிகன் -179, சுபாகு அட்சயன் -160, இராமேஸ்வரன் சாதுர்ஜன் -158, சிவநாதன் ஆர்த்திகன் -153

**வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை**
ந.சபிசன்-164, கி.கர்சனா-163, பா.விநோயா-155, கி.மிதுசகன்-153.

**வரணி நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலயம்**
ச.மதுசா-157.

**வரணி வடக்கு அ.த.க. பாட சாலை**
தே.மதுஜா-157.

**பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்**
முரளிதரன் கேசிகன்-159, சுதர்சன் டிசாஜினி-159, ஆனந்தராசா அஸ்வினி-154, பரமநாதன் மதுசா-154, கிருபாஸ்கரன் சுனேத்தா-153.

**பெரியபுலம் மகா வித்தியாலயம்**
ரவிச்சந்திரன் சோபிதன்-162, வித்தியாகரன் கஜானுகரன்-160.

**இணுவில் மத்திய கல்லூரி**
ஸ்ரீ.நிலக்சனா-167, பொ. அபிநயா-163, பி.கஜானி -161, சு.மது ரங்கா-160.

**புற்றளை மகாவித்தியாலயம்**
வீரசிங்கம் சபின்-179, ஜெயராசா கஜீபன்- 173, வீரபாகுதேனன் விதுஷன்-171, கிருஸ்ணரூபன் யதுஷிகா-171, பத்மநாதன் திருமால்-163, இந்திரன் பிருத்திகன்-160, மோகனதாஸ் கஸ்தூரி-155, கார்த்திகேசு மகிந்தன் -153.

**இளையதம்பி இந்து வித்தியாலயம்**
காந்தரூபன் சஞ்ஜெய்- 166,





### யா/இணுவில் மத்திய கல்லூரி
### தரம்-6 அனுமதி - 2016

2016 ஆம் ஆண்டு தரம் 6 அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம்.

முடிவுத்திகதி :- 15.11.2015 (64008) (10.17) அதிபர்.

### சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
### குருகுல வகுப்புக்கள் ஆரம்பம்

மேற்படி அமைப்பின் குருகுலக் கல்விச் செயற்பாடுகள் யாவும் 22.10.2015 வியாழக்கிழமை விஜயதசமி தினம் அன்று ஆரம்பமாக உள்ளது.

கல்வி பயில விரும்பும் அந்தண மாணவர்கள் தங்கள் பெயர் விபரங்களை ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

தலைவர், செயலாளர்
சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்

### கிளிநொச்சியில்
### 10 வருடம் அனுபவம் வாய்ந்த யாழ் ஆசிரியரினால்
### விசேட கேக் ஐசிங் பயிற்சி வகுப்புக்கள்



* நவீன கேக் அலங்காரங்கள்
* நவீன முறையிலான சீனிப்பூக்கள், இலைகள்
* பண்டண்ட் ஸ்டரக்சர்ஸ்

நாள் :- 17.10.2015 சனிக்கிழமை 10 மணிக்கு
இடம் :- மேரி பியூட்டி சொய்ஸ்
No-3, கணேசபுரம், கிளிநொச்சி (கியூடெக் அருகில்)
தொடர்பு :- 0777 917 087, 021 568 1174
குறிப்பு : முதலில் பதிவு செய்யும் 5 பேருக்கு ஐசிங் பூ அச்சுக்கள் இலவசம்

(64018) (10)

### பாராட்டி வாழ்த்துதல்

கிளிநொச்சி மாவட்டத்தின் பங்குத் தந்தையாக பலகாலம் கடமையாற்றிய அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளார் யாழ். மறைமாவட்டத்தின் 8வது ஆயராக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் பிரான்சிஸ் பாப்பரசர் அவர்களால் 13.10.2015 இல் இருந்து நியமிக்கப்பட்ட அறிவிப்பை இளைப்பாறிச் செல்லும் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 13.10.2015 ஆலய இல்லத்தில் வைத்து அறிவிக்கப்பட்ட செய்தி கேட்டு எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவரது சேவை சகல மக்களுக்கும் கிடைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

தி.இராசநாயகம் (தலைவர்)
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,இல்லக்குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் (ரி/15917)

### யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
### சமூகமட்ட அமைப்புக்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சமூக மட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விவசாய கடற்தொழிலாளர் சங்கங்கள், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற ஏனைய அமைப்புக்களின் விவரங்களைச் சேகரித்து, பொதுமக்களின் நலன்களினை ஒரே குரலாக பிரதிபலிப்பதற்கான கட்டமைப்பு பொறிமுறை ஒன்றினைத் தொலைதூர நோக்குடன் வலையமைப்பாக ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. எனவே,குறிப்பிட்ட சங்கங்களின் பெயர், முகவரி, பதிவு இலக்கம், பதிவுத் திகதி, பிரதேச செயலர் பிரிவு,கிராம சேவையாளர் பிரிவு,தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள், செயற்பாடுகளின் சுருக்கம் ஆகியவை உள்ளடங்கலான விவரப் பட்டியலைத் தயாரித்து அதன்மூலம் தங்களுடன் தொடர்புகளினை மேற்கொண்டு மேற்படி படிமுறைமைகளுக்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்காக தங்களின் சம்மதத்தினையும் ஒத்துழைப்பையும் விமர்சனத் தையும் 28.10.2015ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

விளக்கங்கள் தேவையெனில் கீழ்வரும் தொலைபேசிக்கு தயங்காமல் அழைக்கலாம். தங்கள் விவரம் கிடைத்தவுடன் இவ்விடயப்பரப்பு சம்பந்தமாக எமது அலுவலக உத்தியோகத்தர் உங்களுடன் தொடர்பு கொள்வார்.

தலைவர்,
யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
இல.76(40),கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. 0212223668 (சி-15901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலில் மோதுண்டு சாவடைந்தவரை அடையாளம் காணக் கோரிக்கை

சாவகச்சேரி,ஒக் .16

நாவற்குழிப் பகுதியில் ரயிலில் மோதுண்டு சாவடைந்த நபரின் சடலம் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளம் காட்டி உதவுமாறு பொதுமக்களை சாவகச்சேரி பொலிஸார் கேட்டுள்ளனர். கடந்த 5 ஆம் திகதி இரவு ரயிலில் மோதுண்டு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சாவடைந்த நபர் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் சடலம் எவராலும் அடையாளம் காணப்படாத நிலையில் வைத்தியசாலை சவச் சாலையில் வைக்கப்பட்டுள்ளதென அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் சடலம் அடையாளம் காணப்படும் வரை வைத்தியசாலை சவச்சாலையில் பாதுகாப்பாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறும் இது தொடர்பாக ஊடகங்கள் ஊடாக புகைப்படத்துடன் செய்தி பிரசுரிக்குமாறும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

(ஐ-9)

## ஆதன வரிகளைச் செலுத்துவதில் சாவகச்சேரி வரியிறுப்பாளர்கள் ஆர்வம்

சாவகச்சேரி,ஒக்.16

நகரசபைக்குச் செலுத்தவேண்டிய ஆதன வரிகளைச் செலுத்துவதில் சாவகச்சேரி வரியிறுப்பாளர்கள் ஆர்வத்துடன் செயற்படுவதை நகர சபையினால் மேற்கொள்ளப்படும் நடமாடும் சேவைகள் மூலம் அவதானிக்க முடிகிறது. சபையின் கோயிற்குடியிருப்பு வட்டாரத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற நடமாடும் சேவையில் ஒரு லட்சத்து 25 ரூபா ஆதன வரியாக அறவிடப்பட்டுள்ளதென சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டு தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளுக்குரிய ஆதன வரியைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டினர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் பத்தாம் வட்டாரத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 80 ஆயிரம் ரூபா ஆதன வரி அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

## நிர்வாக சபைத் தெரிவு

வடஇலங்கை போக்குவரத்து உரிமையாளர் சங்கத்துக்கான புதிய நிர்வாக சபை கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிவராசா சிவபரனும், செயலாளராக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவக்கொழுந்து சுரேந்திரனும், பொருளாளராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் றமேஸும், உப தலைவராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனி அரசு ஜெயராமும், உபசெயலாளராக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சிவகுமாரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அத்தோடு உறுப்பினர்களாக மாவட்டத்துக்கு இரண்டு பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர் எனவும் வட இலங்கை போக்குவரத்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஐ-21)

## போக்குவரத்து விதிமுறை மீறல்கள் 8 பேருக்கு 58 ஆயிரம் ரூபா அபராதம்

சாவகச்சேரி,ஒக்.16

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 8 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் மொத்தமாக 58 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரம்,வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 16 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம், தலைக்கவசம், இலக்கத் தகடு ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், மது போதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 8 ஆயிரத்து 500 ரூபாவும், மற்றொரு சாரதிக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும், முறைகேடாக வாகனத்தைச் செலுத்திய மூவருக்குத் தலா 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## மரண அறிவித்தல்கள்

### தம்பு அழகராஜா(அழகன்)

யாழ் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் ஐக்கிய அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு அழகராஜா 13.10.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்


அன்னார் தம்பு- பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் ஞானப்பிரகாசம் சிசிலியா தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜி அவர்களின் அன்பு கணவரும் டிலன், ஷாணா ஆகியோரின் அன்புத்தந்தையும் நடராஜா, பரமேஸ்வரி, தர்மவதி, குணவதி, யோகவதி, யோகராஜா, செல்வராஜா, ஆனந்தராஜா ஆகி

யோரின் அன்புச் சகோதரனும் டெய்சி, ஜெசி, லெஸ்லி, ஜொய்சி, கொன்சி, ஜான்சி ஆகியோரின் அன்பு மைத்துனரு மாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள்

17.10.2015 சனிக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்



தோற்றம்: 05.10.1954
மறைவு: 13.10.2015

தகவல்
செல்வராஜா(காந்தி)
தொடர்பு: 021 205 9031 ,021 224 2454

(65495)(12.15.17)

### தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் பயிற்சி

சாவகச்சேரி,ஒக்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் தமிழ் பாடத்தில் அடைவு மட்ட நிலையில் காணப்படும் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த வலயக்கல்வி அலுவலகத்தால் ஓய்வுநிலை தமிழ் பாட கல்வியியலாளர்கள் மூலம் இலவச வழிகாட்டல் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரின் ஏற்பாட்டில் கிராமப்புறப் பாடசாலைகளில் தமிழ்மொழிப் பாடத்தில் அடைவுமட்ட நிலையில் உள்ள 200 மாணவர்களுக்கு மூன்று நிலையங்களில் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாலைநேர வகுப்புகளாக இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன. நாவற்குழி மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய வற்றில், இந்தவழிகாட்டல்பயிற்சிவகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்பட்டது. இதேவேளை, இலவசமாக கல்வியைப்போதிக்க முன்வந்துள்ள கல்வியியலாளர் களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து மாதாந்தம் சிறு அன்பளிப்பை வழங்க மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் முன்வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கானவழிகாட்டல்கருத்தரங்குகள் கடந்த புதன்கிழமை மூன்று நிலையங்களில் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி இந்தக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமிழ் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. (ஐ-9)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வட்டுகார்த்திகேசு வித்தியாலயத்தின் 120 ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு நாளும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்வார். (ஐ)

### திருமதி. செல்வராணி அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி சாவகச்சேரி மற்றும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி . செல்வராணி அந்தோனிப்பிள்ளை 12.10. 2015 திங்கட்கிழமை கர்த்தருக் குள் நித்திரையடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற அ.செ. அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய எழுதுநர் வன இலாகா யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான G.A இரத்தினவரதர்- கிறேஸ் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம் பிள்ளை- அலோஷியஸ் அம்மா(பளை வீமன்காமம்) தம்பதியரின் மருமகளும் மோகன் - தயாநிதி(கனடா), Dr.ஆனந்தி- Prof ஆனந்த சமரசேகர,அமிர்த்தி- திருக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr லக்தனி, அடிலா, நிருபினா(கனடா), Dr அஞ்சு, நிரேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில்17.10.2015 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
திரு. திருமதி. திருக்குமார்(உதவிக் கல்விப் பணிப்பாளர்(ஆங்கிலம்) வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி)

"தயாளின்"
5 ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, உடுவில்.
T.P: 077 9253317

## மரண அறிவித்தல்

### திருமதி பரிபூரணம் சிவலிங்கம்



தோற்றம்:17.10.1922
மறைவு: 15.10.2015

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் சிவலிங்கம் நேற்றுவியாழக்கிழமை 15.10. 2015 காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- மாணிக்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சுபத்திரா தேவி,தேவகி, அபிராம சுந்தரி, சீதாதேவி,பஞ்சலட்சுமி காலஞ் சென்ற ஜெயராணி,கமலாதேவி, சந்தானலட்சுமிஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகராஜா்,இராசரத்தினம்,கதிரவேலு காலஞ்சென்ற சிவபாலன், இராசையா காலஞ்சென்ற தனபாலசிங்கம்,கந்தசாமி காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 15.10.2015 வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அலுக்கை
அளவெட்டி

தகவல்
குடும்பத்தினர்
077 183 9514

(64025)(12.15.17)

## குழந்தைக்குக் காயம்

மதுபோதையில் காணப்பட்டவர் வீசிய கல் ஒன்று, ஒன்றரை வயதுக் குழந்தையின் தலையைப் பதம்பார்த்துக் காயப்படுத்தியது. இந்தச்சம்பவம் கடந்த ஞாயிற் றுக்கிழமை நாவற்குழி தெற்குதச் சன்தோப்பில் இடம்பெற்றது. மது போதையில் கோடரி கொண்டு பெற்றோரைத் துரத்திய இளைஞர் அவர்கள் பயத்தால் ஓடிச் செல்ல கற்களை வீசி அவர்களைத் தாக்கிய வேளையில், தாயார் தூக்கிக் கொண்டு ஓடிய ஒன்றரை வயதுக் குழந்தையின் தலையை கல் தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த நல்லதம்பி தாஸ் லக்ஸனா என்னும் குழந்தை காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு

## வழங்குகின்றது தமிழ் சிவில் சமூக அமையம்

யாழ்ப்பாணம், ஒக்.16
அரசியல் கைதிகளால் தமது விடுதலைக்காக நடத்தப்படும் உணவுதவிர்ப்புப்போராட்டத்திற்குதமது தார்மீக ஆதரவை வழங்குவதாக, தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

உறவுகளால் சமாந்தரமாக நடத்தப்படும் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்களுக்கும் ஏனைய போராட்டங்களுக்கும் எமது பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குகிறோம் என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாது:-

சர்வதேச மன்னிப்புச்சபையின் அரசியல் கைதிகள் எனும் பதத்திற்கான வரைவிலக்கணத்தை தமிழ் சிவில் சமூக அமையம் ஏற்றுக் கொள்கின்றது. அதன் பிரகாரம் எமது மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்களை, அப்போராட்டத்த்திற்கு உதவி செய்தவர்களை இலங்கை அரசின் குற்றவியல் சட்டங்கள் குற்றவாளிகளாக கருதினாலும் அவர்களை தமிழ் மக்கள் அரசியல் காரணத்திற்காக கைது செய்யப்பட்டவர்களாகவே கருதுகிறோம்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்தநிலையில்,அரசியல் கைதிகள் யாவரையும் உடனடியாக விடுதலை செய்வது உண்மையான நல்லிணக்கத்திற்கான முதற்படி என நாம் கருதுகிறோம்.

இலங்கையின் சட்டத்திற்கு உட்பட்டு நோக்கும் போதும்,சட்டத்திற்குமுரணாக(பயங்கரவாதத் தடைசட்டம் உட்பட) நீண்டகாலமாக இந்த அரசியல் கைதிகளைத் தடுத்து வைக்க முடியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் 18 மாதத்திற்கே (வழக்கு தொடர முதல்) ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க முடியும். வழக்குத் தொடராமல் தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்தல் சட்டத்திற்கு முரணான சிறை வைப்பாகும். நீண்ட காலம் தடுப்பில் உள்ளவர்களுக்கு உடனடியாக வழக்கு தாக்கல் செய்ய அல்லது விடுதலை செய்ய சட்டமா அதிபருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் அறிவுறுத்தல் வழங்குமாறு நாம் அரசைக் கோருகின்றோம்.


அண்மையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சித்தமைக்கான வழக்கில் 15 வருடங்கள் சிறையில் வாடிய பின்னர் குற்றமற்றவராக காணப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பெண்மணியின் அவல நிலையில் இன்னும் பலர் இருக்கக் கூடும் என்பது வெளிப்படை.

இந்த வழக்கு, தாக்கல் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் பிணையில் செல்வதற்கான சம்மதத்தை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 7 (2) இன் கீழ் நியாயமான காரணம் இல்லாமல் சட்டமா அதிபர் மறுக்கக் கூடாது என நாம் கோருகின்றோம்.

மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதற்கான சட்ட நகர்வுகளையும் எடுக்க நாம் அரசை வலியுறுத்துகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 05 01 1934



உதிர்வு 14 10 2015

### திரு. ஆறுமுகம் தேவராஜன்

யாழ் புலோலிமேற்கு தம்பசிட்டி மல்லிகைக் கலட்டி காலம் சென்ற ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட தவப்புதல்வனும் பாக்கியம் அவர்களின் அன்புக்கணவரும் புகழ்மிகு ஆய்வாளரும், எழுத்தாளருமான கந்த உடையார் ஒழுங்கை திரு. ஆறுமுகம் தேவராஜன் 14.10.2015 இல் நியூசிலாந்தில் காலமானார். இவர் மோசிக்கீரன் (பொறியியலாளர் நியூசிலாந்து), நக்கீரன் (மருத்துவர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரராசா, புவனேந்திரராசா, வடிவழகாம்பிகை மற்றும் காலம் சென்றோரான கனகாம்பிகை, இந்திரராசா, சொர்ணாம்பிகை, குமரேந்திரராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மஞ்சுளாதேவி கீரன், டிவாஞ்சினி நக்கீரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபன்யா கீரன், ஹர்ஷினி கீரன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.10.2015 ஞாயிற்றுக்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
நியூசிலாந்து : 0064 21387779
இலங்கையில் : 07777 81 375 சகோதரன்
077 0585672 சகோதரி

தகவல் குடும்பத்தினர்



### திருமதி ராஜேஸ்வரி சுப்பிரமணியம்

தோற்றம் : 19.10.1955 மறைவு : 14.10.2015

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் (14.10.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசு-வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், கணேசன், கலைச்செல்வி, கலாதேவி, சந்திரகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2015) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 18.10.2015 ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 599 8151 / 077 244 486

(C/18443) (10.17)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தர்மினி சசிகரன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மினி சசிகரன் (14.10.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணராஜன் உதயகுமாரி தம்பதியரின் பாசமிகு மகளும், சற்குணம் காலஞ்சென்ற தங்கேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், சசிகரனின் அன்பு மனைவியும் தர்சிகா (இத்தாலி), இந்துமதி, யதுர்சன், சங்கீதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபாநாதன், சாந்தினி, சதீஸ்வரன், சந்திரநாதன், சர்மிலன் (இத்தாலி), சரணியா ஆகியோரின் மைத்துனியும் ஷாலுஜாவின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(64041) (10.17)

தகவல்:
இ. கிருஷ்ணராஜன்
(தந்தை)

### திருமதி இந்திரா பத்மநாதன்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரா பத்மநாதன் 14.10.2015 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா -செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும் தர்சிகா லக்சிகா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற றதனின் அன்பு மாமியும் நிகாசின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவரான சிறிதரன், மனோகரன் (C.T.B மன்னார்) தயாபரன் (நோர்வே) ரவீந்திரன் (சயன் உணவக உரிமையாளர் மல்லாகம சந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தகுமாரி (லண்டன்) யோகேஸ்வரி (மன்னார்) புஸ்பராணி (நோர்வே ) அருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கனகசபையின் (சுதுமலை) மைத்துனியும் இராசலட்சுமியின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.10.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்திய யோடை இந்து மயானத்திறக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு, ஏழாலை
0215618601

(C/15922) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

### கஸ்பாறு எசக்கியேல்



(இராசேந்திரம்)

சேந்தாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் பிடாரிகோவில் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பி டமாகவும் கொண்ட எசக்கியேல் நேற்று (15.10.2015) இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கஸ்பாறு-பிலோமினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான றோசு, தங்கமணி மற்றும் பிலோமினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற எலிசபேத் (இராசமணி) தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மரியபுஸ்பம் மற்றும் றஞ்சினி (இத்தாலி), வசந்தராசா (பிரான்ஸ்), றஞ்சித்ராஜ் (வசி-பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயம், சுகந்தி, யசிந்தா ஆகியோரின் மாமனும், யான்சினி ரவி, ஜெனி, றொணி, ஜினோலினி, ஜினோசன், ஜினோத் ஆகியோரின் பேரனும், டிசாந், சன்சிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2015) மாலை 3.00 மணிக்கு ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அடைக்கல நாயகி அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: றஞ்சித்ராஜ் (வசி)
077 662 1975
பிரதேச செயலகம், உடுவில்.

(64040) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூருக்கு சென்றார் ரணில்

கொழும்பு, ஒக். 16
இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று சிங்கப் பூருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.



நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் அவர் நாட்டில் இருந்து புறப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விஜயத்தின் போது, சிங்கப்பூர் பிரதமர் மற்றும் அந்நாட்டு முக்கியஸ்தர்[illegible]ன் பிரதமர் ரணில் பேச்சுவார்த்தை [illegible]ள்ளதாக பிரதமர் அலுவலக செய்[illegible]தெரிவிக்கின்றன. (வ)

# தமிழ்க் கைதிகளின் கோரிக்கைகளுக்கு அரசு மதிப்பளித்து விடுவிக்க வேண்டும்

## இந்து சமயப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.16

சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வேண்டி முன்னெடுக்கும் உணவு தவிர்ப்புப் போராட்டத்திற்கு அரசு மதிப்பளிக்க வேண்டுமென இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

அத்துடன் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தம்மை விடுதலை செய்ய வேண்டி தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்துகின்றனர். அவர்களின் இந்த போராட்டத்துக்கு அரசு மதிப்பளித்து, அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

வன்முறையைப் புறம் தள்ளிவிட்டு சாத்வீக வாழ்க்கைக்கு காலடியெடுத்து வைக்கும் இந்தச் செயல் உலகே வரவேற்கும் என்பதில் ஐயம் இல்லை.

அரசியல் கைதிகளை, அரசு விடுதலை செய்வதற்கு சகல அரசியல் கட்சிகளும் வேறுபாடின்றி ஒத்துழைப்பு வழங்குவதோடு, இந்த நாட்டின் நிரந்தர அமைதி நிலவ அனைவரையும் ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)


## MESSAGE OF CONDOLENCE



On the death of
**Mrs. Selvarani Anthonypillai**
(Rt.Teacher - J/Kaithady Vigneswara Vidialayam)
**Mother of Mrs. C.A Thirukumar**
(Assistant Director of Education thenmaradchy Education Zone)

" Precious in the sight of the Lord is the death of his saints.
Psalm 116:15 "

Hearing the loss of your loved one, has deeply saddened us...
Our deepest sympathy to you and your family. May almighty God gives you the comfort and peace, and may the soul of your loved one rest in peace...
Our deepest and heart felt condolence to you and your family.

**ENGLISH TEACHERS**
**THENMARADCHY ZONE SCHOOLS**

(60631) (10.15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 11 . 1937
மறைவு 28 . 09 . 2014

**கனகர் சின்னராசா**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளில் நாம்
என்றும் வாழ்கின்றோம்

ஸ்ரான்லி கல்லூரி வீதி,
கச்சேரி.

குடும்பத்தினர்.

## ஈரவிழிகளின் நினைவுகளில்...

முதலாம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு



தோற்றம் 17 . 05 . 1983 — மறைவு 27 . 09 . 2014



தோற்றம் 21 . 01 . 1949 — மறைவு 30 . 09 . 2010

Dr.T.**கோபிநாத்** (J.P) — Dr.K.V.**துரைராஜா**

ஆறாத் துயரில் ஆழ்த்தி சென்று
அழியா நினைவுகளில் நிலைத்திருக்கும்
அமரர்கள் Dr.K.V.துரைராஜா, Dr.T. கோபிநாத் இனதும்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிராமணோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

இ.இராசம்மா, இ. முருகானந்ததாஸ், வாசுகி,
கோபிஷா, கோகிஸ்
T.P: 6771007567

(64034)(10)


## கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஒக்.16

ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப.4.30 மணிவரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் சைவப்புலவர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குமாகாணசபைஉறுப்பினர் பா.கஜதீபன் விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(த-ரிஷ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.T.கோபிநாத்** (J.P)

(உரிமையாளர்-அகஸ்தியர் வைத்திய சாலை & மருந்தகம், சித்த ஆயுள்வேத வைத்தியர்)

அன்னை மடியில் 17 . 05 . 1983
ஆண்டவன் அடியில் 27 . 09 . 2014

திதி: திருதியை (16.10.2015)

பாசமுள்ள தாய்க்கும், தந்தைக்கும் உயிருக்கும் உயிரான மகன் நீ. அன்பு நிறைந்த அக்காவுக்கு செல்லமான தம்பி நீ, பாசம் நிறைந்த தம்பிமாருக்கு அருமையான அண்ணா நீ, உன் பாச மலர்களிலே பூத்த அழகான மருமக்களுக்கு அன்பான பெரிய மாமா நீ, ஐயா கோபி இப்படியாக எல்லாருடைய இதயத்தையும் கொள்ளை கொண்டவன் நீ. ஆண்டு ஒன்றானாலும் இதைப்போல் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எந்நாளும் எந்நேரமும் எங்கள் இதயத்தில் இருப்பாய் கோபி. உன்னுடைய அன்பான சிரிப்பையும் உன்னையும் பார்க்க என்னுள்ளம் ஏங்குதடா மகனே. கோபி உன்னுடைய அம்மா உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று நீ வணங்கிய தெய்வங்களிடம் வேண்டுகிறேன் மகனே. உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

முதலாம் ஆண்டுத் திவசம் அவரது இல்லத்தில் இன்று (16.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடை பெற இருப்பதால் அன்புடன் அழைக்கின்றோம்

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.K.V.துரைராஜா**
(அகஸ்தியர்)

(ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர் யாழ்.போதனா வைத்தியசாலை, ஸ்தாபகர்-அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்)

அன்னை மடியில்
21.01.1949

ஆண்டவன் அடியில்
30.09.2010

திதி: சப்தமி (04.10.2015)

எங்கள் பாசமுள்ள அப்பாவே இந்தப் பூமியை விட்டு சென்று உங்களைப் படைத்தவன் உடனே சென்றுவிட்டீர்கள். எப்படி எங்களை மறந்தீர்கள் தெய்வமே. எங்கள் வீட்டுத் தெய்வமாகிய நீங்கள் என்றென்றும் எங்களுடனே இருப்பீர்கள் அப்பா. ஐந்து ஆண்டுகள் நீங்கள் இங்கில்லை, கல்வியிலே நம்முடைய வாழ்க்கையிலே நாம் ஏற்றம் பெற ஆசை கொண்டீர்கள், உங்கள் கனவுகள் மெய்ப்படஎப்பொழுதும் எங்களுக்குத் துணையாக நீங்கள் இருங்கள் அப்பா. எங்களை வழி நடத்துங்கள் எங்களுக்கு பாதுகாப்பாகவும், என்னாளும் இருங்கள். அம்மாவும் நாங்களும் உங்கள் பேரப்பிள்ளைகளும் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று சுட்டிவேரகத்து அம்பாளை மனமார வேண்டுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிராமணோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
077 100 7567

என்றும் உங்களுடைய நினைவுகளுடனே வாழும்
**குடும்பத்தினர்.**

(64035)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியைப் பாதுகாக்க கைதிகளை விடுவியுங்கள்

***சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கோரிக்கை***

யாழ்ப்பானம், ஒக். 16

நாளுக்கு நாள் அரசியல் கைதிகளின் உடல் நிலை பாதிப்படைந்து வருவதால் இவர்களின் விடுதலை தொடர்பாக அரசு நல்லிணக்க அடிப்படையில் விரைந்து செயற்பட்டு நல்லாட்சியின் மகத்துவத்தைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

நேற்று உடல் நிலை மோசமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அரசியல்கைதியின்நிலைகுறித்துக் கருத்து தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை மேலும் மோசமடைந்து செல்கிறது. நல்லிணக்க அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும். நாளுக்கு நாள் அரசியல் கைதிகளின் உடல் நிலை பாதிப்படைந்து வருகிறது. மேலும் ஒரு அரசியல் கைதி உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். அரசு இளகிய நிலையைக் கையாண்டு அரசியல் கைதிளை உடன் விடுதலை செய்ய வேண்டும். அனுராதபுரம்சிறையில் 36 கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில்இருவர்ஏற்கனவே சிகிச்சைக்காகவைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக அரசு நல்லிணக்க அடிப்படையில் விரைந்து செயற்பட்டு நல்லாட்சியின்மகத்துவத்தைகாத்துக்கொள்ள வேண்டும்–என்றார். (த–21)

## அரசியல் கைதிகள் விடயத்தில் மேலாதிக்க சிந்தனையில் அரசு

***நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் குற்றச்சாட்டு***

வவுனியா, ஒக். 16

அரசியல்கைதிகளுடையவிடுதலை விடயத்தில் நல்லாட்சி அரசு அரியணை ஏறிய பின் மேலாதிக்க சிந்தனையை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

2015 ஜனாதிபதித்தேர்தலில்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக உழைத்தனர். தமது உறவுகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படுவர் எனத் தமிழ் மக்கள் நம்பினர். பின்னர் 100 நாள் வேலைத்திட்டத்தில் விடுவிக்கப்படாதமைக்கு பொதுத் தேர்தலைக் காரணம் காட்டினர் இந்த நல்லாட்சி அரசினர். இன்று அரியணை ஏறிய பின் அவர்கள் தங்கள் பழைய மேலாதிக்க சிந்தனையை உறுதிப்படுத்தும் முகமாகச் செயற்பட்டு வருவது கவலைக்குரியதாகும்.

ஐ.நா.சபைக்கும்சர்வதேசத்துக்கும் தாம் ஒருநியாயாதிக்கவாதிகளாகக் காட்டிநிற்கும் இவர்கள் சிறைகளில் வாடும் 300 க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் அனைவரையும் பாகுபாடு இன்றி உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலர்சித்திரவதையால்கட்டாய வாக்கு மூலங்கள் பெறப்பட்ட பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையில் வாடுகின்றனர். பலர் வழக்குகளை எதிர்நோக்கப் பணவசதி இன்றி அல்லற்பட்டுவருகின்றனர். இன்னும் ஒரு தொகையினர் வழக்குகள் தாக்கல் செய்ய ஆதாரங்கள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலரது குழந்தைகள் குடும்பங்கள் பராமரிக்க ஆள்களின்றி அனாதைகளாகவிடப்பட்டுள்ளனர்.

எனவே நல்லாட்சி அரசு உண்மை எனின், இன நல்லிணக்கம் என்னும் பேச்சு உறுதியானது எனின், ஜனாதிபதியின்பால் மனிதாபிமானம் உள்ளதெனின் அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்–என்றுள்ளது. (த–21)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

09 மாதம் நிரம்பிய டோபர்மன் இன நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.

(64033) (10.17) T.P: 077 0554241

**Personal Class**

U.K இல் படித்த பட்டதாரி ஆசிரியரால் உங்களின் வசதிக்கேற்ப குறைந்த கட்டணத்தில் Spoken English with Grammar வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

(65383)(10.17)

Ronymel - 076 61 51 837


## என்னை நன்றாகப் படம் எடுத்து கூட்டமைப்பிடம் காட்டுங்கள்

***நீதிமன்ற வளாகத்தில் பிள்ளையான்***

கொழும்பு, ஒக்.16

நன்றாக படம் எடுத்து ரீ.என்.ஏ. காரர்களிடம் (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு) காட்டுங்கள், சந்தோசப்படுவார்கள் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்ட பின்னர், நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஒளிப்படம் பிடித்த செய்தியாளர்களிடமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக, கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட பிள்ளையான் நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் புதுக்கடை முதலாம் இலக்க நீதவான் நீதிமன்றின் நீதவான் கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

நீதவானின் அதிகாரபூர்வ அறையில் சட்டத்தரணிகள், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், பிள்ளையான் ஆகியோர் மட்டும் இருந்தபோது, அவரை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து திறந்த நீதிமன்றப் பகுதிக்குப் பிள்ளையான் அழைத்து வரப்பட்டபோது, அவரது சட்டத்தரணி அவருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி உங்களை இதே நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவர். அப்போது நாம் வருவோம். ஒன்றும் பயப்படத் தேவையில்லை. உறவினர்கள் சனிக்கிழமை உங்களை பார்வையிடலாம். உணவும் கொண்டு வந்து தரலாம் எனச் சட்டத்தரணி பிள்ளையானிடம் கூறினார்.

இதனையடுத்து கைவிலங்கிடப்பட்ட நிலையில் பிள்ளையான் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்துக்கு வெளியே அழைத்து வரப்பட் டார். புதுக் கடை நீதிமன்ற வளாகத்தின் பிரதான வாயிலை பிள்ளையான் அடைந்த போது அங்கிருந்த ஒளிப்படப் பிடிப்பாளர்கள் அவரைப் படம் எடுத்தனர். அப்போது, விலங்கிடப்பட்ட கைகளைச் சற்று உயர்த்தி நன்றாக படம் எடுங்கள், ரி.என்.ஏ.காரர்களுக்கு காட்டுங்கள். சந்தோசப்படுவார்கள். என்று கூறியவாறு புலனாய்வுப் பிரிவின் வாகனத்தில் ஏறிச் சென்றார். (த–வ)


**SUPER BALL**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 409

சீட்டிழுப்பு திகதி 2015.10.15

வெற்றி இலக்கங்கள்

09 34 39 45 36 A

ரூ. 30,631,600/=

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1202

சீட்டிழுப்பு திகதி 2015.10.15

வெற்றி இலக்கங்கள்

16 28 33 38 M

ரூ. 32,456,380/=

**யாழ்.நகரில் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**

**Mobile Phone Repairing Course**

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்
- தனிப்பட்ட கவனிப்பு
- Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:

- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

Oct-17 ஆம் திகதி காலை 9.00 மணி 17, 18, 19, 20 ஆகிய நான்கு தினங்களில்

Special Trainer Ganesh sir

பாடநெறிக் கட்டணம் 10000 | பதிவுக் கட்டணம் 2500

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC Hospital Road Vembadi Junction, Jaffna. 0777444225 0776131358


## அம்புலன்ஸ் மோட்டார் படகு தீவுக்கு சேவையை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,ஒக்.16

கிளிநொச்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தீவுப் பகுதிச் சேவைக்கென வழங்கப்பட்ட புதிய அம்புலன்ஸ் மோட்டார் படகு நேற்று முன்தினம் புதன்கிழமை தனது சேவையை ஆரம்பித்தது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் குறிகாட்டுவான் துறை முகத்தில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று அங்கிருந்து நோயாளி ஒருவரைக் குறிகாட்டுவானுக்கு ஏற்றி வந்த இப்படகின் சேவையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் என்.சத்தியலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் படகுக்கான நிதி உதவியை வழங்கிய கொழும்புக்கான போலந்து தூதரகப் பிரதிநிதி கென் பாலேந்திரா, திருமதி பாலேந்திரா, ஆளுநரின் இணைப்பாளர் நிகால் சமரக்கோன், ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், பிரதிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், மாகாண மேலதிக சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வேலணை பிரதேசசெயலர்திருமதிமஞ்சுளாதேவி சதீசன், வைத்திய அதிகாரி எஸ். நித்தியானந்தன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெடுந்தீவைச் சென்றடைந்த அதிகாரிகளை நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்தன், நெடுந்தீவு வைத்திய அதிகாரி எஸ். பாலச்சந்திரன் உட்பட கடற்படையினரும் பொதுமக்களும் வரவேற்றனர்.

படகினதும் அதில் பொருத்தப்பட்டுள்ள மருத்துவக் கருவிகள் வசதிகளுமாக ரூபா 4.5 மில்லியன் நிதி உதவியில் இந்தப் படகு கட்டப்பட்டது. நோயாளர்களுக்கான வசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்குமான இடைத் தூரத்தை 23 நிமிடங்களில் கடந்து விடக்கூடிய இந்தப் படகு தற்போது கடற்படையினரின் செயற்பாட்டில் இருக்கும் எனவும், சுகாதார அமைச்சின் ஊழியர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டதும் படகுச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் குறிப்பிட்ட சுகாதார அமைச்சர், எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் அனலைதீவுக்கான புதிய அம்புலன்ஸ் படகும் சேவைக்கு வரும் எனவும் தெரிவித்தார். (த–7)

## சஜினுக்கு அமைச்சுப் பாதுகாப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவிற்கு அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல் மோசடிகள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதாக சஜின் வாஸ் குணவர்தன, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்குறுதி அளித்துள்ளதைத் தொடர்ந்து இவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. சஜின் வாஸ் குணவர் தனவின்பொரளைஇல்லத்தில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன், அமைச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தீவிர பாதுகாப்பு வழங்கி வருவதாகஅதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும்

செல்வி

**அஷ்வினி அம்பிகைபகவான்**

அவர்கள் 2015 நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளை பெற்று சித்தியடைந்தமைக்காக வாழ்த்துவதோடு, அவரை பயிற்றுவித்த அதிபர் அருட்சகோதரி சகாயநாயகி மற்றும் ஆசிரியர்கள் பிரசன்னா, சங்கீதா கேதாரகௌரி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மற்றும் ஊக்குவிப்பளித்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா : K.A பவான், அம்மா : மங்களேஸ்வரி

தம்பிமார் : அபிசாந், அஷ்நாத், அஷ்ரோன்

மற்றும் உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.
இலங்கைக் கடற்பரப்பிற்குள் இழுவைப்படகு ஒன்றில் அத்துமீறி வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற் பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் 9 தமிழக மீனவர்களை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்தனர்.
குறித்த மீனவர்களை நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் அன்றைய தினமே பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-108)

## கைதிகளை

இந்தப் போராட்டத்தில் சிறைகளில் வாடும் கைதிகளை உடன் விடுதலை செய், பதவிக்கு வரும்வரை வாக்குறுதிகள் பதவி ஏற்ற பின் மௌனம் காப்பது ஏன், தாமதிக்காதே தாமதிக்காதே, கைதிகளை உடன் விடுதலை செய் , காணாமற்போனோருக்குப் பதில் கூறு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் தமிழிலும் சிங்களத்திலும் கோசங்களை எழுப்பினர்.
கடந்த 4 நாள்களாகச் சிறைகளில் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள நிலையில் இந்த நல்லாட்சி அரசு அதனைக் கண்டு கொள்ளாமல் உள்ளது. இவர்களை ஒரு வார காலத்தினுள் விடுவிப்பதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படாது விடின் பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் மதியம் வரை இடம்பெற்றது.
இதில் அரசியல் கட்சிகள், கைதிகளின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர்.
ஆர்ப்பாட்டம் இடம்பெற்றவேளை வீதியின் இரு பக்கமும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (த-101)

## கிராம

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான பிணை வழக்குகள் மீதான விசாரணையையடுத்து வழங்கப்பட்ட தீர்ப்பிலேயே, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இவ்வாறு பரிந்துரைத்திருக்கின்றார்.
அந்தப் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
யாழப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அதிக அளவில் இடம் பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் மட்டும் கடமையைச் செய்தால் போதாது. மக்களின் ஒத்துழைப்பும், அவர்களின் சமூக உணர்வும் பொலிஸாருக்கு ஒத்தாசையாக இருக்கவேண்டும். அப்போதுதான் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்லாமல் தடுக்க முடியும் என்று நீதிமன்றம் நம்புகின்றது.
இதன் அடிப்படையில், யாழ்.மேல் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் அடங்கும் வலயங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களையும், குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின் கீழ் கிராம அலுவலர்கள் பொலிஸார் போன்று கடமையாற்றுகின்ற சமாதான அதிகாரிகளாக, எழுத்து மூலம் நியமனம் செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று நீதிமன்றம் பரிந்துரை செய்கின்றது.
கிராம அலுவலர்களைப் பொலிஸ் கடமையாற்றுகின்ற சமாதான அதிகாரிகளாக அந்தந்த மாவட்டத்தின் அரச அதிபரே நியமனம் செய்ய வேண்டும் என்று குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்தச் சட்டப் பிரிவின் கீழ், இதற்கான நியமனங்களை இந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் செய்யவேண்டும்.
இத்தகைய நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர், கிராமசேவையாளர் பிரிவு தோறும், தேவையான சமாதானக் குழுக்கள், விழிப்புக் குழுக்கள், மக்கள் குழுக்கள் என்பவற்றை நியமிப்பதற்குப் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் துணையுடன் நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் பரிந்துரை செய்கின்றது.
கிராம சேவை உத்தியோகத்தர்களுக்குப் பொலிஸ் கட்டளைச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைக் கோவை என்பவற்றை விளங்கப்படுத்தி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு முடியுமானால், அவற்றை அடியோடு ஒழிப்பதற்கு அவர்களின் உதவியைப் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அனைத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் நீதிமன்றம் பரிந்துரை செய்கின்றது.
கிராம அலுவலர் பிரிவுகளில் இடம் பெறுகின்ற, பொதுக்குற்றங்கள், சிறு குற்றங்கள், கலாசார சீர்கேட்டுக் குற்றங்கள், சமூகவிரோதக் குற்றங்கள், மற்றும் மரக்கடத்தல், மணல் கடத்தல், கசிப்பு விற்பனை, ஆடுமாடு கடத்தல், போதைவஸ்து விற்பனை, விசேடமாக பாடசாலை மாணவர்களுக்குப் போதைவஸ்து விற்பனை செய்யும் சமூகவிரோதக் குற்றம் என்பவற்றைக் கட்டுப்படுத்தவும், முற்றாக இல்லாதொழிப்பதற்கும் தேவையான தகவல்களைக் கிராம சேவையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கிச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.
குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்படுகின்ற சமாதானக் குழுக்கள், விழிப்புக்குழுக்கள், மக்கள் குழுக்கள் என்பவற்றில் அங்கம் வகிக்கும் எவரும் சட்டத்தைக் கையில் எடுக்கக் கூடாது. அதற்கு அனுமதியில்லை. அவர்கள் தங்கள் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் எடுக்கின்ற நடவடிக்கைகளில், கிராம சேவையாளர் மற்றும் பொலிஸாருக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருந்து செயற்படவேண்டும் என அந்தத் தீர்ப்பில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், இந்த மாவட்டங்களில் பணிபுரியும் அனைத்து கிராம அலுவலர்கள் எனப் பலருக்கும், யாழ்.மேல் நீதிமன்றத்தினால் இந்தப் பரிந்துரை தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## ராணுவம்

கூறுவதையும் கேட்டு நாம் எதனையும் செய்ய முடியாது. நாம் இது போன்ற பல விடயங்களை கேள்விப்பட்டுள்ளோம். இந்த வகையில் முல்லைத்தீவில் காடுகள் அழித்துக் குடியேற்றங்கள் நடைபெறுவது சம்பந்தமாகவோ, கடற்படையினர், இராணுவத்தினர் பூநகரிப் பகுதியில் காணிகள் சுவீகரிக்க முயற்சிப்பதாகக் கூறுவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.
வன்னியில் காடுகள் அழிக்கப்பட்டுக் குடியேற்றம் நடைபெறுதல், பூநகரியில் பொது மக்களுடைய காணிகளைச் சுவீகரிக்க படைத் தரப்பினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பினர்.
இதற்குப் பதிலளித்த அவர்,
முல்லைத்தீவு மாவட்டத்தில் காடுகள் அழிக்கப்படுவதாகக் கூறுகின்றீர்கள். இது சம்பந்தமாகவும் உரிய தகவல்களை எழுத்து மூலம் தரும் சந்தர்ப்பத்தில் நான் மேற்கொண்டு ஏதாவது செய்யக் கூடியதாக இருக்கும்.
ஜனாதிபதியைப் பொறுத்த வரை இன்னும் காடுகளை உருவாக்க வேண்டும் என்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இத்தகைய நிலையில் யாரும் காடுகளை அழிக்க அனுமதிக்க முடியாது– என்றார். (த-86)

## ஜனாதிபதியுடன்

சிறிசேனவைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள் என்று தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இரண்டொரு தினங்களில் ஜனாதிபதியுடன் பேசி இது தொடர்பில் பதில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோர் சந்திப்பு முடிந்து புறப்படும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சிவமோகன் ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.
மேலும் அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 3 அரசியல் கைதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## தமிழ்

ரவைத் தெரிவித்துள்ளன. அத்துடன் பல்வேறு பொது அமைப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ளன.
இதேவேளை, கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 5 இந்திய மீனவர்கள் கடந்த ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த வினால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டிருந்தனர். குற்றவாளிகள் என்று இனங்கண்டவர்களையே பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தனர். முழு இந்தியாவும் கொந்தளித்தமையினால் எழுந்த அழுத்தத்தினாலேயே இந்திய மீனவர்கள் அவ்வாறு கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டனர்.
அதேபோன்று ஒட்டுமொத்த தமிழ் மக்களும் திரண்டு அழுத்தம் கொடுப்பதன் கூடாகவே பொதுமன்னிப்பில் எம்மையும் விடுவிப்பார்கள். குற்றம் செய்தவர்களையே பொதுமன்னிப்பில் விடுவித்தவர்கள், குற்றம் செய்யாத எம்மை தடுத்து வைப்பதில் நியாயம் இல்லை. எனவே எவ்வாறு இந்தியர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்களோ அதேபோன்று, எமது விடுதலைக்காகவும் எமது மக்கள் அணி திரண்டு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

## அரசின்

இன்று தொடரவுள்ளது. 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 204 தமிழ் அரசியல் கைதிகள் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளனர்.
இந்த நிலையில் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், [illegible] லிருந்து சுகத கம்லத் ஆகியோர் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டனர்.
இதன்போது நீதி அமைச்சர், இந்த வருட இறுதிக்குள் தமிழ் கைதிகள் தொடர்பான விடயத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் சகலரையும் விடுதலை செய்யும் தீர்மானத்தை தன்னால் தனித்து எடுக்க முடியாது என்றும், அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தே முடிவெடுக்க முடியும் என்பதையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.
நீதி அமைச்சரின் வாக்குறுதியை தமிழ் அரசியல் கைதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டின் தந்தையாக ஜனாதிபதியிடமே நாம் கோரிக்கை விடுகின்றோம். ஜனாதிபதிக்கே பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் இருக்கின்றது. எனவே அவர் இந்த விடயத்தில் தலையிட வேண்டும். பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யும் வரையில் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.
கைதிகளைப் பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், நீதி அமைச்சரின் வாக்குறுதியை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகளே முடிவு எடுக்கவேண்டும். அவர்களது போராட்டத்துக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் இருக்கும் - என்றார். (த-5)

## சீன இராணுவ

மற்றும் சீன இராணுவத்தினருக்கிடையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நல்லெண்ணப் பயணமாகவே சீன உயர்மட்டக்குழு கொழும்பு வந்துள்ளது.
சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் செங்டு இராணுவப் பிரதேச தளபதியான, ஜெனரல் லி சுவோசெங் தலைமையில் ஆறு அதிகாரிகளைக் கொண்ட குழுவே இலங்கைக்கு வந்திருக்கிறது.
இந்தக் குழுவினர், நேற்றுமுன்தினம் காலை, இலங்கைக் கூட்டுப் படைகளின் தளபதி எயார் சீவ் மார்ஷல் கோலித குணதிலகவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். இதையடுத்து, இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
இந்தப் பேச்சுக்களின்போது, இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்புகள் வலுப்படுத்தல், பயிற்சிகளை அதிகரித்தல் குறித்துப் பேசப்பட்டுள்ளது.
ஜெனரல் லி சுவோசெங் தலைமையிலான சீன இராணுவ உயர் மட்டக் குழுவில் மேஜர் ஜெனரல் வாங் குவா, மேஜர் ஜெனரல் சாங் ஜியான்காங், மூத்த கேணல் டு ஜுன் லோங், லெப். கேணல் லி டாவோ, லெப்.கேணல் பான் சியாவோபெங் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
ஐந்து நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் நாட்டின் பல்வேறு படைத்தளங்களுக்கும் செல்லத் திட்டமிட்டுள்ளனர். (த-வ)

## நேற்றும்

ஈடுபட்டிருந்த 4 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த ஒருவருமாக 5 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.
நேற்று முன்தினம் புதன்கிழமை, மகசின் சிறைச்சாலையிலிருந்து 6 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து ஒருவருமாக 7 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மொத்தமாக இரு நாள்களிலும் 12 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்றைய தினம் 9 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மகசின் சிறைச்சாலையில் இருந்து 8 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து ஒருவருமாக 9 பேர் நேற்றைய தினம் மாத்திரம் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மகசின் சிறைச்சாலையிலிருந்து வைத்தியசாலைக்குச் சேர்க்கப்பட்டவர்களில் இருவர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மகசின் சிறைச்சாலையில் இருப்பவர்கள், வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலைக்கும், அநுராதபுரம் சிறைச்சாலையில் இருப்பவர்கள், அநுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலைக்குமே எடுத்துச் செல்லப்படுகின்றனர். (த-5)

## மகிந்த

தியதாக மகிந்த ராஜபக்ச மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக நேற்று இரண்டாவது கட்ட விசாரணைக்காக ஜனாதிபதி ஆணைக்குழு மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்திருந்தது. நேற்றுக் காலை 8.55 மணியளவில் அவர் ஆணைக் குழுவுக்கு வருகை தந்தார்.
எனினும், ஆணைக்குழுவில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் இடம்பெற்றிருப்பதற்கு மகிந்த ராஜபக்சவின் சட்டத்தரணிகள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இது அரசமைப்புக்கு முரணானது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். இதனால், ஆணைக் குழுவின் விசாரணைகள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டன.
(த-வ)

## குற்றம்

சென்றவருமான கருணா என்று அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பிள்ளையான் கைது செய்யப்பட்டதை அடுத்து, அரசினால் கைது செய்யப்படுவேன் என்று நான் அஞ்சவில்லை.ஏனென்றால் நான் எந்தக் குற்றங்களையோ, தவறுகளையோ செய்யவில்லை. எனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்திய அமைதிப் படையினருக்கு எதிராகப் போரிடுவதற்கு, 1989 ஆம் ஆண்டு 5 ஆயிரம் ரி-56 துப்பாக்கிகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கி ஊக்குவித்திருந்தது ஐ.தே.க. அரசுதான். விடுதலைப் புலிகளை ஊக்குவித்த இதே அரசுதான் கடந்த காலத்தை மறைத்து இப்போது நல்லாட்சி என்று நாடகமாடுகிறது.
கடந்த அரசில் எனது பங்கு எவ்வாறு இருந்தது என்பது குறித்து சாட்சியம் அளிக்க நான் தயாராக இருக்கிறேன்.
கருணா குழு என்றே ஜெனிவா தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, எனது பெயர் கூறப்படவில்லை. எனது பெயரைப் பயன்படுத்திச் சிலர் குற்றங்களை இழைத்துள்ளனர்.
முள்ளிவாய்க்காலில் போர் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தபோது, நான் இந்தியாவில் தங்கியிருந்தேன். விசாரணைக்கு அழைத்தால், அதனை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன். நான் மட்டக்களப்பில் எனது தாயாருடன் அமைதியாக வாழ்ந்து வருகிறேன். உலகின் எந்தப் பகுதிக்கும் என்னால் செல்ல முடியும். ஆனால் எனது தாயாருடன் மட்டக்களப்பிலேயே இருப்பேன்-என்றார்.
(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பில் உள்ள கைதிகள் பெரும்குற்றம் புரிந்தவர்கள்

## சொல்கிறார் அமைச்சர் விஜேதாஸ

யாழ்ப்பாணம், ஒக். 16
ஆட்கொலை, குண்டுத் தாக்குதல் போன்ற பெரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தமிழ் கைதிகளே தற்போது தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, இந்த விடயம் தொடர்பில் அரசுதான் கொள்கை ரீதியிலான தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று தான் கூறிய விடயம் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் கவலையடைந்தாலும் நாட்டில் அரசியல் கைதிகள் என்னும் தரப்பினர் எவரும் இல்லை எனவும் மீளவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டவர்கள் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய 225 கைதிகள் சிறைச்சாலைகளில் தற்போது தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்களில் ஒரு பிரிவினருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு பிரிவினர் தொடர்பில் சட்ட நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.



இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் ஆட்கொலை, குண்டுத் தாக்குதல் போன்ற பெரிய குற்றச் செயல்களுடன்தொடர்புபட்டவர்கள் – என்றார்.

(த-5)

# புலிகளின் உறுப்பினரை நாடு கடத்துமாறு உத்தரவு

## கனேடிய நீதிமன்று பிறப்பித்தது

தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவரை நாடு கடத்துமாறு கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மாணிக்கவாசகம் சுரேஸ் என்பவரையே இவ்வாறு நாடு கடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. கனேடிய குடிவரவு குடியகல்வுச் சட்டங்களின் அடிப்படையில் சுரேஸை நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது என அந்த நாட்டுக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி குடிவரவு குடியகல்வுச் சட்டங்களின் அடிப்படையில் சுரேஸை நாடு கடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டு கைது செய் யப்பட்ட சுரேஸ் மேன் முறையீடுகளைச் செய்து நாடு கடத்தப்படுவதைத் தவிர்த்து வந்தார் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. சுரேஸ் உலகத் தமிழர் அமைப்பின் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-வ)

# முன்னாள் தூதுவர்கள் ஐவர் குறித்து விசாரணை

கொழும்பு,ஒக்.16
வெளிநாட்டு தூதரகங்களில் பணி புரிந்தபோது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பில் முன்னாள் இராஜதந்திர அதிகாரிகள் ஐவர் குறித்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தற்போது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி தாய்லாந்து தூதுவராகப் பணி புரிந்த சாந்த கொட்டேகொட மற்றும் பாகிஸ்தான் தூதுவராகப் பணி புரிந்த முன்னாள் விமானப் படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி ஆகியோரிடம் கடந்த 12ஆம் திகதி வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் ஜப்பான் தூதுவராகப் பணி புரிந்த முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட மற்றும் ஆஸ்திரேலியத் தூதுவராகப் பணி புரிந்த முன்னாள் கடற்படை தளபதி திஸர சமரசிங்க ஆகியோரிடம் நேற்று முன்தினம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று ஜப்பானுக்கான இலங்கைத் தூதரகத்தில் பணிபுரிந்த ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜெகத் குமார விஜேசிறியிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த-வ)

# கைதிகள் விவகாரம் இனப் பாகுபாடாகும்

## சாடுகிறது மாக்சிச – லெனினிசக் கட்சி

யாழ்ப்பாணம், ஒக். 16
இலங்கையில் ஏற்கனவே தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக அரசியல் கைதிகள் சிறையிலும் தடுப்பு முகாம்களிலும் புனர்வாழ்வு நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை ஊடாகவும், பொதுமன்னிப்பு அடிப் படையிலும் விடுதலை செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள். அத்தகையவர்களில் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் வேறு உயர் நிலைகளிலும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் தேசிய இனப் பிரச்சினை காரணமாக அரசியல் கைதிகள் மட்டும் நீண்டகாலமாகச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டு வருவது இன அடிப்படையிலான பாகுபாடும் அநீதியுமாகும் என புதிய ஜனநாயக மாக்சிச – லெனினிசக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில்;
நல்லிணக்கத்துடன் நல்லாட்சி நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் இன்றைய மைத்திரி – ரணில் அரசு சிறைகளில் இருந்து வரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் முன்னைய ஆட்சியினர் போன்று அக்கறையின்றி இருந்து வருவதன் விளைவே மேற்படி சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகள் தம்மை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி திங்கள் முதல் முன்னெடுத்து வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம். அது முற்றிலும் நியாயமானது.

அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை எமது கட்சி முழுமையாக ஆதரிக்கிறது. அரசு இந்த விடயத்தில் உடன் தலையிட்டு அவர்களது விடுதலைக்கான காலவரையறையை வழங்கி விடுதலைக்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீண்டகால அரசியல் கைதிகளும் அவர்களது குடும்பங்களும் உறவுகளும் உடல் உளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகி நிற்கும் அவல நிலையையும் காணமுடிகின்றது. அத்துடன் அவர்களது அடிப்படை மனித உரிமைகளும் மீறப்பட்டு வருவதாகவே சுட்டிக்காட்டப் படுகிறது. எனவே இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செல்வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ரி6)

# 2,54,690 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல்

## *தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்*

கடந்த 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2 லட்சத்து 54 ஆயிரத்து 690 மாணவர்கள் 70 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். பரீட்சைகள் ஆணையாளர் டபிள்.யூ.எம்.என்.கே.புஸ்பகுமார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்துவதற்குக் குறைந்த பட்சம் 70 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடுப்பாட்டத் தொடர்

தபால் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட தபால் திணைக்களம் வடமாகாண ரீதியாக நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## யங்ஹென்றிஸ் இலகு வெற்றி

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.கழகத் தொடர்***

கரணவாய், ஒக். 16

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத்தொடர் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***மைலோ கிண்ணத்தொடர்***

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் தீவக லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. குறித்த தொடரில் 15 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

***கலைமதி வி.கழகத் தொடர்***

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

***வவுனியா உதைபந்தாட்டத் தொடர்***

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து அல் - இக்பால் அணி மோதவுள்ளது. (ம-23)

# இன்று பலப்பரீட்சை

## சென். பற்றிக்ஸ் - மானிப்பாய் ஏஞ்சல்
## உடுவில் மகளிர் - திருக்குடும்பக் கன்னியர்



சென்.பற்றிக்ஸ்



ஏஞ்சல்



உடுவில் மகளிர்



திருக்குடும்ப கன்னியர்மடம்

யாழ்ப்பாணம், ஒக். 16

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் 17 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர் மட அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவுள்ளது.

கடந்த வருடத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையால் முன்னெடுக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியே கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது. அதேபோல் நடப்பு வருடத்திலும் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் பட்சத்தில் சொந்தத் தொடரில் கிண்ணம் வென்ற பெருமை மீண்டும் அந்த அணிக்கும் கிடைக்கும்.

மிக அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியால் முன்னெடுக்கப்பட்ட தொடரில் பெண்கள் பிரிவில் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது உடுவில் மகளிர் கல்லூரி. எனவே இன்றைய தினம் நடைபெறவுள்ள இறுதியாட்டத்திலும் திருக்குடும்ப கன்னியர் மட அணியை வீழ்த்தி மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்ற உடுவில் அணி முனைப்புக் காட்டும்.

ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தனது அரையிறுதியில் யாழ். இந்துக் கல்லூரியை வீழ்த்தியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி தனது அரையிறுதியில் யாழ். மத்திய கல்லூரியின் அணியை வீழ்த்தியும் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தன. அதேபோல் பெண்கள் பிரிவில் திருக்குடும்ப கன்னியர் மட அணி தனது அரையிறுதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியையும் உடுவில் மகளிர் அணி தனது அரையிறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியும் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தன.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் சபாநந்தும் கௌரவ விருந்தினராக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாட சாலையின் பணிப்பாளர் சாம் ராஜசூரியரும் கலந்துகொள்ளவுள்ளனர். (23)

## சென்.ஹென்றிஸுக்கு முழுமையான வெற்றி

வலி.வடக்கு, ஒக். 16

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 14வயது, 16 வயது, 18 வயது. 20 வயது பிரிவினருக்கான சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் சென்.ஹென்றிஸ் முழுமையான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.



சென்.ஹென்றிஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில்; 2:0 என்ற கோல் கணக்கிலும் தொடர்ந்து இடம்பெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் ஹென்றிஸ் 1:0 என்ற கோல் கணக்கிலும் மூன்றாவதாக இடம்பெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென். ஹென்றிஸ் 1:0 என்ற கோல் கணக்கிலும், இறுதியாக இடம்பெற்ற 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென்.ஹென்றிஸ் 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றது. (ம-86)

## கூடைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது. (ம-23)

## வெளியேறியது உடுப்பிட்டி யுத், தொடர்கிறது றெட்றேஞ்சர்ஸ்

கரணவாய் ஒக் 16

சமரபாகு நியூட்டன் விளையாட் டுக் கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் வாழ்வா? சாவா? ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கான வாய்ப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டது மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பட்டி யுத் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. தோல்வியடையும் அணி தொடரில் இருந்து வெளியேறவேண்டும் என்பதால் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின.

உடுப்பிட்டி யுத் அணியின் பின்வரிசை பலவீனமாக இருந்ததனால் முதல்பாதி முடிவதற்குள் மூன்று கோல்களை அடித்து தமது வெற்றியைகிட்டத்தட்ட உறுதி செய்தது றேஞ்சர்ஸ்.

தமக்கே உரிய போராட்டப் பாணியில் இரண்டாம் பாதியில் வீறுகொண்டெழுந்தது உடுப்பிட்டி யுத். 15ஆவ்து மற்றும் 17 ஆவது நிமிடங்களில் உடுப்பிட்டி யுத் அணியின் ஜோன்சன் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்தார். இருப்பினும் றேஞ்சர்ஸிடம் இருந்து வெற்றியைப் பறித்தெடுக்க முடியவில்லை. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றெட்றேஞ்சர்ஸ். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் காண்கிறது தீவுகள்
## சுழலினால் அசத்துகிறார் கேரத்





மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் கருணாரத்ன மற்றும்சந்திமல் இருவரும் மூன்றாவது இலக்குக்கு இணைப்பாட்டமாக 238 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர். தீவுகளுக்கு எதிராக மூன்றாவது இலக்குக்காக இலங்கை சார்பாக விளாசப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டமாக இது பதியப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் சங்கா, மகெல இருவரும் 162 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தமையே சாதனையாக உள்ளது. (ம)

இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின்முதலாவதுஆட்டத்தின்இரண்டாம் நாளான நேற்று இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 484 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தீவுகள் நாள் முடிவில் 66-2.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க கருணாரத்னவின் சதத்தின் உதவியுடன் முதலாம் நாள் முடிவில் 250-2 என்ற நிலையில் இருந்தது. கருணாரத்ன 135 ஓட்டங்களுடனும் சந்திமல் 72 ஓட்டங்களுடனும்இரண்டாம்நாளுக்காக களமிறங்கினர். 150 ஓட்டங்களை நிறைவுசெய்தார் கருணாரத்ன. சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் சந்திமல். இணைப்பாட்டமாக 238 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 186 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. மறுமுனையில் சதம்கடந்தார் சந்திமல். மத்தியூஸ் சிறிது அடித்து விளையாடி 65 பந்துகளில் 48 ஓட்டங்களைக் கடந்து ஆட்டமிழந்தார். சந்திமலும் 151 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப பின்வரிசை வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. முடிவில் 484 ஓட் டங்ளைக் குவித்தது இலங்கை.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிஸ்கு 4 இலக்குகளையும் ரெய்லர் 2 இலக்குகளையும் றோச், கோல்டர், கபிரியேல், சாமுவேல்ஸ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகளுக்குஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. அந்த அணியின் ஆரம்ப வீரரான பிரீத்வைட் கேரத்தின் சுழலில் பவிலியன் திரும்பினார். சக ஆரம்ப வீரர் கோப்பையும் வீழ்த்த தவறவில்லை கேரத். நாள் முடிவில் தீவுகள் 66-2. பிராவோ 15 ஓட்டங்களுடனும் சாமுவேல்ஸ் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ம)

## வவுனியா உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 16

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடர் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த திங்கட் கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் புதன் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சண் சைன் அணியை எதிர்த்து ஈஸ்வரன்அணிமோதிக்கொண்டது. இதில் ஈஸ்வரன் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் பி அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புதன்கிழமைஇடம்பெற்றஆட்டத்தில் எ.பி.சி. அணியை எதிர்த்து அல் மாதர் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை நீடித்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் எ.பி.சி. அணி 4:3என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)



# அச்சுறுத்துகிறார் குக் இங்கிலாந்து பதிலடி



பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் சதம் கடந்ததன் மூலம் ஆசிய மண்ணில் அதிக சதங்களை விளாசிய (8 சதங்கள்) தென்னாபிரிக்க முன்னாள் வீரர் கலீஸின் சாதனையை சமன் செய்துள்ளார் குக்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட்டின் மூன்றாம் நாளான நேற்றைய தினத்தில் இங்கிலாந்து 290-3 (பாகிஸ்தான் 523-8) என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மலிக் இரட்டைச் சதத்தையும் சபிக் சதத்தையும் விளாச 523-8 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது பாகிஸ்தான். பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 56-0 என்ற நிலையில் இருந்தது. குக் 39 ஓட்டங்களுடனும் மொ யீன் அலி 15 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். தொடர்ந்தும் இணைப்பாட்டம் நீடித்தது. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டிப்பிடித்தது இங்கிலாந்து. அணியின் ஓட்ட எண்ணிக்கை 116ஆக இருந்தபொழுது 35 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது மொயீனின் ஆட்டம். குக்குடன் பெல் இணைய அரங்கேறியது மற்றுமொரு அற்புத இணைப்பாட்டம். சதம் கடந்தார் குக். அரைச்சதம் கடந்தார் பெல். இணைப்பாட்டம் மேலும் வலுப்பெற்று 250 ஓட்டங்களை இங்கிலாந்து கடந்துவிட்டது இலக்கு மட்டும் விழுந்த பாடில்லை. ஒருவாறு பெல்லின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 199 பந்துகளில் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பெல். வூட் வந்த வேகத்தில் பவிலியன்திரும்பநாள் முடிவில் இங்கிலாந்து 290-3. குக் 168 ஓட்டங்களுடனும் ரூட் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ் 2 இலக்குகளையும் இம்ரான் கான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.(ம)

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் ஹொக்கி அணிக்கு கல்லூரிச் சமூகத்தால் கௌரவம்

மாங்குளம், ஒக். 16

தேசியமட்ட கொக்கித் தொடரில் நான்காவது இடத்தைப் பெற்றுக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் கொக்கி அணி குறித்த பாடசாலையால் கௌரவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி செபமாலை தேவராசா தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். (ம-422)

## யங்ஹென்றிஸ், இளைஞர் அணிகளுக்கு வெற்றி

கரணவாய், ஒக். 16

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது. இந்தத்தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

**யங்ஹென்றிஸ் எதிர் விண்மீன்**

முதலாவதாகஇடம்பெற்றஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்டத்தின்13ஆவதுநிமிடத்தில்யங்ஹென்றிஸ் சார்பாக முதல்கோல் பதிவானது. அந்தக் கோலே முதல் பாதியின் முடிவுக்கோலுமாக 1:0 என முடிந்தது முதல்பாதி. இரண்டாம்பாதி ஆரம்பமாகி அடுத்த நிமிடமே பதில்கோலை அடித்தது விண்மீன். 18ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் ஞானம் மீண்டும் ஒரு கோலை விளாச 2:1 என்று வெற்றிபெற்றது யங் ஹென்றிஸ்.

**இளைஞர் எதிர் சென்அன்ரனிஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில்பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல்பாதியின் முடிவுவரை எந்தக்கோலும் பதியப்படவில்லை. இரண்டாம் பாதியில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவு செய்தது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம். (ம-108)

## அரையிறுதிக்குள் நுழைந்தது றோயல்



மாங்குளம், ஒக். 14

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரொன்று யாழ். மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பொம்மர்ஸை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்றது ஊரெழு றோயல்.

ஆட்டத்தின் ஒன்பதாவது நிமிடத்தில் றோயல் அணியின் சோபன் தனது அணிக்கான கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். கிடைத்த வாய்ப்புக்களை பொம்மர்ஸ் தவறவிட அந்தக்கோலே முதல் பாதியின் முடிவுக்கோலுமானது. இரண்டாம் பாதியின் 28ஆவது நிமிடத்தில் றோயல் அணியின் கய கோபன் மற்றொரு கோலை விளாச முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது றோயல்.

(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளது


வங்கியியல் கற்கைநெறிகள்
IABF & DABF,
(Tamil & English Medium)

Chartered
Executive Level,Business level
(Tamil & English Medium)
அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்
விரிவுரைகள் 17-10-2015 7.00(sat)

Further Details
JAFFNA COLLEGE
Undergraduate Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382/021229149

விசேட கருத்தரங்கு
Oct-31 இல் நடைபெறவுள்ள
பதிவாளர் சேவை போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
விரைவில் நடைபெறவுள்ள
வடமாகாண பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சை
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
ஆரம்பம்: 18.10.2015
Sun 9.00 - 4.00 pm
நாவலர்
T.P: 077 469 8695

# மெஸ்ஸிக்கு சிறை?



ஆர்ஜென்ரினா அணியின் தலைவரும் பார்ஸிலோனா அணியின் தலைவருமான மெஸ்ஸிக்கு வரி ஏய்ப்பு வழக்கில் 22 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்க வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மெஸ்ஸி தனது புகைப்படங்களை பயன்படுத்திக் கொள்ள உருகுவே, சுவிட்சர்லாந்து நாடுகளின் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியதில் கிடைத்த வருவாயில் கிட்டத்தட்ட 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரி ஏய்ப்பு செய்ததாகவும் இதில் அவரது தந்தையும் உடந்தை எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு தற்பொழுது மெஸ்ஸிக்கு எதிராக தீர்ப்பாகும் நிலையில் உள்ளது. அவ்வாறு மெஸ்ஸியும் அவரது தந்தையும் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் 22 மாதங்கள் சிறைத் தண்டனையும், தலா 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையும் அபராதமும் விதிக்க வாய்ப்புள்ளது. (ம)

## கண்ணீர்அஞ்சலி



லங்கா புத்தகசாலை முகாமையாளரின் அன்புத் தந்தையும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையின் முன்னாள் கணக்காளருமாகிய

**தம்பிராசா கயிலாசபிள்ளை**

(15.10.2015) காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லங்கா புத்தகசாலை / ஸ்ரீலங்காபுத்தகசாலை உரிமையாளரும், ஊழியர்களும்.**

(64042) (10.17)

## கண்ணீர்அஞ்சலி

**தம்பிராசா கயிலாசபிள்ளை (கனகசபாபதி)**

(ஓய்வுபெற்ற நில அளவை படவரைஞர் (D.O.A) நில அளவைத் திணைக்களம், அனுராதபுரம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.)



தோற்றம் 27.03.1931 — மறைவு 15.10.2015

துணைவி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.221, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா கயிலாசபிள்ளை (கனகசபாபதி) ஓய்வு பெற்ற நில அளவை படவரைஞர் D.O.A நில அளவைத் திணைக்களம், அனுராதபுரம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்) நேற்று (15.10.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிராசா-முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி பராசக்தியின் அன்புக் கணவரும், சந்தியா (கனடா), சதீஸ் (முகாமையாளர் லங்கா புத்தகசாலை- கொழும்பு-12), கௌசியா (ஆசிரியை - யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்-குருநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரமோகன், வசந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும், சுவேதா (கனடா), சகானா ஆகியோரின் பேரனும், இராஜ கோபால், விஜய கோபால், காலஞ்சென்றவர்களான இரட்ணகோபால், பத்மாவதி, கமலாவதி ஆகியோரின் சகோதரரும், யோகேந்திரம், கலேசநாதன், கனகாம்பிகை, குணவதி, சரோஜினிதேவி காலஞ்சென்றவர்களான வேலாயுதம், சோமசுந்தரம், முருகேசு தெய்வநாயகி, பராசக்தி ஆகியோரின் மைத்துனரும், பிரதாபனின் மாமனும், மயூரன், ஐங்கரன், குகன், தீபசாந்தி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 221, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் இல்லத்தில் வைக்கப்பட்டு 16.10.2015 மதியம் ஒரு மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.221,
3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 021 221 9156
0777 319475

(C/15918) (10.17)

போட்டிப்பரீட்சை கருத்தரங்குகள்
வடமாகாண ஆசிரியர் தெரிவுக்கு
பிரிவு I
சனி 10.00 முதல் 2.00 மணிவரை
பிரிவு II
திங்கள், புதன் பி.ப 5.00 முதல் 7.00 மணிவரை
அதிபர் சேவை தரம் - 3
பிரிவு I
ஞாயிறு 10.00 முதல் 4.00 மணிவரை
பிரிவு II
திங்கள், செவ்வாய் புதன் பி.ப 5.00 முதல் 7.00 மணிவரை
பதிவாளர் பரீட்சைக்கு
சனி, ஞாயிறு 10.00 முதல் 3.00 மணிவரை
T.P: 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி

# மத்திக்கு மூன்றாமிடம்



யாழ்ப்பாணம், ஒக். 16

மானிப்பாய்ஏஞ்சல்சர்வதேசபாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 17 வயதுக்கு உட்பட்ட இருபால் அணிகளுக்கும் இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

மானிப்பாய்ஏஞ்சல்சர்வதேசபாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 49:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தினை தனதாக்கியது. (ம-23)

உயர்தரத்தின் பின்னர்
இலவச கருத்தரங்கு
CMA
Certified Management Accountants
நெல்லியடியில் 17/10/15 (சனிக்கிழமை) காலை 10.00மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில்
யாழ் நகரில் 18/10/15 (ஞாயிறு) காலை 10.00மணிக்கு YMCA மண்டபத்தில்
பங்குபற்றுதலுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்கும் 077-3830671
இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம்
29/24, Visakha Rd, Colombo-04.

# விடைபெற்றார் சகீர் கான்



சர்வதேச மற்றும் முதற்தர கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர் கான் நேற்று அறிவித்துள்ளார். அதேநேரம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் விளையாட திட்டமிருப்பதாவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு தொடர்பாக சகீர்கான் தெரிவித்ததாவது:– 'தொடர்ச்சியாக திறமையான பந்துவீச்சினை வெளிப்படுத்த முடியாதது வருத்தமளிக்கிறது. என்னுடன் விளையாடிய அனைத்து சக வீரர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றது மறக்க முடியாத அனுபவம். கடந்த 20 ஆண்டுகளாக கிரிக்கெட் மட்டுமே எனது வாழ்க்கையாக இருந்தது. அது ஒன்றே எனக்குநன்றாகதெரிந்தவிடயம். அழகான, அற்புதமான நினைவுகளுடன் கிரிக்கெட் வாழ்க்கைப் பயணத்தில் இருந்து விடைபெறுகிறேன்.' என்றார். (ம)

உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை உடனுக்குடன் அறிய...!
WWW. ONLINEUTHAYAN.COM
தாயகத்திலிருந்து தமிழருக்கான ஒரு தளம்.
அரசியல் செய்திகளுடன் மட்டும் நின்றுவிடாமல் பல சுவாரசியமான வகைகளுடன் ஒன்லைன் உதயனின் புதிய அறிமுகங்கள்
உலக விளையாட்டுச் செய்திகள் மட்டுமல்லாது, தாயக வீரர்களின் சாதனைகளையும் உலகறியச் செய்யும்
சுவாரசியம், வினோதம், அறுசுவை, ஆரோக்கியம் மற்றும் ஆன்மீகத்துடன் உலகை வலம் வரும்
தொழிநுட்பம், கணினி, செல்பேசி பற்றித் தெரிந்துகொள்ள
சினிமாச் செய்திகள் , புதினங்கள் பார்ப்பதற்கு
உலகை வலம் வரும் உதயனின் இணையக் குரல்
www.uthayanradio.com
இன்னும் பல, ஒன்லைன் உதயனின் பாகங்கள் வாசித்துக்கிட்டேயிருக்கலாம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.